# மருமகள்

"லக்ஷ்மி"

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர் : : சென்னை-600 004
தொலைபேசி : 4943074

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | டிசம்பர், 1984 |
| இரண்டாம் பதிப்பு | : | டிசம்பர், 1985 |
| மூன்றாம் பதிப்பு | : | ஜூன், 1992 |
| நான்காம் பதிப்பு | : | ஜூலை, 1995 |

உரிமை : டாக்டர் கே. மகேஸ்வரன்

விலை. ரூ. 30-00

20242
3654781

அச்சிட்டோர் :
சப்தஸ்வரம் பிரிண்டர்ஸ்
சென்னை-600 004

# பதிப்புரை

பல்வேறுபட்ட கலாச்சாரங்களும் பழக்க வழக்கங்களும், மதங்களும் நிறைந்த நாடு நம் பாரத நாடு. அதன் ஒருமைப்பாட்டைக் காக்க ஒவ்வொருவரிடமும் சகிப்புத் தன்மையும் ஒருமைப் பாட்டு உணர்ச்சியும் அவசியம் தேவை. நாடு ஒற்றுமையுடன் இருக்க ஒவ்வொரு வீடும் ஒற்றுமையாக இருப்பது மிக மிக அவசியம். பல்வேறு குண நலன்களைக் கொண்ட மூன்று மருமகள்களைக் கொண்ட கூட்டுக் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளையும் அவற்றைப் புதிதாக வந்த மருமகள் சுகந்தி எவ்வாறு சமாளிக்கிறாள் என்பதையும் வெகு சுவையாக விவரிக்கிறது இந் நூலில் அடங்கியுள்ள மருமகள் என்ற முதல் நாவல்.

ஊமையாகப் பிறந்துவிட்ட காரணத்தால் தன் வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்ட ஒரு அவலத்தைப் பிறருக்கு உணர்த்த முடியாமல் உணர்ச்சிக் கடலில் உழன்று தத்தளிக்கிறாள் ஒரு அபலை. அவள் ஊமையே தவிர, உண்மை ஊமையல்ல; அது சமயம் வரும்போது தன்னை வெளிப்படுத்திக் கொண்டுவிடும் என்பதை உணர்த்துவதுதான் உண்மை ஊமையல்ல என்ற இரண்டாவது நாவலின் கதை.

தன்னுடைய மற்ற நூல்களைப் போல் தொடர்ந்து இந்த நூலையும் வெளியிட அனுமதி தந்த ஆசிரியை அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரியதாகும்.

வே. சுப்பையா
பூங்கொடி பதிப்பகம்

# 'லக்ஷ்மி'யின்
# 'பூங்கொடி' வெளியீடுகளில் சில...

| | | |
|---|---|---|
| ஒரு காவிரியைப் போல... (சாகித்ய அகடமி பரிசு பெற்ற நூல்) | 56 | 00 |
| பெண் மனம் (தமிழ்நாடு பரிசு பெற்ற நூல்) | 30 | 00 |
| அடுக்கு வீடு | 75 | 00 |
| அரக்கு மாளிகை | 100 | 00 |
| பெயர் சொல்ல மாட்டேன் | 23 | 00 |
| ஒரு சிவப்பு பச்சையாகிறது | 34 | 00 |
| கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி | 18 | 00 |
| கணவன் அமைவதெல்லாம் | 35 | 00 |
| கழுத்தில் விழுந்த மாலை | 25 | 00 |
| கதவு திறந்தால் | 36 | 00 |
| இரண்டாவது தேனிலவு | 16 | 00 |
| வடக்கே ஒரு சந்திப்பு | 15 | 00 |
| நிகழ்ந்த கதைகள் | 42 | 00 |
| அத்தை | 28 | 00 |
| நியாயங்கள் மாறும்போது | 40 | 00 |
| மறுபடியுமா? | 38 | 00 |
| இன்றும் நாளையும் | 40 | 00 |
| பவள மல்லி | 30 | 00 |
| உறவின் குரல் | 25 | 00 |
| வனிதா | 27 | 00 |
| ரோஜா வைரம் | 17 | 00 |
| நல்லதோர் வீணை | 33 | 00 |
| வசந்திக்கு வந்த ஆசை | 26 | 00 |
| புதை மணல் | 25 | 00 |
| ஊன்றுகோல் | 25 | 00 |
| மரகதம் | 16 | 00 |
| நாயக்கர் மக்கள் | 100 | 00 |

20242
365478

## மருமகள்

**வா**யிற்படியில் விரிவாகப் பாவப் பட்டிருந்த சிமெண்டுத் தரைமீது செம்மண் கரைகட்டிய பெரிய மாக்கோலம். வாயிற்படி முகப்பில் மாவிலைத் தோரணம் என்ற அலங்காரத்தில் அபிராமி இல்லம், அந்த வீட்டின் மூன்றாவது மருமகளுக்கு வரவேற்பு தரத் தயாராகி விட்டிருந்தது.

முன்னறை இருக்கையில் இருந்து எழுந்த சரவணன், சன்னல் அருகே வந்தார். திரைச் சீலையை மெல்ல விலக்கி முன்பக்கம் பார்த்தார்.

கூர்க்கா கேட்டை அகலமாகத் திறந்து வைக்க பரபரப்பதைக் கண்டார்.

அவர்கள் வீட்டு அம்பாசிடர் மலர் மாலை அலங்காரத்துடன் தேன்நிலவுக்குப் போயிருந்த மணமக்களை சுமந்து கொண்டு விமான நிலையத்தில் இருந்து வந்து நின்றது.

சமையலறையில் மேற்பார்வை செய்து கொண்டிருந்த கமலா ஈரமாகிவிட்டிருந்த தன் கைகளைத் துவாலையில் அவசரமாகத் துடைத்துக் கொண்டாள். பூஜை அறையில் தயார்ராக இருந்த குத்துவிளக்கின் திரியை நிமிண்டி சரி செய்துவிட்டு, ஒரு கத்தை ஊதுபத்தியைக் கொளுத்தி, வெண்கல பானையின் தலையில் சொருகிவிட்டு வெளியே ஓடி வந்தாள்.

"அனு ஆரத்தி தட்டை எடுத்துகிட்டு வாசல் பக்கம் வா—அவங்கள்ளாம் வந்துட்டாங்க!" ஓங்கி குரல் கொடுத்தாள்.

கைகழுவும் பீங்கான் மேல் சுவற்றில் தொங்கிய கண்ணாடியில், கடைசி முறையாகத் தனது ஒப்பனையை நோக்கிக் கொண்டு நின்ற அனு, கோபத்துடன் பற்களைக் கடித்தாள்.

''தான்தான் வீட்டுக்கே ராணி என்று வந்தவளுக்குக் காட்ட வேண்டாமா? அதான் காலையிலிருந்து அதிகாரம் ஆள் பறக்குது!'' தனக்குள் முணுமுணுத்தபடி முக்காலி மீது தயாராக வைக்கப்பட்டிருந்த ஆரத்தித் தட்டை எடுத்துக்கொண்டு வாயில் பக்கம் வந்தாள்.

ஒரு வெற்றிலைமீது கற்பூரத்தைக் கொளுத்தி, ஆரத்தி நீரில் மிதக்கவிட்ட கமலா, உள்ளே வர முயன்ற புதுமணத் தம்பதியரை சற்று நிற்க வைத்து, ஆரத்தியைச் சுற்றி மஞ்சள் நீரை விரலால் தொட்டு புது மருமகள் நெற்றியிலும் தன் மைத்துனன் நெற்றியிலும் பொட்டு வைத்து திருஷ்டி கழித்தாள்.

''வலது காலை உள்ளே வச்சு வாம்மா!'' பற்கள் அனைத்தும் தெரிய மெல்லச் சிரித்தபடி உத்தரவு கொடுத்தாள்.

அலங்காரத்தில்—கழுத்தை மறைத்த பூமாலைகளுடன், மணவறையிலிருந்தபோது சுகந்தியின் முழு அழகையும் அனுவால் கண்டுகொள்ள இயலவில்லை. மேலும் மூத்த மருமகள் கமலா அவளை நாள் முழுவதும் வேலை வாங்கிக் கொண்டிருந்தாள்.

''அனு! வந்தவங்களை கவனி. எல்லாருக்கும் சாதம் வந்ததான்னு பெண்கள் பந்தியை கவனிச்சுட்டு வா. வெற்றிலைப்பாக்குத் தட்டை எடுத்து மேசை மேலே எல்லார் கண்களிலும் படும்படி வை. வரவேற்க வந்தவங்க எல்லாருக்கும் மறக்காமல் தேங்காய் பழம் கொடுத்து அனுப்பு. சின்னத் தவறைக் கூடப் பின்னாலே பெரிய தாக்கி பேசிடுவாங்க'' என்று கட்டளையிட்டுக் கொண்டிருந்தாள் கமலா. அதனால், அந்த அமர்க்களத்தில் மணப்பெண்ணைத் தூண்டித் துருவிப் பார்த்து அவளால் தன்னுள் கணிப்பு செய்து கொள்ள இயலவில்லை.



பட்டுச் சேலையும், கழுத்து கொள்ளாத நகையும், தலையலங்காரமும், பூமாலையுமாக குழல் விளக்கிலே எல்லா மணப்பெண்களும் அழகாகத்தான் தெரிவாங்க. பகல் வேளையிலே, சாதாரண சேலையிலே, ஒப்பனை இல்லாத போதுதானே உண்மை வேஷம் தெரியும் என்ற அசட்டை அவளுக்கு.

இதுவரை அந்த வீட்டில் அவள்தான் அழகான மருமகளாக வளைய வந்து கொண்டிருந்தாள்.

மூத்தவள் கமலா மாநிறம். கொஞ்சம் லேசாக தடித்து விட்ட உடல்வாகு. எஸ். எஸ். எல். சி. வரை கூட எட்டிப் பார்க்காதவள். ஒப்பனைகள் செய்து கொண்டு மினுக்கத் தெரியாத பத்தாம்பசலி.

இளைய மருமகளாக அந்த வீட்டுக்குள் அனு வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. அவளுக்கு தன் அழகைப் பற்றி உள்ளூர ரொம்பவே பெருமை.

பெரிய மனிதர் வீட்டுப்பெண் என்ற அகந்தையோடு' தான் ஒரு பட்டதாரி என்ற கர்வம் வேறு.

நகத்தில் அழுக்குப் பட்டுவிடக் கூடாது என்று, வீட்டு வேலைகளைச் செய்ய அஞ்சி, வேலைக்காரர்களை ஏவிய படி மேற்பார்வை செய்து கொண்டு அவள் வளைய வருவது வழக்கம். ''வேலைக்காரர்களையே நம்பிக்கிட்டு நாம இருக்கக் கூடாது. சமையலறையில் சேலைத் தலைப்பை இழுத்துக் கட்டிக்கிட்டு நாமும் ஒரு கை கொடுத்து உதவத் தெரிஞ்சுக்கணும். நம்ப மாமனாருக்கு வீட்டுப் பெண்கள் சோம்பேறியாகக் காரில் கடைத் தெருவுக்குப் போவதும், சிநேகிதிகளுடன் தொலைபேசியில் மணிக்கணக்கா வம்பு பேசுவதும் பிடிக்காத சங்கதிகள் அவர் ரொம்ப கோபக்காரர். மாமியார் மறைவுக்குப் பிறகு இந்த வீட்டின் நிர்வாகத்திலே அவர் ரொம்பவும் கருத்தா இருக்கார்'' அனு மருமகளாக அங்கு வந்த அன்றே ஓரகத்தி உபதேசித்து விட்டிருந்தாள்.

வீட்டின் மூத்த மருமகள் என்ற மதிப்பை சரவணன் அவளுக்குப் பூரணமாகத் தந்துவிட்டிருந்தார்.

இரும்புப் பெட்டி சாவிக்கொத்து அவளது இடுப்பில் தொங்கியது.

வீட்டு நிர்வாகத்திற்கு ஆலோசனை கொடுப்பவர் மாமனார்தான் என்றாலும், அதிகாரம் கமலாவின் கையிலிருந்ததை அனு வெறுத்தாள். ஆனால், வெளிப் பார்வைக்கு ஓரகத்தியுடன் ஒத்துப் போவது போல நடித்துக் கொண்டிருந்தாள். உள்ளூரக் கமலா மீது மட்டற்ற கசப்பு; பொறாமை.

அதே நேரம், தன் முன்பு அவளது அதிகாரம் செல்லு படியாகாது என்று மனதிற்குள் ஒரு குரூரமான திருப்தி.

தனது அழகையும், படிப்பையும் பற்றி பெருமைப் பட்டுக் கொண்டிருந்த அனுவுக்கு ஒரு பெரும் திகைப்பு.

மணவறையில் புகைமண்டலத்திலே மாலைகளுடன் தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்த சுகந்தியா இவள்.

வலது காலை உள்ளே எடுத்து வைத்து கணவனுடன் வீட்டுக்குள் புகுந்த புது மருமகளைப் பார்த்துப்பிரமித்துப் போனாள்.

கணவனை விட உயரத்தில் சிறிது குறைவாக—கொடி போன்ற தோற்றத்தில் தங்க நிறத்திலே...மேனியில் துவண்ட அமெரிக்கன் நைலான் புடவையில்...கனவு கன்னி போல பார்க்க வெகு அழகாக இருந்தாள் சுகந்தி.

"எல்லாரைக் காட்டிலும், வீட்டுக்கு வந்திருக்கும் புது மருமகள்தான் ரொம்ப அழகு. பச்சைக்கிளி போல ஒரு பெண்ணை சின்னய்யா பிடிச்சுட்டாரே!"

"இது சின்ன ஐயா பிடிச்ச கிளி இல்லேப்பா...பெரியவர் பல இடங்களில், பெண்களைப் பற்றி விசாரித்து,



ஜாதகப் பொருத்தம் பார்த்து, குல தெய்வத்துக்கிட்ட பூ கட்டி வைச்சு தேர்ந்து எடுத்த மருமகள். சின்ன அய்யாவின் யோகம், அப்படி ஒரு பச்சைக் கிளியா பெண்டாட்டி அமைஞ்சி போச்சு!"

தன் பின்னால் நின்ற வேலையாட்கள் கிசுகிசுத்ததை கேட்ட அனு, கோபத்தில் பொங்கிப் போனாள்.

அந்த வீட்டுப் பிள்ளைகள் மூவரும், தாங்களாகப் பெண்ணைப் பார்த்து, தேர்ந்து எடுத்து, "இவளைத் தான் கட்டிப்பேன்" என்று, தகராறு செய்து, அவளை மணந்து கொண்டு மருமகளாக வீட்டுக்குக் கூட்டி வரவில்லை. அந்தத் துணிச்சல் மகன்கள் யாருக்குமே கிடையாது.

சரவணன் உருவாக்கியிருந்த பிரபல ஆட்டோமொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் எனும் நிறுவனம், தொழிற்சாலை, அலுவலகம் எல்லாம் பத்திரமாக அவர் அதிகாரத்தில் இயங்கிக் கொண்டிருந்தன.

அப்பாவின் சம்பாத்தியத்தில் வளர்ந்து, படித்து ஆளாகி, இப்பொழுது அவர் தயவில் தொழில் நிர்வாகத்தின் ஒரு பகுதியைக் கவனித்துக் கொண்டு ஒரே குடும்பமாக அபிராமி இல்லத்திலே வாழ்கிற பிள்ளைகள் அவர்கள்.

அவர்களுக்கு மனைவியைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து அவர்களை வாழவைக்கும் பொறுப்பையும் கிழவர் தமதாக்கிக் கொண்டு விட்டிருந்தார்.

அந்தஸ்துக்கோ, அழகிற்கோ பணத்திற்கோ அவர் தமது கொள்கைகளை விட்டுக் கொடுப்பவர் அல்ல.

அவர் தனது வீட்டு மருமகள்களின் ஜாதகப் பொருத்தத்தை முக்கியமான சங்கதியாக அனுசரித்தார்.

மூத்த மருமகள் பெரிய இடத்துப் பெண் அல்ல. நடுத்தர குடும்பத்திலிருந்து வந்தவள். மகனது ஜாதகத்துடன் அவள் ஜாதகம் நன்கு பொருந்தியிருந்தது. பெண்ணின்

முகத்திலே அமைதியும்—அருளும் தெரிந்தன. வீட்டை நிர்வகிக்கும் பொறுமை அவளுக்கு இருக்கும் என்று நம்பினார்.

''இந்தப் பெண் கமலாவை உனக்குக் கட்டி வைக்கத் தீர்மானிச்சுட்டேன், என்ன சொல்றே!'' அப்பா சிரித்துக் கொண்டு கேட்டபோது ஆனந்தன் மறுப்பு தெரிவிக்கவில்லை. ''உங்கள் பிரியத்துக்கு எதிர்ப்பு சொல்ல மாட்டேன்'' ஒரே வார்த்தையில் ஒப்புக் கொண்டு விட்டான்.

திருமணத்தை சரவணன் விமரிசையாக நடத்தினார். முன் கோபக்காரரான அவர் போட்ட சட்ட திட்டங்களை சிரமேற்கொண்டு, எதிர்த்து ஒரு வார்த்தை கூடப்பேசாது மவுனமாக வீட்டுப் பொறுப்பைப் பொறுமையுடன் நிர்வகித்து, பத்து ஆண்டுக்குப் பின்னர் அவரிடம் கமலா நல்ல பெயர் வாங்கியிருந்தாள்.

கமலாவுக்கு இரண்டு குழந்தைகள். மகன் அமுதனுக்கு எட்டு வயது. பெண் வளர்மதிக்கு ஆறு வயது.

இளைய மருமகள் அனு சட்டென்று தாய்மை ஏற்க விரும்பாது அதை ஒத்திப் போட்டுக்கொண்டிருந்தாள்.

''குமரன் குழந்தையை நான் மடியில் எப்ப வச்சுக் கொஞ்சப் போறேனோ தெரியலை...?'' என்று கிழவர் ஒருநாள் எல்லார் முன்னிலையிலும் சொன்னபோது, அனு கோபத்தில் முகம் சிவந்து போனாள்.

''மதிப்பிற்குரிய மாமனார் என்றாலும், இப்படியா இங்கிதமில்லாது, அவளைப் பற்றிக்குறைவாகப்பேசுவது? கணவனுடன் தனியே படுக்கையறைக்குள் முணுமுணுத்தாள். ''பெண்கள் என்றால் பிள்ளை பெறும் எந்திரங்களா? கொஞ்ச காலம் நாம் கணவன்—மனைவியின்னு நிம்மதியா வாழ்கிறது உங்கப்பாவுக்குப் பொறுக்கலையா? உங்கள் அண்ணியைப் போல, மகளுக்கு பள்ளிக் கூடச் சீருடை போட்டுக் கொண்டே, கூப்பிட்டீங்களா மாமா!



இதோ வந்துட்டேன்னு மாமனாருக்கும் மகனுக்கும் இடையே யாருக்கு முதலில் சேவை செய்கிறதுன்னு தெரியாமல் இங்குமங்கும் நான் ஓடலைன்னு உங்களுக்குக் கவலையா இருக்கா? நான் உங்கள் அண்ணியைப் போல ஒரு பட்டிக்காட்டுப் பெண் இல்லை. எப்போது தாய் என்கிற பொறுப்பை எடுத்துக்கணும்னு எனக்குத் தெரியும்'' சீறினாள்.

குமரனுக்கு அப்பாவிடம் ரொம்ப பயம். அதே சமயம் தன் அழகான மனைவியிடம் மகா மயக்கம்.

''அப்பா அந்தக் காலத்து மனிதர். அவரது கொள்கைகள் நமக்கு ஒத்து வராது. ஆனாலும் அவரை எதிர்த்துக் கொண்டால், நமக்குத்தான் நஷ்டம்'' என்றான் குமரன்.

''தொழிலில் இருந்து உங்களைப் பிரிந்து வரும்படி நான் சொல்லலை. இந்தக் கூட்டுக் குடித்தனமும் உங்கப்பாவின் ஆதிக்கமும் எனக்குப் பிடிக்கலை. இதிலிருந்து மெல்ல உங்களால் கிளம்ப முடியாதா?'' என்று பல முறை வேப்பிலை அடித்திருக்கிறாள். ஆனால், பயன் இருக்கவில்லை. அப்பாவுக்கு அடங்கிய பிள்ளையான அவனுக்கு அந்தக் குடும்பத்திலிருந்து பிரிந்து தனிக்குடித்தனம் போக வேண்டுமென்று நினைக்கக்கூட அச்சம்.

இப்போது, மூன்றாவதாக ஒருத்தி வந்து விட்டாளே? கூட்டுக் குடித்தனத்தின் இறுக்க உணர்வில் திண்டாடிக் கொண்டிருந்த அனுவுக்கும் புதிதாக வந்த அந்தப் புது மருமகளால் வீட்டில் ஏகக்கூட்டம் ஏற்பட்டு விட்டது போன்றதொரு பிரமிப்பு ஏற்பட்டது.

''நகரு! நான் கொஞ்சம் கிட்டத்திலிருந்து அம்மாவைப் பார்க்கிறேன். அடேடே! படு சோக்கா இருக்காங்களே!'' வேலைக்காரன் ஒருவன், இன்னொரு வேலையாளைத் தள்ளிக்கொண்டு எட்டிப் பார்த்தான்.

அனு அவனை வெறுப்புடன் திரும்பிப் பார்த்தாள். ''நகர்ந்து நில். மேலே வந்து விழாதே' என்று அவள் பார்வை எரித்தது. வேலைக்காரர்களுக்கு அனுஅம்மாளை அத்தனை பிடிக்காது. ஒரு சிறு தவறுக்கும் கூச்சல்போட்டு அனாவசியமான அதிகாரங்களைக் காட்டுவாள் என்பது அவர்களின் ஒட்டுமொத்தமான கருத்து.

வேலையாட்கள் எல்லோரும் மூத்த மருமகள் கமலா வுக்குத்தான் கட்டுப்படுகிறார்கள். தன் பேச்சை அசட்டை செய்கிறார்கள் என்பது அவளுக்கும் தெரிந்திருந்தது.

புதிய மருமகளாக வீட்டுக்குள் நுழைந்திருக்கும் இந்த சுகந்தியிடம் இவர்கள் எப்படி நடந்து கொள்ளப் போகி றார்களோ? சுகந்தியும் அண்ணி கமலாவைப் போல ஒரு சாதாரண குடும்பத்திலிருந்துதான் வருகிறவள். அவள் ஜாதகயோகம், பெரிய இடத்துப் பிள்ளையைக் கட்டிக் கொள்ளும் வாய்ப்பு கிட்டிவிட்டது.

பழைய கொள்கைகளில் ஊறிப்போன மாமனார் கிழம், சோழி போட்டு, பூப்போட்டு பார்த்துத் தீர்மா னித்து விட்ட திருமணம்.

அவள் முகத்திலே தெரியும் வியப்பு தம்பட்டம் அடிக்கிறதே! இத்தனை பெரிய வீடா?... இதில் அவள் தங்கப் போகிறாளா...? என்று பார்வையை நாலா பக்கமும் ஓடவிட்டு, ஆச்சரியத்தில் நடக்க மறந்து, ''உள்ளே வாம்மா'' என்று கமலா அழைக்க, நாய்க்குட்டி போல நகர்ந்து வருகிறாளே?...

கமலாவிற்கு அடிப்பொடியாக இவள் மாறிவிட்டால் போதும், வேலைக்காரர்களைப் பற்றிக் கேட்க வேண் டாம்.

அவர்கள் எல்லோரும் சாய்ந்தால் சாய்கிற பக்கம் சாய்கிற செம்மறி ஆடுகள்.

இன்னும் இரண்டு தினங்களில் அங்கே நிலைமை முற்றிலும் வேறாகப் போய்விடும்.



''பெரியம்மா சொன்னாங்க'' என்று எதற்கும் சட்டென்று பதில் கொடுக்கும் துணிச்சல் உடைய வேலை யாட்கள் இனி... சின்னம்மாவின் உத்திரவு என்று புது மருமகள் பின்னால் ஜால்ரா போடுவார்கள்.

அப்படிப்பட்ட ஒரு நிலை உருவாக அவள் அனுமதிக் கக் கூடாது. கூடாது. அதை எப்படியாவது தடுத்துவிட வேண்டும். அனுவின் சிந்தனை பலவாறு குழம்பிக் கொண்டிருந்தபோது, கமலா, சுகந்தியின் கைகளை அன்புடன் பற்றி உள்ளே அழைத்துப் போனாள்.

''அனு! எங்கே இருக்கே? உள்ளே வா! புது மருமகள் வீட்டு விளக்கை ஏத்தப் போறப்ப வந்து பக்கத்தில் நில்!'' கமலா குரல் கொடுத்தாள்.

''பெரிய அதிசயம்! பார்க்காவிட்டால தலை வெடிச் சுடும்!'' தன்னுள் ஆத்திரப்பட்டாள் அனு.

ஆனால், மறுப்புத் தெரிவிக்க இயலவில்லை. அவள் பூஜை அறைக்குள் போவதற்குள் அங்கே அனைவரும் கூடியிருந்தனர்.

பட்டுக்கரை வேட்டியும், வெள்ளைச் சட்டையும், தோளில் சரிகை உத்திரியமுமாக மாமனார் சரவணன் கம்பீரமாக முதலில் நின்று கொண்டிருந்தார். அவர் அருகே ஆனந்தனும் குமரனும் கைகட்டி மிகவும் பணிவுடன் நின்று கொண்டிருந்தனர். புது மருமகளும் கடைக்குட்டி மகன் மனோகரனும் விளக்கு அருகே நின்றனர். தட்டில் பாக்கு வெற்றிலை பழம் எல்லாம் எடுத்துக்கொண்டு வந்த கமலா, சுகந்தியிடம் நெருப்புப் பெட்டியைக் கொடுத்தாள்.

''முதல்லே உங்க வீட்டிலிருந்து கொண்டு வந்த காமாட்சி விளக்கை ஏத்திட்டு, உன் புக்ககத்து பூஜை அறை குத்துவிளக்கை ஏத்தும்மா, இந்தக் குத்துவிளக்கு இந்தக் குடும்பத்திலே பல ஆண்டு காலமா இருக்கிற குடும்பச் சொத்து. பிறகு, கமலா அண்ணி எடுத்துச்

சொல்லுவாள். யார் என்னிக்கு பூஜையறை வேலையைக் கவனிக்கணும்னு அவள் திட்டம் போட்டுத் தருவாள். குடும்ப நிர்வாகத்தைப் பத்தி அவள்கிட்டே கேட்டு தெரிஞ்சு கொண்டு பெரிய அண்ணி சொல்படி நடக்கணும்மா?'' சொல்லிவிட்டு கிழவர் அனுவை ஓரக்கண்ணால் பார்த்தார்.

சமயம் வந்த போதெல்லாம் இந்த பொல்லாத கிழம் அவளை வேணுமென்றே மற்றவர்கள் முன்னிலையில் மறைவாக மட்டம் தட்டுகிறாரே?

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமாக தலை குனிந்தபடி நின்றாள், அவள். கிழவர் சொன்னபடி முதலில் தான் கொண்டு வந்தவிளக்கை ஏற்றி தட்டி லிருந்த பூக்களை அள்ளி விளக்கடியில் தூவி கைகூப்பி வணங்கி விட்டு, கற்பூரத்தை ஏற்றி தெய்வ படங்களுக்கு ஆரத்தி எடுத்து முடித்துவிட்டு, கணவனுடன் அங்கே பெரிதாக மாட்டப்பட்டிருந்த மாமியார் படத்தின் முன் விழுந்து கும்பிட்டாள்.

"போதும், நீண்ட தூரம் பயணப்பட்டு களைப்பா வந்திருக்கே...எல்லாருக்கும் கைகூப்பி வணக்கம் தெரிவிச்சா போதும். விழுந்து கும்பிட்டு உடம்பை அலட்டிக்க வேணாம். இன்னிக்கு உனக்கு பெரிய அண்ணி ஓய்வு தந்திருக்காங்க. அதனாலே காலை காப்பி டிபன் சாப்பிட்ட பிறகு நீயும், மனோகரனும் உங்கள் அறையில் பகல் சாப்பாடுவரை ஓய்வா இருக்கலாம். புது மருமகள்னு இன்னிக்கு மட்டுந்தான் இந்த சலுகை, புரியுதா?'' கேலி யாக சொல்லிவிட்டு அவர் உரத்து சிரிக்க, அறையின் வெளியே கூட்டமாக நின்ற வேலையாட்கள் யாவரும் அந்த சிரிப்பில் கலந்து கொள்ள வீடே கலகலத்தது.

புது மருமகளை சந்திக்க வீட்டிற்கு அழைக்கப் பட்டிருந்த உறவினப் பெண்கள் அனைவருக்கும் கமலா பூவும், குங்குமமும் வெற்றிலை பாக்கும், பழமும் தந்து



உபசரித்தாள். வேலைகாரப் பெண்களுக்கும் அவை வழங்கப்பட்டன. பின்பக்கத் தோட்டத்திலே போட் டிருந்த பந்தலில் எல்லாருக்கும் காலை காப்பி பலகாரம் பரிமாறப்பட்டன.

உறவினர்கள் சாப்பிட்டு உத்தரவு பெற்றுக் கிளம்பி னர். மிச்சம் மீதியிருந்த பலகாரங்களையும் காப்பியையும் வேலையாட்கள் ஒரு கை பார்த்தனர். அது முடிவதற்குள் சமையல் ஆட்கள் பகல் சாப்பாட்டைத் தயாரிக்கும் மும்முரத்தில் இறங்கி விட்டனர்.

அண்ணி கமலா சுகந்திக்கு அவளது ஓரகத்தியை அறிமுகம் செய்து வைத்தாள்.

''கல்யாணத்தின்போது உனக்கு மனோகரனைத்தான் பார்த்து மகிழப் பொழுது இருந்திருக்கும். அது உன் இளைய அண்ணி, உன்னைப் போலவே படிச்சவள்.வீணை கூட வாசிப்பாள். கார் ஓட்டுவாள். ரொம்ப கெட்டிக் காரி!" என்றாள்.

''அப்படியா?'' என்று கன்னம் சிவந்து கண்கள் பள பளக்க தலையை நிமிர்த்திப் பார்த்த சுகந்தியை, அனு பொறாமையும் ஆத்திரமுமாக வெறித்தாள்.

கூழைக் கும்பிடு போடுவதில் இவள் கெட்டிகாரியாக இருக்கிறாள். இதனால் கொஞ்சிப் பேசி, பெரியவரைத் தன் கையில் சீக்கிரம் போட்டுக் கொண்டு விடுவாள்.

கிழவர் பூஜையறையில் பேசினதில் இருந்து தெரிய வில்லையா? அவருக்கு நமது புது மருமகளை ரொம்ப பிடித்திருக்கிறது.

''அம்மா கமலா! கொஞ்சம் சூடா தண்ணீர் குடிக்கக் கொண்டுவா!'' என்று இனிமேல் அவளை ஏவமாட்டார்.

''அம்மா சுகந்தி! காலை வந்த பத்திரிகைகளை யெல்லாம் இப்படி எடுத்துக் கொண்டு வந்து வை...!''

''அம்மா சுகந்தி! வாசல் பக்கம் என்ன சத்தம்னு போய் பார்த்துட்டு வந்து சொல்...!''

''அம்மா சுகந்தி! இன்னிக்கு பகல் சமையலில் எனக்கு என்ன தயார் பண்ணணும்னு இப்பவே சொல்லிடறேன். கவனிச்சுக்கோ'' என்று கமலாவின் வாரிசாக தமது கடைக்குட்டி மருமகளை அதிகாரபீடத்தில் ஏற்ற ஆசாமி தயார் செய்யத் தொடங்கி விடுவார்...

இதை அவள் தவிர்க்க முயல வேண்டும். எப்படி?

சுகந்தியிடம் மிகவும் அன்பாகப் பழகுவது போல முதலில் நெருக்கம் கொள்ளவேண்டும். பின்னர் வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல மனோகரனைப் பற்றி, கமலாவைப் பற்றி, மாமாவைப் பற்றி மெள்ள சில வம்புகளைச் சொல்லி, வந்தவளின் மனதைக் குழப்பி அவளைத் தனிக் குடித்தனம் செய்ய முதலில் கிளப்பிவிட வேண்டும்.

பிள்ளைகளும்—மருமகள்களும், நமக்கு சலாம் போட்டுக் கொண்டு ஒரே வீட்டில் கூட்டுக் குடித்தனமாக வாழவேண்டும் என்று இனியும் கிழவர் எதிர்பார்க்கக் கூடாது.

அவர்கள் எல்லாம் கிழவரின் கொத்தடிமைகள் இல்லையே. தனது வார்த்தைகளைக் கேட்டுப் பணிந்து வீட்டு வேலைகளைக் கவனித்து, அவரையும் கருத்தாகக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றால் மனிதன் இரண்டாம் தாரமாக யாராவது ஒரு ஏழைப் பெண்ணைக் கட்டிக் கொள்ளட்டுமே! பணம் இருக்குன்னு அவருக்கு தம் பெண்ணைக் கட்டிக் கொடுக்க எத்தனையோ பெற்றோர்கள் முன் வருவாங்க.

அந்த எண்ணம் அனுவுக்கு தாங்க முடியாத சிரிப்பை உண்டாக்கவே, அவள் களுக்கென்று சிரித்துவிட்டாள்.



''எதுக்கு சிரிச்சே! என்கிட்டே சொல்லிவிட்டு சிரி. நானும் அதைக் கேட்டு சிரிக்கலாமே...!'' பின்னாலிருந்து வந்த குரலைக் கேட்டு அவள் அதிர்ந்துபோனாள்.

''ஒண்ணுமில்லை மாமா! நம்ம வீட்டு ஜூலி நாய்க்குட்டி அடுத்த வீட்டு பூனையை விரட்டிக் கொண்டு ஓடினதைப் பார்த்தேன். சிரிப்பு வந்தது'' மனதில் தோன்றியதை சொல்லிவிட்டு மெல்ல நழுவினாள்.

இந்த மாமனார் கிழம் எப்போது வந்து எதிர்படுவார்! என்ன கேட்பார் என்று ஊகிக்க முடியாத ஒரு பேர்வழி.

மவுனம் தொனிக்க பேசுவதில் சாமர்த்தியககாரர். ஒரே பார்வையில், இரண்டு வார்த்தையில் எல்லோரையும் நடுங்க வைக்கும் ஒரு பிசாசு என்று எண்ணியபடி வேகமாகத் தனது அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

அவளுக்குத் தெரியும். வந்தவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்று நாய்க்குட்டியைப் பின் பக்கத்து கம்பு ஒன்றில் கட்டிப் போட்டிருந்தார். வாயில் வந்த பொய்யை சொல்லி விட்டாள். அதிலும் நாம் அங்கே நின்றால் கிழவர் ஆயிரம் குறுக்குக் கேள்வி கேட்டு அவளைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விடுவாரே?

தலையைப் பிய்த்துக் கொண்டு, 'அய்யோ! எனக்கு இந்த வீட்டில் நீடித்துத் தங்கப் பிடிக்கலையே, என்று கத்த வேண்டும் போன்ற ஒரு ஆவேசம் அவளுள் எழுந்தது. இயலாமையால் கண்களில் ஈரம் கசிந்தது.

## 2

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண் என்பது சரவணனுக்கு மிக்க பொருத்தமான பழமொழி.

வீட்டுக்கு வந்த மருமகளை வரவேற்று, எல்லோரும் விருந்துண்டு உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பியதும் அவரும் தமது அலுவலக வேலையைக் கவனிக்கப் புறப்பட்டு விட்டார்.

கால்களில் செருப்புகளைத் திணித்துக்கொண்டு தொண்டையைச் செருமிவிட்டு, துண்டை உதறி அவர் தோளில் போட்டுக் கொள்வதைக் கண்ட மூத்த மகனும் இளையவனும் புரிந்து கொண்டுவிட்டனர்.

இத்தனை வயதிலும், அப்பா சுறுசுறுப்பில் சிறிதும் குறைவின்றி, எந்தந்த வேலையை எப்பொழுது கவனிக்க வேண்டும் என்றதொரு அளவிலே இயங்கும்போது, கட்டிளங் காளைகளான அவர்கள் சோம்பேறிகளாக உண்ட மயக்கம், என்று திண்டுகள் மீது சாய்ந்து கொள்ள இயலாதே. கருப்பு பென்ஸ் வாசலில் வந்து நிற்க, வண்டி ஓட்டுனர் கதவைத் திறந்துவிட, அவர் உள்ளே ஏறி அமருகிறார். பெரிய மகன்கள் இருவரும் தங்களது பியட் கார்களில் ஏறி தொழிற்சாலை மற்றும் கிடங்கு வியாபாரத்தை கவனிக்கப் புறப்பட்டுப் போய் விட்டனர்.

காருக்குள் ஏறி உட்கார்ந்த கிழவர், தமது கடைக்குட்டி மகனைத் திரும்பிப் பார்த்தார்.

'தேன்நிலவு கொண்டாடி முடித்தாகிவிட்டது; இனி தொழிலை கவனிக்கப் புறப்படு!' என்று பார்வையால் சொன்னார்.

பத்து நாள் இரவும் பகலும்பிரியாது ஒன்றாக இனிக்க வாழ்ந்துவிட்டதின் பாதிப்பு தன் புது மனைவியைப் பிரிந்து அலுவலக வேலையை கவனிக்கப் போக மனோகரனுக்குத் தயக்கமாக இருந்தது.

"கார் சாவியை இங்கே வச்சிட்டுப் போனால்" என்று நினைவுறுத்தியபடி அண்ணி கமலா அவனது அம்பாசிடரின் சாவியை அவனிடம் எடுத்து நீட்டினாள்.



கடைக்கண்ணால் தன் மனைவியைக் கனிவுடன் பார்த்துவிட்டு, இன்னமும் புறப்படாது வாசலில் உறுமிக்கொண்டிருந்த பென்சில் இருந்து அப்பா வெறிப்பதைக் கண்டு அஞ்சி, அவன் தனது காரில் விரைந்தான்.

வேலையாட்கள் தேய்த்துக் கழுவி வைத்த பாத்திரங்களைத் துடைத்து, பெரிய அண்டாக்களையும் அன்றாட வேலைக்குத் தேவையில்லாத பாத்திரங்களையும் பரணில் அடுக்க ஏற்பாடு செய்து கொண்டு நின்ற கமலா அருகே வந்தாள் சுகந்தி.

"நான் ஏதாச்சும் உதவி செய்யவா!" என்று கேட்டுவிட்டுத் தயங்கினாள்.

"இன்னிக்குத்தானே புதுசா இந்த வீட்டுக்கு வந்திருக்கே. ஒருநாள் உனக்கு நாங்கள் விட்டுத் தருகிறோம். போய் உன் அறையிலே நீ கொண்டு வந்த சாமான்களை ஒழுங்கு செய்துட்டு கொஞ்சநேரம் படுத்துத் தூங்கு. நாங்க இங்கே வேலைகளை கவனிச்சுக்கிறோம்" கமலா உத்திரவிட்டாள்.

வேறு வழியின்றி சுகந்தி தங்கள் உபயோகத்திற்குத் தரப்பட்ட மாடியறைக்குள் சென்றாள்.

அவள் கொண்டு வந்த பெட்டிகள் அங்கே கட்டிலோரமாக வைக்கப்பட்டிருந்தன. சீர் என்று பாத்திரங்கள் படுக்கை என்று எதையும் அவள் பிறந்த வீட்டில் இருந்து கொண்டு வரவில்லை. தேன்நிலவுக்கு ஒரே பெட்டியுடன் தான் புறப்பட்டிருந்தாள்.

அவள் கணவன் அங்கங்கே கடைகளில் பல பொருட்கள் வாங்கித் தந்து, இன்னொரு பெட்டியை நிரப்பியிருந்தான். அந்தப் பொருட்களையும், துணிகளையும் தயாராக இருந்த இரும்பு அலமாரியில் அடுக்கி வைக்க அவளுக்கு நேரம் அதிகம் ஆகவில்லை. அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு தானும் தன் கணவனும் இனி வசிக்கப் போகிற அந்த அறையைச் சுற்றிலும் ஆராய்ந்தாள்.

ஏ. சி. யில் குளிர்ந்து கொண்டிருந்த அந்த அறை மிகவும் பெரியதாக பல வசதிகளுடன் இருப்பதைக் கண்டாள். உள்ளடங்கிய குளியலறையில் ஷவர், முகம் கழுவும் பீங்கான், ஒரு பக்கம் தடுக்கப்பட்டிருந்த இடத்திலே ஆள் உயரக் கண்ணாடியுடன் ஒரு அலங்கார மேசை அவள் ஒவ்வொன்றையும் திகைப்பும் ஆனந்தமுமாகப் பார்த்து மகிழ்ந்து போனாள்.

உண்மையில் அவளைப் போன்ற ஒரு எளிய குடும்பத்துப் பெண்ணுக்கு இப்படி ஒரு யோகமா? மகிழ்ச்சியுடன் மெத்தென்று உடலைத் தழுவிய படுக்கை மீது சாய்ந்து கொண்டாள்

பயண அலுப்பும் ஏ. சி. யின் குளிர்ச்சியும் ஆட்கொள்ளவே அவள் நன்றாக உறங்கிப் போனாள்.

யாரோ மெல்லக் கதவைத் தட்டும் ஓசை விழிப்பைக் கொடுத்தது.

மாலை மணி நாலாகி விட்டதை சுவற்றில் தொங்கிய கடிகாரம் சொல்லியது.

பரபரப்புடன் எழுந்து கதவைத் திறந்தாள்.

ஒருபக்கம் விளிம்பு வரை ததும்பிய காப்பியும், ஒரு வெள்ளித் தட்டில் அல்வா துண்டு ஒன்றும், அத்துடன் ஒரு கைப்பிடி அளவு வறுத்த கார முந்திரிப் பருப்பும் கொண்ட ஒரு மரத் தட்டை சுமந்து கொண்டு அனு உள்ளே வந்தாள்.

காலையில் உடுத்தியிருந்த அலங்காரமான பட்டு சேலையைக் களைந்துவிட்டு, காஞ்சிபுரம் நூல் சேலையை அணிந்திருந்தாள். ஆனால், காலையை விட இப்போது ஒப்பனை முகத்தில் கூடுதலாகவே இருந்தது.

"அண்ணி! நீங்க எதுக்கு இதெல்லாம் எடுத்துட்டு வரணும்? கூப்பிட்டால் நான் கீழே சாப்பிட வந்திருப்



பேனே" என்றபடி முகத்தைக் கழுவிக்கொள்ள துவாலையுடன் குளியலறைப் பக்கம் திரும்பினாள் சுகந்தி.

"அப்படியே உட்கார்! நீ எந்தக் கோலத்திலும் ரொம்ப அழகாகவே இருக்கே. முதலில் காபியை சாப்பிடு. இந்த டிபனை ஒருகை பார். பிறகு முகத்தை கழுவிட்டு மாற்றுப் புடவை கட்டிக்கொள். உனக்கு தலையில் வச்சுக்க ஒரு சுமை மல்லிகைப்பூவை அண்ணி கமலா பூஜை அறை பூக்கூடையில் தயாரா வச்சிருக்காங்க."

"நீங்க சாப்பிட்டாச்சா அண்ணி!" அன்போடு கேட்டபடி, சுகந்தி வெள்ளித் தட்டை கையில் எடுத்துக் கொண்டு. ஆவலுடன் முந்திரிப்பருப்பைக் கொறித்தாள்.

'பஞ்சத்தில் அடிபட்டவள் போலும், லபக் லபக்னு எப்படி விழுங்கறா...? அவங்க வீட்டு அந்தஸ்துக்கு வெள்ளித் தட்டிலே அல்வாவும்—முந்திரிப் பருப்பும் கிடைக்குமா? கடலை உருண்டை கூட வாங்கித் திங்க காசில்லாத மட்டமான குடும்பம். இப்போ எனக்கு சமமாக இங்கே வந்து, ஏ. சி. அறையிலே...!' பற்களைக் கடித்துக் கொண்டாள் அனு. ஆனால் அவளது உதட்டிலே வஞ்சகமானதொரு புன்னகை நெளிந்து குழைந்தது.

"பாவம், நீங்க ரெண்டு பேரும் கீழே அத்தனை வேலைகளை செய்துகிட்டிருக்கும்போது நான் மட்டும் நல்லா தூங்கிவிட்டிருக்கேன். நினைத்தால் வெட்கமா இருக்கு!" பேசியபடியே காப்பியை மெல்லக் குடித்தாள்.

"கவலைப்படாதே, எல்லாத்தையும் சேர்த்து நாளை முதல் உன்னை கமலா அண்ணி வேலை வாங்கிடுவாங்க. முதல் முதல் நான் இந்த வீட்டு மருமகளாக வந்தபோது எனக்கு இப்படித்தான் ராஜ உபசாரம் நடந்தது. தினமும் இப்படியே சொகுசா சாப்பிட்டு, தூங்கிட்டு கதை படிச்சுகிட்டு, ரேடியோ கேட்டுகிட்டு இருக்கலாம்னு நினைச்சப்போ அடுத்த நாளே கமலா அண்ணி தட்டு முட்டுச் சாமான்களை ஒழுங்கு பண்ணச் சொன்னாங்க. வீட்டு

வேலையே செய்யாது செல்லமா வளர்க்கப்பட்டவள் நான். ஒரே நாளில் முதுகெலும்பு கழண்டு போச்சு'' பெருமூச்சு விட்டபடி, தன் நெற்றியில் ஏ.சி குளிரையும் மீறி பூத்த வியர்வையை நாசுக்காக கைக்குட்டையால் ஒத்திக் கொண்டாள்.

''நம்ப வீட்டு வேலையை நாம செய்யறதிலே தப்பு இல்லையே அண்ணி'' கேட்டபடி சுகந்தி முந்திரிப்பருப்பை மென்றபோது அனுவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

''இந்த காட்டாம்பூச்சியை, லேசில் நம் பக்கம் திருப்ப முடியாது போலிருக்கு!'' உள்ளூர வெருண்டாள்.

''ஓரளவுக்கு செய்யவேண்டியது கடமை. வேலையாட்கள் இருக்கும்போதே இடுப்பை ஒடிச்சுகிட்டு வேலை பண்ணணும்னு நம் தலையெழுத்தா?''

''அப்படின்னா, நாளையில் இருந்து எனக்கு வீட்டு வேலை நிறைய இருக்கும்னா சொல்றீங்க?''

''நீ படிச்சவள், ஞாபகமிருக்கா? பள்ளிப் படிப்பின் போதும் கல்லூரிப் படிப்பின்போதும் எந்த நாளுக்கு என்ன வகுப்பு எடுக்கப் போறாங்கன்னு ஒரு அட்டவணை தயார் செய்து நமக்கு தந்துடுவாங்களே, அதேபோல நாளைக்கு உன் கையில் ஒரு அட்டவணையை அண்ணி கம்லா கொடுப்பாங்க.''

''அப்படியா?'' களுக்கென்று சிரித்தாள் சுகந்தி.

''இப்போ சிரிப்பே. பிறகு முணுமுணுப்பே. முடிவில் அழுவே. திங்கட்கிழமை துணிகளைத் துவைப்பதை மேற்பார்வையிட்டு, காய வைத்தவைகளை எண்ணி, பெட்டி போட்டு வாங்கி, அவங்க அவங்க துணிகளை வகை வகையாகப் பிரிச்சு, அந்தந்த அறையில் கொண்டு வைக்கணும். செவ்வாய்க்கிழமை பூஜையறை சாமான்களை வீட்டு மருமகளே புளிபோட்டு துலக்கி வைக்கணும். பூஜை



யறையில் ஒரு வண்டி சாமான் இருக்கு. சாமிகள் கேட்கலை; வீட்டுக்கு பெரிய சாமியா இருக்காரே மாமனார் அவருடைய ஏற்பாடு இது.''

''எங்க வீட்டிலே நிறைய பித்தளை பாத்திரங்கள் உண்டு. புளி போட்டு தேய்த்து, தங்கமெருகு கொடுத்தாப்பல நான் அத்தனையையும் விளக்கி வைச்சு அம்மாவுக்கு உதவி செய்வேன்.''

'போச்சுடா! இந்தப் பெண் தலையில் விவரத்தை எப்படித்தான் ஏத்துறதோ தெரியலை' தன்னுள் வெருண்டாள் அனு.

''பெரிய மனுஷங்க வீட்டிலே பித்தளை சாமான்களை ஏன் கட்டிக்கிட்டு அழணும். தட்டு, சொம்பு, லோட்டான்னு கடையில் தூக்கிப்போட வேண்டிய குப்பைகளை கிழவர் நமக்கு சேர்த்து வச்சிருக்கார்.''

''பெரியவங்க இஷ்டப்படி நடந்துட்டா வம்பில்லாமல் போயிடும்.''

தாடை இறுக அனு அவளை உற்றுப் பார்த்தாள். இவள் ரொம்பவும் காஞ்சுபோன இடத்தில் இருந்து வந்திருக்காள். இந்த வாழ்க்கையை ஒரு சொர்க்கமாக நினைக்கிறாள். இவளை சட்டென்று நம் வழிக்குக் கொண்டுவர முடியாது. ஆனாலும் முயற்சியை விடக் கூடாது!' தன்னுள் பலவும் எண்ணினாள்.

''முகத்தைக் கழுவிக் கொண்டு வா. நான் முடியை சீவி கொண்டை போட்டு விடறேன்'' அனு மிகவும் அன்புடன் கூறியதைக் கேட்டு அகமகிழ்ந்து போனாள் சுகந்தி.

''இதோ வந்துட்டேன் அக்கா!'' குளியலறைக்குள் துவாலையுடன் ஓடினாள்.

சில நொடிகளில் வெளிவந்த சுகந்தி, தன் முடியை முதுகில் புரளவிட்டுக்கொண்டு அருகில் கட்டில் ஓரத்தில்

அமர்ந்தபோது. மயில்தோகை போன்று அகன்று நீண்டு தொங்கிய அந்தக் கூந்தலின் அழகு அனுவை பிரமிக்கச் செய்து விட்டது.

சோத்துக்கு இல்லாதவங்க வீட்டுப் பெண்ணுக்கு இத்தனை செழிப்பான கூந்தலா? கழுத்தின் கீழ் எலி வாலாகத் தொங்கும் தன் கூந்தலை வளர்க்க அவள் எத்தனை பாடுபடுகிறாள். அதற்கு எத்தனை சத்தான தைலங்களைப் பூசுகிறாள். சவுரியை வைத்தல்லவா அவள் அத்தனை பெரிய கொண்டை போட்டுக் கொள்ள வேண்டியிருக்கு. பொறாமையுடன் சீப்பால் வேகமாக தன் ஓரகத்தியின் முடியைச் சீவினாள். வேகமாக கொண்டை போட்டு விட்டாள்.

'கொண்டை தான் பெரியதாக இருக்கே ஒழிய மண்டையில் எதும் இல்லை. ஒரே களிமண்' எண்ணியபடி சுகந்தி செய்து கொள்ளும் ஒப்பனையைப் பார்த்தபடி சொன்னாள். "சின்னவருக்கு ரொம்ப இடத்திலே பெண் பார்த்தாங்க. ஒண்ணும் சரியா அமையலை."

"நம் மாமனாருக்கு ஜாதகத்தில் நம்பிக்கையாமே—அதனாலே ஒரு இடமும் கூடலையாம் ... எனக்குக் கொடுத்து வச்சிருக்கு."

"ஜாதகமும் இல்லை ... வெண்டைக்காயுமில்லை. அதெல்லாம் சுத்தப் பொய்."

கண்களுக்கு மையெழுதிக் கொண்டிருந்த சுகந்தி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"கிழவருக்கே நல்லாத் தெரியும் தம் கடைக்குட்டி மகன் மனோகரன் செய்யிற காரியம் ரொப்பத் தப்புன்னு. என்ன செய்கிறது. வெளியே சொன்னால் வெட்கம். அதனாலே, சட்டுப்புட்டுனு ஒரு கல்யாணத்தை செய்து வச்சா பையன் ஒழுங்காகிடுவான்னு நினைச்சு செய்த கல்யாணம்தான் இது. பல பெரிய இடங்கள் வந்தன.



உண்மை தெரிஞ்ச பெத்தவங்க பெண்ணை இந்த வீட்டில் கொண்டு தள்ள விரும்பலை."

முகமெல்லாம் சிவந்து நெஞ்சு துடிக்க, கைவிரலில் தொட்ட குங்குமப் பொட்டை நெற்றியில் வைக்க மறந்து தன் ஓரகத்தியை வியப்புடன் பார்த்தாள் சுகந்தி.

இவங்க என்ன சொல்ல இப்படிச் சுத்தி வளைக்கிறாங்க?

"இரு உன் பொட்டை நான் நல்லா வச்சு விடறேன்" என்று எழுந்து வந்து அவள் நெற்றியில் குங்குமத்தை அழகாகப் பொட்டு வைத்து, முன் நெற்றியில் புரண்ட கூந்தலை சீராக்கி, மெல்ல வருடினாள் அனு.

"மனோகரன் அழகுக்கு ஏத்த மனைவிதான் நீ. ஆனால், குணத்தில்தான் உங்களிடையே ரொம்ப வித்தியாசமிருக்கப் போகிறது."

இனம் விளங்காத ஒரு உணர்வில் துவண்டு போனாள் சுகந்தி. வீட்டுக்கு வந்ததும் வராததுமாக, இளைய அண்ணி ஏதேதோ சொல்லிக் குழப்புகிறாங்களே! உண்மை என்னவாக இருக்கும்?

"இதோ பார் சுகந்தி! உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு. பெண் பார்க்க வந்தப்பவே எனக்கு உன்னை சட்டுனு பிடிச்சுப் போச்சு. பெண் எப்படின்னு மாமனார் கேட்டப்போ, "ரொம்ப அழகா, சாந்தமா இருக்கா"ன்னு நான் நல்ல வார்த்தை சொன்னேன். உன்னை ஏன் எனக்குப் பிடிச்சதுன்னு கேட்கலையே. என் பெரியம்மா மகள் என்னைவிட இரண்டு வயசு சின்னவள். பேர் சாந்தா. குணமும் அப்படியே. உன்னை அச்சில் வார்த்ததுபோல இருப்பா. அந்த ஜாடை உடல்வாகு எல்லாம் எங்களுக்கு உறவே இல்லாத உன்னிடம் எப்படி வந்ததோ தெரியலை. சாந்தா மேலே எனக்கு உயிர். ரெண்டுபேரும் ஒரே வகுப்பில் பள்ளிக்கூடத்திலே படிச்

சோம். கல்லூரியில் கூட ஒரே ஆஸ்டலில் தங்கிப் படிச்சவங்க. அவள் படிப்பு முடிஞ்சதும் டெல்லிக்கு மாமா வீட்டுக்கு விடுமுறைக்குப் போனாள். டைபாய்டு காய்ச்சல் வந்து, அங்கேயே ஆஸ்பத்திரியில் போயிட்டா, அந்த இழப்பை எங்களால் மறக்கவே முடியலை. உன்னை நான் பார்த்தப்போ சாந்தாவைப் பார்த்தது போல திடுக்கிட்டு மெய்சிலிர்த்துப் போனேன்'' தொண்டை தழுதழுக்க, நா தடுமாற, கண்களில் நீர் கொப்பளிக்க, அனு கட்டில் விளிம்பைப் பார்த்துத் தலைகுனிந்து கொண்டாள்.

சுகந்தியின் மனம் பாகாய்க் கரைந்து போனது. ''அக்கா! என்னை உங்கள் பெரியப்பா மகள் போலவே நினைச்சுப் பழகுங்க'' அன்போடு அவளது கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

அவளது பிடியில் இருந்து கரங்களை விடுவித்துக் கொண்டு, கன்னத்தில் வழியத் துடித்த கண்ணீரை கை குட்டையால் ஒத்திக் கொண்டாள் அனு.

''அதனால்தான் நான் உன்கிட்ட மனம் திறந்து பேச விரும்பறேன்?''

''அக்கா! நீங்க தாராளமா என்கிட்ட மனதில் இருக்கிறதை சொல்லி உங்க இன்ப துன்பங்களை பகிர்ந்துக்கலாம்!''

''ஒண்ணு நான் சொல்ல விரும்பறேன். ஆனால் அதைக் கேட்டுட்டு நீ திடுக்கிடக் கூடாது, திகைக்கக் கூடாது, மனம் கலங்கக் கூடாது. நான் சொன்னதாக நீ யாரிடமும் வெளியே சொல்லக் கூடாது.''

''என்னை நம்புங்க அக்கா...சொல்ல வந்ததை தயவு செய்து அச்சப்படாமல் சொல்லுங்கள்.''

''உன் குல தெய்வத்து மேலே ஆணை வச்சு சத்தியம் செய்து கொடுத்தால் சொல்லுவேன். ஏன்னா, இது நம்



குடும்பத்தைப் பத்தின பிரச்சினை'' எழுந்து நின்று சுகந்தி சாத்தின கதவை ஒருதடவை சரி பார்த்துவிட்டுப் படுக்கை ஓரத்தில் வந்து உட்கார்ந்தாள்.

'சத்தியமா எங்க குல தெய்வம் முருகன் மேல்ஆணை. நான் நீங்கள் சொல்றதை யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன்'' தன் கையை நீட்டி அவளது வலது கைமேல் அடித்தாள்.

அனு சில நிமிஷம் பேசத் தயங்கினாள். கைவிரலால் படுக்கை ஓரத்தை வருடினாள். தொண்டையை லேசாகச் செருமிக் கொண்டாள்.

''நீ கேட்டுட்டு வருத்தப்படக் கூடாது. பிறகு என் பாடு ஆபத்தாகிவிடும்.''

''அக்கா! நான் சத்தியத்துக்கு ரொம்பக் கட்டுப் பட்டவள். எங்களுக்கு முருகன் குலதெய்வம். அவர் மேல் ஆணை வச்சிருக்கேன். நீங்க துணிவா சொல்லலாம் அக்கா!'' சுகந்தி குழைவாக கேட்டாள்.

''இந்த வீட்டுக்கு முதல் மருமகளாக வந்திருக்கும் கமலா அண்ணி வெளிப் பார்வைக்குத்தான், ரொம்ப கட்டும் திட்டமுமாக இருக்கிறாப் போலத் தெரிவாங்க. உள்ளே ஆராயப் புகுந்தால், அவங்க ரொம்ப குணம் கெட்டவங்க.''

''கோபக்காரங்களோ! குணம் இருக்கிற இடத்தில் கோபம் இருக்கும்பாங்க.''

''அப்படியிருந்தால் அதைப்பத்திப் பேச நான் ஏன் அஞ்சணும்?''

''அக்கா! சட்னு விஷயத்தைச் சொல்லாமல், என்னை ரொம்ப எதிர்பார்ப்பிலே காக்க வைக்கிறீங்களே!'' சிணுங்கினாள் சுகந்தி.

இந்த வீட்டு பெரிய மகன், அதான் ஆனந்தன் இருக்காரே அவர் நடத்தையிலே ரொம்ப மோசமானவர். கல்யாணத்துக்கு முந்தி ரொம்ப கண்டபடி திரிஞ்சவர். கொஞ்சம் குடிப்பழக்கமும் உண்டு. பெரியவர் இதை என் கண்டிக்கலேன்னு கேட்காதே. அவர் முயன்றார். வெற்றி பெறலை. அவ்வளவுதான். கமலா அண்ணி ரொம்ப சாதாரண இடத்திலிருந்துதான் வந்தாங்க கல்யாணமானதும் மகன் திருந்துவான்னு பார்த்தார் கிழவர். ஆனால், முன்னைவிட பெரிய மகன் நடத்தை மோசமாகிகிட்டு வருது. காசு பணம் போயிடுமேன்னு அப்பா சொல்றபடி தொழிற்சாலை, அலுவலகம் இதுகளை கவனிச்சுக்கிறாரே ஒழிய பாடுபட்டு உழைக்கிற மனிதர் அவர் இல்லே.''

''கமலா அண்ணிக்காக நான் ரொம்ப வருத்தப் படறேன், அக்கா!''

''நீ ஒண்ணும் அவங்களுக்காக வருத்தப்பட தேவையில்லை. உனக்காகத்தான் மத்தவங்க அனுதாபப் படணும்.''

''என்ன சொல்றீங்க, அக்கா?'' திகைப்பும் அதிர்ச்சியுமாக சுகந்தி கேட்டாள்.

''சொல்ல வாய் கூசுது. ஆனால் உண்மையைத் தெரிஞ்சு கொண்டு நீதான் இனி எச்சரிக்கையா நடக்கணும்.''

''என்ன சொல்றீங்க, அக்கா!'' பதறினாள் சுகந்தி.

''கோவிச்சுக்கக் கூடாது. என் கடமை உண்மையை உனக்கு சொல்லிட வேண்டியது. தன் கணவன் ஒரு வழி போனால், தன்னால் இன்னொரு வழி போக முடியும்னு, நிரூபிச்சுட்டவங்க அண்ணி கமலா. உன் கணவன் மனோகரனை அவங்க தன் கைக்குள்ளே வச்சுக்கிட்டு, பொம்மையா ஆட்டுவிக்கறாங்க.''



''வீட்டுக்குப் பெரியவங்கன்னு என் கணவர் அவங்க பேச்சுக்கு அடிபணிஞ்சு போவார் என்றுதானே சொல் றீங்க.''

''நீ சுத்த முட்டாளா இருக்கே இதுக்கு மேலே விளக்கமா சொல்ல எனக்கு ரொம்ப வெட்கமா இருக்கு.''

பெருமூச்சுடன் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு திகைப்புடன் நின்றாள் சுகந்தி. உடல் முழுவதும் ஜில்லிட்டு வியர்த்துக் கொட்டுவதை உணர்ந்தாள்

''உன் கணவர் வயதில் சின்னவர், தம்பி போல. உறவிலும் அப்படித்தான். ஆனால் அண்ணி கமலா, அவரிடம் அப்படிப் பழகவில்லை. ரொம்ப நெருக்கமா பழகுகிறதை இந்த பங்களாவில் உள்ள சுவர் செடி கொடி கூட அறியும்.''

''திக் திக்'' கென்று நெஞ்சு அடித்துக்கொள்ள நெற்றியில் பூத்து வழிந்த வியர்வையை தன் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள் சுகந்தி.

அவளால் நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்க இயலவில்லை.

''நான் சொல்றது பொய்யா மெய்யா என்பதை நீ இன்னிக்கு ராத்திரி சாப்பாடு சமயத்திலே நல்லா கவனி! இந்த வீட்டிலே, என் வீட்டைப் போல ஆண் பிள்ளைகளோடு சமமா பெண்கள் உட்கார்ந்து சாப்பிடற பழக்கம் இல்லை. வீட்டு ஆண்களுக்கு முதல் பந்தி அப்போ உணவைக் கமலா அண்ணிதான் எல்லாருக்கும் பரிமாறுவாங்க. உன் கணவருக்கு அவங்க பரிமாறும் போது கொஞ்சம் உற்று கவனி தோள் மேலே இடிச்சுகிட்டு, ''இந்தா இன்னும் கொஞ்சம் கூட்டு சாப்பிடு, பச்சடி இன்னும் ஒரு கரண்டி வேணுமா... உனக்கில்லாததா!'' என்று கொஞ்சுவாங்க.''

''என் கணவருக்கும் அவங்க அண்ணிக்கும் இடையே தவறான உறவு இருக்குங்கிறதுக்கு நீங்க நேரில் கண்ட தடயங்கள் ஏதாவது இருக்கா?'' கோபமும் துயரமுமாகக் கேட்டாள் சுகந்தி.

''எத்தனைவாட்டி நான் பெரிய அண்ணியின் அறையில் ராத்திரி பத்து மணிக்கு மேலே உன் கணவர் உட்கார்ந்து பேசிக்கிட்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். போன மாதம் உன் கல்யாணத்துக்கு முந்தி, இரண்டு மூணு தடவை மனோகரன் ஆபீசிலிருந்து வந்து அண்ணியைத் தன் காரின் எங்கேயோ கூட்டிக்கிட்டுப் போனதை என் கண்களால் கண்டேன்.''

கைகளால் முகத்தை மூடிக்கொண்டு திடீரென்று சுகந்தி அழத் தொடங்கியதும் அனு சற்று பயந்துபோய் விட்டாள்.

''இந்தா! எதுக்கு அழறே? நீ தாலி கட்டின மனைவி. உன் உரிமையை நீயே பாதுகாக்கணும். மெல்ல உன் கணவரிடம் சொல்லி இந்தக் கூட்டுக் குடித்தனத்தில் இருந்து பிரிஞ்சு வெளியேற வழி செய்யியா, அதை விட்டுட்டு...'' என்று அருகில் வந்து சமாதானப்படுத்தினாள்.

''என்ன இத்தனை நாழி! அக்கா தங்கை ரெண்டு பேரும் ரொம்பவே பேசிக்கிட்டிருந்திங்களோ'' சிரித்தபடி உள்ளே நுழைந்த கமலா, பூஜையறையில் இருந்த பூக் கூடையை எடுத்து வந்து மேசை மீது வைத்தாள்

''உனக்காக நம் வீட்டு வேலைக்காரப் பெண் கட்டி வைச்சிருக்கா. நீயும் அனுவும் ஆளுக்குப் பாதியா எடுத்து தலையிலே வச்சுக்கோங்க'' கமலா உத்திர விட்டாள்.

''இது மார்றான் தோட்டத்து மல்லிகையல்ல. நம் வீட்டுத் தோட்டத்திலே பூத்தது. கூசாம எடுத்து வைத்துக் கோள்'' அனு கிண்டலாகப் பேசியபடி கண்களை லேசாக சிமிட்டினாள்.



கமலா அவனை உறுத்துப் பார்த்துவிட்டு, சமையலை கவனிக்க சென்றுவிட்டாள்.

தலையில் பூவின் சுமையும், மனதில் சந்தேகத்தின் சுமையுமாக சுகந்தி தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்தாள்.

அன்று இரவு சாப்பாட்டின்போது அவள் கவனிக்கத் தவறவில்லை.

''இன்னும் கொஞ்சம் காரக் குழம்பு வைக்கிறேன், நிதானமா சாப்பிடு, என்ன அவசரம்'' மெல்லிய குரலில் அவன் காதுகளில் கேட்கும்படி குனிந்து கமலா சொன்னதும் அவன் லேசாக முறுவலித்ததை கண்டும் காணாதது போல சுகந்தி கவனித்தாள்.

அவள் முகம் அனலாக எரிந்தது. நெஞ்சு படபடத்தது.

சுகந்தி பால் செம்புடன் படுக்கை அறைக்கு வந்த போது, மனோகரன் கட்டிலில் இருந்து எழுந்து நின்றான்.

''விடிவிளக்கைப் போட்டுட்டு கொஞ்சம் ஓய்வா படுத்திரு. ஒரு முக்கிய விஷயம் கவனிச்சுட்டு வரேன்'' என்று கூறிக் கொண்டு கதவைத் திறந்து கொண்டே வராந்தா மீது வேகமாக நடந்தான்.

மெல்ல வெளியே தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள் சுகந்தி.

அண்ணி அனு சொன்னது அத்தனையும் உண்மைதான். இரவின் அந்த வேளையில், அவள் கணவனுக்கு கமலா அண்ணியின் அறையில் என்ன வேலை?

அந்த அறைக்குள் அவன் புகுவதைக் கண்டதும், அவள் நெஞ்சு திகு திகு என்று எரியத் தொடங்கியது.

# 3

**க**ல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, விளையாட்டு நேரத்தில் ஒருநாள் நடந்த நிகழ்ச்சி பளிச்சென்று அவள் நினைவில் உதயமாகியது.

விளையாட்டு மைதானத்தில் பல மாணவிகள் பலவித விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். ஒரு சிலர் தங்களது பங்கை முடித்துவிட்டு வியர்வை வடிந்த முகத்தை கைகுட்டையால் துடைத்தபடி அங்கிருந்த மாமொன்றின் நிழலில் அமர்ந்தனர். வகுப்பிலே மிகவும் கெட்டிக்காரி யும், பெருந்த வாயாடியுமான துர்காதான் அதை ஆரம் பித்தாள்.

''நாமெல்லாம் இந்த வருடம் படிப்பை முடித்துக் கொண்டு அவரவர் வீட்டுக்குத் திரும்பிவிடப்போகிறோம். பிறகு வாழ்க்கையில் எப்போ சந்திக்கப் போகிறோமோ! அதனால் ஒரு கலந்துரையாடல் செய்வோமா?''

''எதைப் பற்றி?'' மற்றவர்கள் குரல் எழுப்பினார்கள்.

''சரிநிகர் சமானமாக வாழ்வோம் 'இந்த நாட்டிலே என்று நாம் எல்லாத் துறையிலும் ஆண்களுக்கு சமமாகப் படிக்கவும், வேலை பார்க்கவும் கிளம்பி விட்டிருக்கோம். குடும்ப வாழ்க்கையில் நாம் அவர்களுக்கு சமமாகி விடு வோமா?'' கேட்டாள் ஒருத்தி.

''கட்டாயம் சமம். ஆணும் பெண்ணும் வேலைசெய்து குடும்பத்தை பொறுப்போடு ஒற்றுமையாக நிர்வகிக்கப் போகிறார்கள். அதனால் சரிநிகர் சமானமாக வாழப் போகிறார்கள். இதில் சந்தேகமென்ன?'' குரல் கொடுத் தாள் கோகிலா.

''அதெல்லாம் சரி. ஒரு பிரச்சினையை எடுத்துக் கொண்டு அலசிப் பார்ப்போம். ஒரு ஆண் தன் மனை



விக்கு துரோகம் செய்கிறான் என்று வைத்துக்கொள் வோம். அப்போது அந்தப் பெண் என்ன செய்ய வேண்டும்?''

''பழிக்குப் பழி என்று அவளும் அவனுக்குத் துரோகம் செய்யணும்.''

''சீ! ரொம்ப மட்டமான புத்தி உனக்கு. ஆண் புத்தி கெட்டு சாக்கடையில் விழுந்தால் அவனைப் பழிவாங்க அவன் மனைவியும் அதே தவறை செய்தால் சரியாகி விடுமா? அவள்தான் தன்னை மாசுபடுத்திக் கொள்வாள்!''

''விவாகரத்து செய்து கொண்டுவிட வேண்டும். தனக்கு துரோகம் செய்யும் கணவனுடன் தொடர்ந்து வாழ்வது சாத்யப்படாது'' ஒரு பெண் வீராவேசமாகப் பேசினாள்.

''குழந்தை ஒன்று இருந்தால், விவாகரத்து அதைப் பாதிக்குமே?''

''புதிதாக மணம் செய்து கொண்ட தம்பதியர் என்று எடுத்துக் கொள்வோம். கணவன், மனைவிக்கு துரோகம் செய்து கொண்டு வேறு ஒருத்தியுடன் தொடர்பு வைத் திருக்கிறான் என்றால் அந்தப் பிரச்சினையை எப்படி அணுகுவது?''

''நேரே அந்த அவளைப் போய் சாடு சாடு என்று சாடுவது!''

''தெருச் சண்டையாகி ஒருவர் கூந்தலை ஒருவர் பற்றிக் கொண்டு நிற்பது நம்மைப் போன்ற படித்த பெண்களுக்கு அழகா?''

''பல்லைக் கடித்துக்கொண்டு நம் பாட்டியார் செய்த காரியத்தை அதாவது சுமூதையாகி, பொறுமையுடன் சகித்துக்கொண்டு, கண்டும் காணாமலும் இருப்பது...''

''நம் போன்ற படித்த பெண்கள்-சுதந்திர உணர்வை மதிக்கும் பெண்கள் செய்யக் கூடிய காரியமா, இது?''

''தவறு செய்யும் கணவனை, நேரிடையாகக் கண்டித்து வழிக்குக் கொண்டு வருவது.''

''அவன் கோபத்துடன் கையை ஓங்கினால்—''

''திருப்பி, நாமும் கையை ஓங்கி!'' என்று ஒரு பெண் முடிக்குமுன் கொல்லென்று எல்லோரும் சிரிக்க கலந்துரையாடலில் ஏகமனதான தீர்மானம் முடிவு பெறுமுன் கல்லூரி முடிந்து விட்ட அடையாளமாக மணி அடிக்கத் தொடங்கவே, அப்படியே எழுந்து வீட்டுக்குத் திரும்பும் பரபரப்பிலே அவர்கள் விரைந்தோடிப் போனார்கள்.

பின்னர் அவர்கள் ஒருங்கே கூடி அதைப்பற்றிப் பேசி முடிவு செய்ய வேறு வாய்ப்பே கிடைக்கவில்லை.

அந்தக் கலந்துரையாடலைப் போல சுகந்தி இப்போது தன்னந்தனியே பல கோணங்களில் சிந்தித்தாள்?...

தேன்நிலவின்போது, அவளிடம் அத்தனை பிரியமாக தன் உயிரையும் உள்ளத்தையும் அவளிடமே ஒப்படைத்து விட்டவன் போல நடந்து கொண்டான் மனோகரன். ஒரு பயங்கர இரகசியமான—அசிங்கமான கடந்த காலம்இருந் திருக்கிறது. அது மேலேத் தொடரப்போகிறது என்பதை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. மிகவும் அன்பான பண்பான மனிதனாகத்தான் அவன் நடந்து கொண்டான். இப்போது அவள் உண்மை நிலைமையைப் புரிந்து கொண்டு விட்டாள்.

ஓரகத்தி அது! பொய் சொல்லுகிறாள் என்று அவள் மீது கசந்துகொள்ள முடியாது. கண்களாலேயே பார்த்து விட்டாளே?

இந்தப் பிரச்சனைக்கு முடிவு எடுக்க வேண்டியவள் அவள். நேரிடையாகக் கணவனிடம் கேட்டுவிட்டால்?

சுகந்தியின் பாட்டி அவளிடம் ஒரு நாள் வேடிக்கை போல ஒரு அறிவுரை சொல்லியிருக்கிறாள். அவள் அந்தக் காலத்தில் மெட்ரிக்வரை படித்தவள்.



கணவனுடைய மனதை சட்டென்று ஒரு பெண் கணிப்பு செய்துவிட முடியாது. தவறான காரியம் செய்கிறார் என்பதைக் கண்டதும், ஒரு பெண் எடுத்த எடுப்பிலே நேரிடையாகக் கேட்டு விட்டாள், பெருத்த ஆபத்து. பாம்புன்னு தாண்டவும் முடியாது, பழுதுன்னு மிதிக்க முடியாத நிலை, அது. கண்டும் காணாது போல இருந்தால்... குடும்பத்திலே சண்டை சச்சரவு இல்லாமல் இருக்கும்.

தானே நாலுவாட்டி பள்ளத்திலே விழுந்து, எழுந்து ஒழுங்கு படுத்திக் கொண்டு வருவான் கணவன் என்பவன்.

பெண்ணுக்குப் பெண் நகைகள் அவசியமல்ல. உள்ளத் தில் பொறுமையும், உதட்டில் புன்னகையும் ரொம்ப அவசியம்னு பெரியவங்க சொல்வதில் நிரம்ப உண்மையிருக்கு.

தப்பு செய்துவிட்டு, ஒன்றுமே நடக்காதது போன்ற பாவனையில் இப்பொழுது உள்ளே வந்து படுக்கையில் சரிந்து கொள்ளப் போகிற மனோகரனிடம் அவள் பொறுமையாகவா இருக்க வேண்டும்?

ஆத்திரத்தில் மனம் குமுறிக் கொந்தளிக்கும்போது எப்படிப் பொறுமையாக இருப்பது?

சண்டை போட்டு, இரவில் அந்த நேரத்தில் அது எல்லோர் காதுகளிலும் கேட்டு பெரிய கலாட்டாவாகி விட்டால்!

வேண்டாம் இந்த வாழ்க்கை என்று அவள் அவனை உதறி விட்டுத் திரும்பப் பிறந்த வீட்டுக்குப் போய்விட முடியுமா?

போனால் அங்கே என்ன வரவேற்பு கிடைக்கும்...?

''ஒவ்வொரு குடும்பத்தில் ஒவ்வொரு விஷயம் இருக்கும். அதையெல்லாம் அனுசரிச்சுக் கொண்டு போறவதான் குடும்பப் பெண் மத்தவங்க குப்பைக்குச் சமம்.''

கணவனோட, சண்டை போட்டுக்கொண்டு இரு வந்து எங்க மானத்தைக் கப்பல் ஏத்தணும்னு உ ஆசையா? என்று பெற்றோர்களும் உறவினர்களும் சத் வார்களோ?

கணவனது வீடும் வேண்டாம். பிறந்த வீடும் தேவை யில்லை. நானே என்னைக் காத்துக் கொள்வேன் என்று வீம்பாகப் பேச அவளுக்குப் பொருளாதாரத் தகுதி எங்கு இருக்கிறது.

''நான் எங்கேயாவது போய் பிழைச்சுக்கிறேன்'' என்று சவால் விட்டுவிட்டு ஒரு ஆண் மகனைப் போல பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஒரு பெண் வெளி நடப்பு செய்ய இயலுமா?

அவளது அழகும் இளமையுமே அவளுக்குப் பெரும் எதிரிகளாயிற்றே. நான்கு சுவர் கொண்ட ஒரு வீட்டின் பாதுகாப்பு ஒரு பெண்ணுக்கு அவசியம் தேவை. எந்த வயதிலும் தேவை...

''இப்படி ஒரு சங்கதியிருப்பதைத் தெரிஞ்சும், நீங்க என்னைத் தேர்ந்தெடுத்து உங்க மகனுக்குக் கட்டி வச்சது நியாயமா''ன்னு மாமனார் சரவணன் அய்யாவையே கேட்டு விட்டால்...

கேட்க அவளுக்குத் துணிவு வருமா?

படித்து, தொழில் அதிபர்களாக வாழும் மகன்களே அப்பாவுக்கு சலாம் போட்டுக் கொண்டு, பயந்து நடுங்கி வாழும்போது, நேற்று வந்த மருமகள் அவள் அவரிடம் பேசி வெற்றி பெற்றுவிட முடியுமா?

கமலா அண்ணியை காலையில் சந்திக்கும்போது, முதல் கேள்வியாக உண்மையைக் கேட்டுவிட்டால்...?

என்ன சொன்னே? இப்படி ஒரு கதை கட்டிக்கொண்டு வந்திருக்கியா? சாதாரண இடத்தில் இருந்து வந்த பெண் நல்லா வச்சுப் பாதுகாக்கணும்னு நான் பாவபுண்ணியம்



பார்த்ததுக்கு, இப்படி ஒரு பழிச் சொல்லா!'' என்று கதையையே திருப்பி விட்டால்...

அய்யோ! பிறகு வீடு அமர்க்களப்பட்டுப் போய்விடுமே முதல்நாள் அவளுக்குத் தந்த வரவேற்புக்கு எதிராக, வேலையாட்கள் வரை அவளைத் தூசியாக மதித்துத் துச்சப்படுத்துவார்கள். மாமனார் அவளை வரவழைத்துப் பெரிய... கோர்ட்டு விசாரணையே நடத்துவார். பெற்ற வர்கள் கேள்விப்பட்டு, வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு ஓடி வருவார்கள்!

இதைவிட, பேசாது பின்பக்கத்துத் தோட்டத்தில் இருக்கும் கிணற்றில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொண்டு விட்டால்...

''சே! தற்கொலை கோழைகள் கையாளும் முயற்சி, அவள் அதைத் தேட முயலப் போவதில்லை.

பிறகு இதற்கு என்னதான் வழி...?

அனு சொன்னது போல மெல்லக் கணவனை நூல் விட்டுப் பிடித்துக் கொண்டு வெளியேற வேண்டும். அவள் இந்த கூட்டுக் குடித்தனத்தில் தொடர்ந்து வாழ சம்ம திக்கக் கூடாது.

பலவும் எண்ணி ஆத்திரமும் கோபமும் தாங்க முடியாது குமுறிக் கொந்தளித்து சிறிது நேரம் மனம் ஆறுமட்டும் அழுதாள்.

எங்கேயோ கதவு சாத்தப்படும் ஓசை கேட்டதும் அவள் சட்டென்று குளியலறைக்குள் புகுந்து முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டாள். படுக்கையின் ஒரு ஓரத்திலே சுவற்றைப் பார்த்தபடி படுத்துக் கொண்டு கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

வராந்தாவில் காலடி ஓசை துல்லியமாகக் கேட்டது. அவள் நெஞ்சு அதற்கு எதிர் ஒலியாகத் தாளமிட்டது.

மனோகரன், உல்லாசமாக இருக்கும்போது ஏதோ ஒரு சினிமாப் பாட்டை சீட்டியடிப்பதை அவள் அந்த பெ நாள் நெருக்கத்திலே கண்டு கொண்டிருந்தாள். கதவைத் திறந்து கொண்டு சீட்டியடித்தபடி படுக்கையின் விளிம்பில் வந்து அவன் உட்கார்ந்த போது, சட்டென்று எழுந்து உங்கள் காதல் நாடகம் முடிஞ்சு போச்சா? என்று உரத்த குரலில் கத்த வேண்டும் போன்றதொரு ஆவேசமும், ஆத்திரமும் மனதை இரண்டாக வெடிக்கும்படி இறுக்கி யதை உணர்ந்தாள்.

தலைமாட்டிலிருந்த விளக்கை அவன் போட்டான். பளிச்சென்று அறை வெளிச்சத்தில் மூழ்கியது. மூச்சைப் பிடித்துக் கொண்டு ஒரு புழுவைப்போல உடலை சுருட்டிய படி அவள் தூங்கும் பாவனையில் அசையாது கிடந்தாள்.

''சுகந்தி! சுகந்தி!'' மெல்லிய குரலில் கொஞ்சலாகக் கூப்பிட்ட வண்ணம் அவளது தோளை மெல்லத் தொட்டான்.

நேற்றுவரை அவன் தொட்டவுடன் இன்பத்தில் சிலிர்த்துப் போனவள் அவள். இன்று அவன் கரம் நெருப் பாகத் தோள்பட்டையைச் சுட்டது.

''சுகந்திம்மா! தூங்கிட்டியா? பாவம்! பிரயாணக் களைப்பு'' என்றபடி அவன் எழுந்து சென்று கதவைத் தாளிட்டு விட்டு, விளக்கை அணைத்தான்.

அறைக்குள் விடிவிளக்கு எரிந்தது. சிறிது நேரத்தில் ஏ. சி. ஓட்டம் ஏற்படுத்திய ஞர்...சத்தத்துடன் அருகில் படுத்துக் கிடந்த மனோகரனின் குறட்டை போட்டியிட...

சுவற்றையே வெறித்தபடி அவள் அசையாது, உறக்க மின்றி படுத்துக் கிடந்தாள்.

விடியற்காலை வேளை!

கதவு லேசாகத் தட்டப்படும் ஓசை கேட்டது.

எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.



அந்த வேளையில் அவளுக்கு முன்னதாகவே எழுந்து விட்டிருந்த கமலா அண்ணி குளித்து முடித்து மாற்றுடை அணிந்து கொண்டு தயாராக கதவுக்குவெளியே நின்றாள்.

''முதல் நாள். அதனால் நான் சொல்லித் தர்றேன். நாளையில் இருந்து நீ காலை அஞ்சுமணிக்கு எழுந்திருக்கக் கத்துக்கணும். பழக்கமில்லாட்டி அலாரம் கடிகாரத்தை வச்சாவது எழுந்து, குளிச்சு, சுத்தமாக உடுத்திக்கிட்டு கீழே போய் பூஜையறையை சுத்தம் செய்து விளக்கேத் திட்டு, சமையலறையை மேற்பார்வையிட உதவணும்... சீக்கிரம் குளிச்சுட்டு வா...'' உத்திரவிட்டாள்.

''செய்கிற பெரிய தப்பை செய்துகிட்டு, உத்தரவு வேறு போடறீங்களா!'' எரிச்சலுடன் கத்த வேண்டு மென்ற துடிப்பு அவளுக்கு.

கமலாவின் முகத்திலே தெரிந்த கண்டிப்பும், அதிகாரம் தொனித்த அவள் குரலும், வீட்டின் தலைவி என்பதை பறைசாற்றிய அவள் இடுப்பில் குலுங்கிய சாவிக்கொத்தும் அவள் வாயைக் கட்டிவிட்டன.

மனோகரன் எழுந்து கேட்குமுன் அவள் விரைவாகக் குளியலை முடித்துக் கொண்டு ஓரகத்தி உத்தரவுப்படியே மாற்றுடையில் கீழே வந்து, பூஜையறையைச் சுத்தப் படுத்தத் தொடங்கினாள்.

பூஜையறையா அது? அவர்கள் வீட்டின் கூடம்கூட அத்தனை பெரியதாக இருக்கவில்லை.

''பணம் படைத்தவர்கள் கடவுளிடம் தங்களது டாம்பீகத்தைக் காட்ட வேண்டும் போலிருக்கு!' தன்னுள் வெருண்டபடி, பளிங்குக் கல்லில் பாவிய அந்தப் பெரிய அறையின் தரையை ஈரத்துணியால் சுத்தமாக அழுத்தித் துடைத்தாள். அவளது இளைய ஓரகத்தி சொன்னது போல் குத்துவிளக்கு, குடம் என்று எத்தனை பித்தளை சாமான்கள்? அவ்வளவையும் ஒரு கூடையில் அள்ளிக் கொண்டு பின் வராந்தாவுக்குச் சென்று அங்குவசதியாகச்

கட்டி வைத்திருந்த மேடை மீது பரப்பி புளி போட்டு கை சிவக்கத் தேய்த்துத் துருவித் துடைத்தாள். தோட்டத்தில் இருந்த பூவைக் கொய்து கூடையை நிறைத்துக் கொண்டு வந்த வேலைக்காரி அவைகளை விரைவாக வாழை நாரில் தொடுத்து, பூஜையறை வாயிலில் ஒரு பித்தளை தட்டில் வைத்து விட்டுப் போயிருந்தாள்.

அறைக்குள்ளிருந்த அத்தனை சாமிப் படங்களுக்கும் சந்தனப் பொட்டு வைத்து, குங்குமமிட்டு, பூமாலை போட்டு, விளக்குக்கு எண்ணையிட்டு, திரி போட்டு ஏற்றி விட்டு, ஊதுவத்தியைப் புகைக்க விட்டு அவள் வெளி வருவதற்குள் வியர்த்து விறுவிறுத்துப் போனாள்.

பட்டையாகத் திருநீர் வைத்துக்கொண்டு வெள்ளை வேட்டியும் ஜிப்பாவுமாக படுசுத்தமாகத் தெரிந்த மாமனார் சரவணன், அவளைத் தாண்டிக் கொண்டு பூஜையறைக்குள் சென்று, ஒரே பார்வையில் அவளது வேலையைக் கவனித்து, திருப்தியுடன் சம்மணம் கொட்டித் தரைமுன் உட்கார்ந்து ஓங்கிய குரலில், பக்திப் பாடல்களை முணுமுணுக்கத் தொடங்கினார்.

மூத்த மருமகள் மிகவும் சிரத்தையுடன் ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் கல்கண்டு, ஏலக்காய், குங்குமப்பூ போட்டுத் தயாரித்த பாயசத்தைக் கொண்டு வந்து அவர் முன்னால் வைத்துவிட்டுப் போக அதை அவர் கடவுள் படங்களுக்கு நைவேத்தியம் செய்துவிட்டு, மணியடித்து, கற்பூர ஆரத்தியை சுழற்றிவிட்டு வெளியே வந்தார். ஒரு பெரிய யுத்த களத்தில் நின்று வெற்றி வீரராக வந்தது போன்றதொரு பெருமிதம் அவர் முகத்தில் காணப்பட்டது.

சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்த அனு கண்களால் ஜாடை செய்து அவளைத் தன் பக்கம் அழைத்தாள்.



''தினமும் இந்த பாயசப் படையல் இருக்கும் என்று பயந்துவிடாதே. செவ்வாய்கிழமை வெள்ளிக்கிழமை இரண்டு நாட்களில் மட்டும் பாயசம், பொங்கல் என்று கடவுளுக்குப் படையல் அமர்க்களப்படும். மற்ற நாளில் வெறும் வெற்றிலை பாக்குடன் வாழைப்பழம் வச்சுக் கும்பிடுவார். பேசிகிட்டு நிற்கக் கூடாது இப்போ ஆம்பிள்ளைகள் எல்லோரும் காப்பி பலகாரம் சாப்பிட வரப் போறாங்க. அதுக்கு முன்னாடி நாம் எல்லாரும் சாமியறையில் தரையில் விழுந்து கும்பிட்டுவிட்டு வேலையைக் கவனிக்கணும்'' என்று கிசுகிசுத்தாள்.

கமலாவின் பின்னால் சென்று, இவளைப் போலவே தரையில் விழுந்து கடவுள் படங்களை வணங்கிவிட்டு வெளியே வந்தாள் சுகந்தி. அவளது பெற்றோர்களும் பக்தியில் குறைந்தவர்கள் இல்லை ஆனால் இதைப் போல ஒரு கட்டாய ''டிரில்'' அவர்கள் வீட்டில் அனுசரிக்கப் படடதில்லை.

இன்னும் போகப்போக என்னவெல்லாம் அவன் பார்க்கப் போகிறானோ, அனுபவிக்கப் போகிறானோ! எண்ணியபடி மற்ற வேலைகளைக் கவனிக்கமுற்பட்டாள.

ஆண்கள் அனைவரும் வேலைக்குத் திரும்பிப் போனதும், மூன்று மருமகளும் காப்பி பலகாரம் சாப்பிட உட்கார்ந்தனர்.

அனு மிகவும் நாசுக்காக தன் தட்டில் இரண்டே இட்லிகளைப் போட்டுக் கொண்டு மிகவும் நிதானமாகப் பிட்டு சட்டினியில் தொட்டுத் தின்றாள்.

கமலாவுக்கு வீட்டு வேலைகளைப் பற்றிய நினைப்பு. இட்லிகளில் நான்கைப் பரபரப்பாக எடுத்துக் கிண்ணத்தில் போட்டு சாம்பாரை ஊற்றிக் கொண்டு கொண்டு வேகமாக விழுங்கத் தொடங்கினாள்.

அனுவைப் போல சாப்பாட்டிலே தானும் நாசுக்காக இருக்க வேண்டும் என்றதொரு ஆவலில் அவளைப் போல

இரண்டே இட்லிகளைச் சாப்பிட்டாள் சுகந்தி. பகல் சாப்பாடு கிடைக்க இரண்டு மணியாகிவிடும் என்பது அவளுக்குத் தெரியாது.

அனு சாப்பாட்டிலே மிகவும் அசட்டையாக பெரிய மனிதத்தனமாக சிறிது சாப்பிட்டுவிட்டுப் போவது போல் போக்குக் காட்டிவிட்டு தன் அறைக்குள் அலமாரியில் வைத்திருக்கும் பிஸ்கெட்டுகளைப் பசிக்கும் போது நொறுக்குவாள் என்பதெல்லாம் சுகந்திக்குத் தெரிய நியாயமில்லை.

வீட்டில் நடக்கும் அநியாயத்தை அவளறியும்படி செய்த அனு, புத்திசாலிப் பெண். அவள் போகும் வழியில் அவளது பழக்க வழக்கங்களைப் பின்பற்றினால்தான் அந்த வீட்டில் சமாளிக்க இயலும் என்று தன்னுள் எண்ணிக் கொண்டாள் சுகந்தி.

காப்பி பலகாரத்தை முடித்ததும், கமலா எழுந்து கையைக் கழுவிக் கொண்டு வந்தாள்.

''சுகந்தி! இந்த வாரம் முழுவதும் நீதான் சமையலறையை மேற்பார்வையிட்டு, வேலையிலிருந்து வரும் ஆண்பிள்ளைகளுக்குப் பரிமாறி உபசரிக்கப் போறே சட்டுனு எழுந்து கையைக் கழுவிட்டு உள்ளே போ. சமையல் ஆட்கள் உனக்காகக் காத்துக்கிட்டு இருக்காங்க'' என்று உத்தரவிட்டாள்.

கைகழுவும் பீங்கான் அருகே வந்த அனு, மெல்லிய குரலில் சொன்னாள். ''துணி துவைத்து பெட்டி போட்டு, வீட்டை சுத்தம் செய்யும் வேலையை மேற்பார்வையிட எனக்கு அண்ணி உத்தரவிட்டிருக்காங்க!''

''அவங்களுக்கு என்ன வேலையாம் இப்போ?'' கொஞ்சம் ஆதங்கத்துடன் கேட்டாள் சுகந்தி.

''அவங்க இப்போ காரை எடுத்திட்டு, கத்தை பணத்தைப் பையில் போட்டுக்கிட்டு வெளியில் கிளம்பப் போறாங்க. எங்கே, எதுக்கு, என்னு கேட்காதே. செவ்வாய்க் கிழமைகளில் காலை வேளைகளில் பெரியம்மா



வீட்டில் இருக்கமாட்டாங்க. அது கொஞ்ச நாளா மாமூலாகிவிட்ட சங்கதி.''

''எத்தனை காலமா இப்படி நடக்கிறது?'' சுகந்தி திசை திருப்பிவிட்டபடி கேட்டாள்.

''நாலு மாசமா இப்படி நடக்கிறது. நாம வெளியே புறப்படணும்னா முதல்லே நம் கணவர்கிட்டே உத்தரவு வாங்கிக்கணும். பிறகு மாமனாரிடம் மெல்லச் சொல்லி அவர் சரின்னு தலையாட்டணும். கடைசியா இந்தப் பெரிய அண்ணி அனுக்கிரகம் செய்யணும். இந்த வீட்டுக் குள்ளே நுழைஞ்சுட்டா, சொர்க்கத்துக்குள்ளே வந்துட்டதாக நினைக்காதே. இது ஒரு சிறைச்சாலை!''

கீழ் உதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டாள் சுகந்தி. பெரிய வீட்டில் வாழ்க்கைப்பட்டால் இப்படி ஒரு விலங்கு பூட்டப்பட்டுவிடுமா? கண் நிறைந்த கணவன். கனவில்கூட எட்டமுடியாத பெரிய இடத்து மருமகள் என்ற தகுதி என்று அவள் பிரமித்துப் போனதெல்லாம் வீண்!

நடுத்தர வகுப்பில் பிறந்த ஒரு சாதாரணமான மனிதனைக் கட்டிக் கொண்டிருந்தாலே அவள் எவ்வளவோ சுதந்திரத்துடன் வாழ சாத்தியப்பட்டிருக்குமே...

பச்சைக் கிளியின் சிறகை வெட்டுவது போல, பணத்தைக் காட்டி அவளது பெற்றோரையும் வசியப் படுத்தி, அவளது சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டு விட்டாரே சரவணன்.

''சுகந்தி! அங்கே என்னம்மா செய்யறே! நேரமாகலை'' கமலா கூப்பிட்டதும் வெகுண்டு போனாள் அவள்.

''ஓட ஓட இவங்க வேறே விரட்டிக் கொண்டு!'' பற்களைக் கடித்தபடி, உள்ளே சென்றாள்.

காரில் கமலா வெளியே புறப்பட்டுச் சென்றுவிட்டாள்.

அன்றைய சமையல் திட்டத்தை முன்கூட்டியே அவள் சொல்லிவிட்டுப் போயிருந்ததால் சமையல் ஆட்கள் அறைக்குள் துரிதமாக வளைய வந்து கொண்டிருந்தனர்.

வயதில் மூத்தவராகவும், பல ஆண்டு அந்த வீட்டில் சமையல் ஆளாகவும் வேலை பார்த்து வந்த நாகநாதன் தலையில் சுற்றிக் கொண்டிருந்த துண்டை அவிழ்த்து இடுப்பில் வேட்டி மீது கட்டிக் கொண்டு அவளிடம் பணிவாக வந்து நின்றார்.

"இன்றைக்குப் புதிய மருமகள் வந்து சமையல் வேலையைக் கவனிப்பதால் பெரிய ஐயா புதிய மருமகள் சாப்பாட்டை எதிர்பார்ப்பார். அதனாலே நாங்க சுத்து வட்ட காரியங்களைச் செய்து தரோம். நீங்கதான்சமையல் முழுவதையும் கவனிக்கணும். அம்மா எழுதிவச்சுட்டுப் போயிருக்காங்களே, அதுபடி சமைக்கணும்."

பகீர் என்ற உணர்வில் ஆடிப்போய்விட்டாள் சுகந்தி, அவர்கள் வீட்டில் அவள் சமைத்தும் பழகியவள்தான்.

ஆனால், இப்படி ஒரு பெரிய பங்களாவில், ஆட்படை களைச் சேர்த்து இருபது பேர்களுக்கு விமரிசையாக சமைக்க வேண்டுமென்றால்...

அம்மியருகே வைத்திருந்த காகிதத் துண்டை எடுத் துப் பார்த்தாள்.

புடலங்காய் கூட்டு, காரக் குழம்பு, கடைஞ்ச பருப்பு, பீன்ஸ் கூட்டு, தயிர் பச்சடி, காரட் துருவல், பொரிச்ச அப்பளங்கள், புதினா துவையல்.

"இத்தனையும் நான் செய்து முடிக்கணும்!" திகிலு டன் அவள் கேட்டபோது நாகநாதன் சிரித்தார்.

"பெரிய அம்மா இவைகளை ஒரு மணி நேரத்திலே செய்து முடிச்சுட்டு வெளியில் போய் உட்கார்ந்துடுவாங்க. நான் சொல்லித் தர்ரேன் பயப்படாமல் செய்யுங்க. நாளடைவிலே பழக்கமாயிட்டா பிறகு நீங்க எனக்குக் கத்துக் கொடுப்பீங்க."



சமையலை முடித்துவிட்டு, அவள் வெளியே வருவதற் குள் உண்மையாகவே அவள் முதுகு இரண்டாகி விடுவ போல வலித்தது.

"இவ்வளவு நாழியாச்சா? என் வேலைகளை நான் தொடியில் செய்துட்டேன்" என்று அனு சிரித்துக்கொண்டு முன்னறையில் உட்கார்ந்தாள்.

கமலா வீட்டில் இல்லாதபோது அவள் தனக்குக் கொடுக்கப்பட்ட மேற்பார்வை வேலையை ஒரு மூலையில் உதறிவிட்டு, வேலை ஆட்களையே எல்லாவற்றிற்கும் ஏவி விட்டு, ஒரு ஆங்கில நாவலுடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டு விடுவது வழக்கம்

இடையே தாகமெடுத்தபோது, பிரிட்ஜைத் திறந்து ஏதாவது பழரசம் எடுத்துப் பருகுவாள்.

அந்த உண்மையை அவள் ஏன் சொல்லிக் கொள்ள வேண்டும்.

காட்டாம் பூச்சியாக வீட்டுக்குள் வந்திருக்கும் புது மருமகள் முதுகு ஒடிய வேலை செய்யட்டும். மனம் ஒடிய கணவனது நடத்தையைப் பற்றிக் கவலைப்பட்டு வருந்தட்டும்.

அப்பொழுதுதான் அந்தக் கூட்டுக் குடித்தனம் சிதைந்து நாலா பக்கமும் பிரிந்து போகும் வாய்ப்பு ஏற்படும்!

நகத்தைக் கடித்தபடி தன்னுள் சிரித்துக் கொண்டாள், அனு.

## 4

ஒருவழியாக வீட்டின் நிர்வாகத்தில் தன் பங்கினை சுகந்தி சில நாளில் புரிந்து கொண்டு விட்டாள்.

ஆரம்பத்தில் சுமையாகத் தெரிந்த சமையல் வேலை மற்ற வீட்டு வேலைகள் அவளுக்கு இப்போது பளுவாகத் தெரியவில்லை. வேலையாட்கள் கூட உதவ, அவள் அந்த வீட்டின் தலைவரான மாமனார் சரவணனுக்குப் பிடித்த வகையில் உணவைத் தயாரிக்க மிக விரைவில் கற்றுக் கொண்டு விட்டாள்.

ஆனால், மனதில் மட்டும் அந்தச்சந்தேகம் சுமையாக நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு போனது.

இடை இடையே அதனை அமுங்கி விடாது தூபம் போட்டுக் கொண்டிருந்தாள் அனு.

அன்று காலை குழந்தைகள் அமுதனையும், வளர் மதியையும் பள்ளிக்கூடத்துக்குத் தயார் செய்து அனுப்பி வைக்கும் பொறுப்பு அனுவுடையதாகி விட்டிருந்தது.

சமையலறையில் கைவேலையாக இருந்த அண்ணி கமலாவின் உத்தரவு அது. தன்னை ஒத்த ஒரு மருமகள் முதலாவதாக அந்த வீட்டிற்கு வந்து விட்டதால் மாமனாரைக் கைக்குள் போட்டுக் கொண்டு, இப்படி நினைத்த வேலையெல்லாம் செய்ய உத்தரவிடுவதா? அவள் பேச்சுக்குக் கீழ்ப்படிந்து போவதா என்ற ஆத்திரம் அனுவுக்கு. மேலும் அவளுக்குக் குழந்தைகளைக் கொஞ்சவோ அவர்களது விளையாட்டுகளைக் கண்டு மகிழவோ பொறுமை இருந்ததில்லை.

அமுதன் தானே சீருடையைப் போட்டுக் கொண்டு, தலையை மட்டும் சீவி விடும்படி சீப்புடன் அவள் அருகில் வந்து நின்றான். அவனால் அவளுக்கு அதிகம் தொல்லையிருக்கவில்லை.

வளர்மதி வயதில் சின்னவள். சில சமயங்கள் பள்ளிக் கூடம் போக முரண்டு பிடிப்பது வழக்கம். அன்று அவள் அப்படிப்பட்டதொரு மனநிலையில் இருந்தாள். சீருடையை எடுத்துக் கொண்டு அனு அருகில் வந்தபோது



அவள் கையை உதறித் தள்ளிவிட்டு நகர்ந்து கொண்டாள். 'சாக்லெட் வாங்கித் தந்தாதான் பள்ளிக்கூடம் போவேன்' என்று முரண்டு பிடித்தாள்.

"போனால் போ, போகாட்டா உன் விருப்பம். நான் படிச்சுக் குப்பை கொட்டினதுக்கு இந்த வீட்டிலேமாட்டிக் கிட்டு இருக்காப்பல நாளைக்கு நீ ஒருத்தன் வீட்டிலே போய் ஓடாகத் தேயப் போறே. இதுக்குப் படிப்பு என்னத்துக்கு?" எரிச்சலுடன் முணுமுணுத்தபடி அந்தச் சிறுமியைத் தன் அருகே இழுத்து பலவந்தமாக சீருடை அணிவித்தாள். தலையை வேகமாக சீப்பினால் வாரி, சிக்கலாகிவிட்ட முடியை பரக்கென்று இரு பாகமாகப் பிரிக்கவும், வலி தாங்க முடியாது வளர்மதி ஓவென்று கூச்சலிட்டாள்.

"பள்ளிக்கூடம் போக இப்படி ஒரு அடமா?" கோபத்தை அடக்க மாட்டாது ஓங்கி முதுகில் ஒரு அறை வைத்தாள் அனு.

வளர்மதியின் அலறல் வீட்டை இரண்டுபடுத்தியது.

பூஜையறையில் இருந்து வெளிப்பட்ட சரவணன் இடுப்பில் கையை ஊன்றியபடி அவளை வெறித்துப் பார்த்தார்.

அனு நடுநடுங்கிப் போய் விட்டாள். குழந்தையை அடித்ததைக் கிழவர் பார்த்து விட்டாரே?

அவருக்கு ரொம்பவும் செல்லப் பேத்தி வளர்மதி.

"நான் ஒண்ணும் செய்யலை... பின்னல் போட்டு விடத் தலைமுடியைச் சீவினேன். அதுக்குத்தான் அலறு கிறாள்."

"நீ செய்ததைப் பற்றிக் குற்றம் கண்டுபிடிக்கலை. பொய் பேசுகிறாயே அதுதான் எனக்குப் புடிக்காது. போ. உன்னே போய் சுகந்தியை வரச் சொல்" கிழவர் உரத்த குரலில் அதட்டினார்.

பொங்கி வந்த துக்கத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு, வேலையாட்கள் முன் ஏற்பட்ட அவமானத்தை விழுங்கிக் கொண்டு உள்ளே சென்று விட்டாள், அனு.

சுகந்தி வெளியே வந்ததும், மாமனார் உத்திரவுப்படியே வளர்மதியைப் பள்ளிக்கு அனுப்பத் தயாராக்கத் தொடங்கினாள்.

அவள் தன் தங்கை தம்பிகளைத் தினசரி பள்ளிக்கு அனுப்ப அம்மாவுக்கு உதவி செய்து பழக்கப்பட்டவள்.

வளர்மதியைக் கையாள அவளுக்கு சிரமம் இருக்கவில்லை. "ஒரு குட்டிக் கதை சொல்வேன். கேட்டுக்கிட்டு நீ பள்ளிக்கூடத்துக்குப் போவியாம். நீ பெரிய படிப்பு படிச்சு, தலையிலே குல்லாவும், பெரிய கோட்டும் போட்டுக்கிட்டு உங்கப்பா படம் மாடியிலே இருக்கே, அது போல நீயும் படம் எடுக்க வேணாமா?" கண்ணீரிடையே சிரித்தபடி வளர்மதி தலையை அசைத்தாள்.

ஒரு சில நொடியில் குழந்தை அவளது பேச்சுக்குக் கட்டுப்பட்டு, தயாராகிப் பள்ளிக்குக் கிளம்பிவிட்டாள்.

"தாத்தாகிட்ட போய் மன்னிப்பு கேட்டுக்கிட்டு, இனிமே நான் இடக்கு பண்ண மாட்டேன்னு சொல்லிட்டு கிளம்பு," புத்திமதி கூறினாள் சுகந்தி.

"யாரம்மா உனக்கு இப்படிப் பேசக் கத்துக் கொடுத்தது?" என்று கேட்டபடி தமது பேத்தியை வாரி அணைத்து உச்சி முகர்ந்து முத்தமிட்டார் கிழவர்.

"புதுச் சின்னம்மாதான் சொல்லிக் கொடுத்தாங்க" என்றபோது, கிழவர் முகத்திலே பெருமை பொங்கி வழிந்தது.

மூன்று மருமகள்களைத் தேர்ந்தெடுத்ததில், இரண்டு மருமகள்கள் சம்பந்தப்பட்டவரை வெற்றி கண்டுவிட்டிருக்கிறார்.

மூத்தவள் வீட்டைத் தாங்கும் தூணாக, பொறுமையின் இலக்கணமாக இருக்கிறாள்.



மூன்றாமவள், சாதுவாக, நல்லவளாகத் தெரிகிறாள் என்று தனக்குள் எண்ணிக்கொண்டார்.

அன்று பகல் உணவின்போது எல்லோருக்கும் உணவு பரிமாறவேண்டிய வேலை அனுவுடையதாயிருந்தது.

குழம்பைக் கரண்டியால் மொண்டு தட்டில் ஊற்றிய போது அவசரத்தில் மாமனாரது மல் ஜிப்பா மீது ஒரு சொட்டு விழுந்து விட்டது.

நெற்றிக் கண் இல்லாத குறையாக நெருப்பாகவெறித்தார் சரவணன்.

"நானும் கவனிச்சுக் கொண்டுதான் இருக்கேன். வேலையில் நாட்டமில்லாமல் தண்டமேனு எல்லாத்தையும் செய்கிறே. உள்ளே போ. சுகந்தியை வரச்சொல். அந்தப் பெண் வாய்க்கு சுவையா சமைக்கிறாள். அடக்கமாப் பரிமாறுகிறாள். வீட்டுவேலையை அவகிட்டே யிருந்தாவது பார்த்துக் கத்துக்கலாமே!' படபடவென்று மைத்துனர்கள் முன்னிலையில் கிழவர் பொரிந்துவிட்டார்.

முகம் சிவந்து, நெஞ்சு பதற கண் இமைகளை நீர்கட்ட, அனு பாத்திரத்தை அருகில் இருந்த மேசையில் வைத்து விட்டு உள்ளே சென்று விட்டாள்.

"என்னம்மா, சுகந்தி! மோர்க் குழம்பு உன் பக்குவமா? ரொம்பக் காரமில்லாமல் அதே சமயம் வாய்க்கு சுவையாகவும் தயாரிச்சிருக்கியே? வந்த சில நாளிலேயே இந்த வீட்டு சமையல் உனக்குப் படிஞ்சுப் போச்சு இல்லையா?"

அவளை மிகவும் புகழ்ந்தது சமையலறை வாசலில் நின்று கொண்டிருந்த அனுவுக்குக் கேட்டது

அவளால் பொறாமையையும் ஆத்திரத்தையும் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

ம—4

20242
365478

எத்தனையோ சொல்லியும் சுகந்தி எதையும் கண்டு கொண்டதாக நடக்க மாட்டேன் என்கிறாள்.

போதாததற்கு மாமனாரிடம் நல்ல பட்டம் வேறு.

இப்படியே இதை விட்டால் அனுவின் நிலைமை அந்த வீட்டில் படுமோசமாகிவிடும்.

முதல் மருமகளும் மூன்றாவது மருமகளும் ஒன்று கூடிக் கொண்டு விட்டாலும் அதிசயப்படுவதற்கில்லை.

அவர்கள் ஒற்றுமையாகி விட்டால், அந்தக் குடும்பத்தைப் பிரிக்கவே முடியாது. அவன் ஒருக்காலும் தனிக் குடித்தனம் அமைத்துக் கொண்டு வெளியேற முடியாது.

இன்னும் அவள் என்ன செய்தால் சுகந்தியைத் தூண்டி விட இயலும்? மனதிற்குள் பல பல எண்ணி சஞ்சலத்தில் தவித்துக் கொண்டிருந்தாள்.

சுகந்தியை மாமனார் பாராட்டினார். கணவன் மிகவும் மெச்சிக் கொண்டான். வேலையாட்கள் அவளது பேச்சிற்கு மதிப்புக் கொடுத்தனர். வந்த சில நாளிலேயே அவள் அந்தப் பங்களாவில் ஒரு தகுந்த இடத்தைப் பிடித்துக் கொண்டாள். ஆனாலும், அனு விதைத்த சந்தேக விதை அவள் மனதிலே மெல்லத் துளிர்த்து வளரத் தொடங்கியது.

பல காரணம் கொண்டு, அவள் வெளிப்படையாகக் கணவனிடம் அதைப் பற்றிப் பேசாது மவுனமாக இருந்தாள்.

ஒவ்வொரு நாளும் இரவு உணவுக்குப்பின், வீட்டை ஒழுங்கு செய்தபின் மாடிக்கு வந்த கமலா அண்ணியுடன், அவள் கணவன் தனியே உட்கார்ந்து அடிக்குரலில் வார்த்தையாடுவதை அவள் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.



அவர்களுக்குள் அப்படி என்ன ஒரு இரகசியம்? தொடர்ந்து அந்த அசிங்கமான உறவை பலப்படுத்திக் கொள்ள கமலா முயலுகிறாளா?

பால் செம்புடன் உள்ளே வந்தாள் சுகந்தி.

அன்று மனோகரன் அவளுக்கு முன்னதாகவே படுக்கைக்கு வந்திருந்தான்.

தம்ளரில் பாலை ஊற்றிக் கணவனிடம் நீட்டினாள். அவளது கையையும் சேர்த்து பற்றிய மனோகரன் அவளைத் தன் அருகே இழுத்துப் படுக்கை மீது அமர்த்திக் கொண்டான்.

"நமக்குக் கல்யாணமாகி இரண்டு மாதம்கூட ஆகலை அதற்குள் இந்த வீட்டு நிர்வாகத்தை நீ ரொம்ப நல்லாப் புரிஞ்சுகொண்டு விட்டிருக்கே. அப்பாவுக்கு உன்னைப் பற்றி நல்ல அபிப்ராயம்" என்று அவளைக் கனிவுடன் பார்த்தபடி பாலைப் பருகினான்.

'உங்களைப் பற்றி என் அபிப்ராயத்தைக் கேட்க மாட்டீர்களா?...' சொல்ல நா துடித்தது.

"என்ன ஒரு மாதிரி இருக்கே?...ஏன் முகம் சோர்ந்தார் போல இருக்கு?" மெள்ள அவளது முகவாயை நிமிர்த்திக் கொஞ்சலாக வினவினான், மனோகரன்.

'இப்பக் கேட்கலாமா? கேட்டுவிட்டால்...!' மனது படக் படக் என்று தீவிரமாக அடித்துக்கொண்டது.

சாதாரண சங்கதியாக இருந்தால், டக்கென்று கேட்டு விடலாம். இது ஒரு அசிங்கமான பிரச்சனை. இதுவரை அவளிடம் அன்பாக நடந்துகொள்ளும் கணவன், திடீரென்று திசை திரும்பிப் போனால்?...

"என்ன நான் கேட்கிறதுக்கு பதிலே இல்லை?" அவன் மீண்டும் கேட்டபோது, அவளுக்குத் துக்கம்தொண்டையை

அடைத்தது. முத்துக்கலனைப் போலக் கண்ணீர் கன்னத்தில் உருளத் தொடங்கியது.

''என்னத்துக்கு அழறே? என்ன நடந்தது...'' திகைத்துப் போன மனோகரன் அவளது கன்னத்தில் ஓடிய கண்ணீரை மெல்லத் துடைத்தபோது, அவள் நெஞ்சே வெடித்துவிடும் போல விம்மினாள்.

''சுகந்தி! என்னம்மா நடந்தது?... எங்கிட்டே சொல்லு. உன் மேலே உயிரையே வச்சிருக்கேனே?'' அவன் குழைவாகக் கேட்டான்.

இப்பொழுது அவள் தானே சிக்கிக்கொண்டு விட்டாள். என்ன செய்வது?... குழப்பத்திலே வாயில் வந்த ஒரு பொய்யைச் சொன்னாள்.

''எங்க வீட்டு மனுசாள்களைப் பார்க்கணும் போல இருக்கு!'' விசும்பினாள்.

மனோகரன் கடகடவென்று சிரித்துவிட்டான்.

''நான் என்னவோ ஏதோன்னு நினைச்சுக் கலங்கிப் போயிட்டேன். அப்பாகிட்ட உத்திரவு வாங்கிகிட்டு நீ போய்த் தாராளமாப் பார்த்து வரலாமே...இதுக்காகவா அழுதே'' சொல்லியபடி அவளைத் தன் மார்புடன் அணைத்து கொண்டான்.

'இல்லை... இல்லை... அழுகையின் காரணம் வேறு' என்று அவளது இதயம் பக் பக்கென்று தீவிரமாகத் துடித்தது.

ஆனால், உண்மை, ஊமையாகி அவள் மனதிற்குள் புதைந்து கொண்டது.



கணவனது தோளின்மீது முகத்தைப் பதித்துக்கொண்டு சட்டென்று ஆறுதலடைய முடியாது அவள் வெகுநேரம் விசும்பிக் கொண்டிருந்தாள்.

மறுநாள் காலை, பூஜை அறையிலிருந்து வெளிப்பட்ட சரவணன், முன்னறை அருகேயிருந்த தமது தனி அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டார்.

அலுவலகத்தில் இருந்து கொண்டுவரும் சில பைல்களையும், முக்கியமான கடிதங்களையும் பார்க்கும் போதும் அலுவலக ஆட்களை விசாரணை செய்யும் போதும், அவர் இந்த அறையில் இருந்துதான் செயல்படுவது வழக்கம். சுவர் ஓரமாகச் சுவரைத் தொட்டு நின்ற புத்தக அலமாரியில் பொன் எழுத்துக்களைப் புற முதுகில் காட்டியபடி வரிசையாகப் புத்தகங்கள். அதற்கு முன்னால் சுழல் நாற்காலி, முகம் தெரியும் சன்மைகா மேசை, தொலைபேசி, தரையில் கம்பள விரிப்பு, குளிர்ச்சியை வாரிக்கொட்டிய அந்த ஏ.சி. அறைக்குள் அவர் அமர்ந்திருந்தார்.

நாகநாதன் வந்து சொன்னபோது, கை வேலையை விட்டு விட்டு சேலைத் தலைப்பை இழுத்துத் தோளைப் போர்த்திக்கொண்டு, முன் நெற்றியில் பறந்த கூந்தலைச் சரி செய்துகொண்டு, கவலையும் பயமுமாகத்தான் அந்த அறைக்குள் நுழைந்தாள், சுகந்தி.

முன் எச்சரிக்கையாக, விரல்களால் கதவை லேசாகத் தட்டி விட்டு, சத்தமிடாது மெல்ல நடந்து வந்து மேசையருகே நின்றாள்.

கடிதம் ஒன்றை மிகவும் கவனமாகப் படித்து, தமது கையெழுத்தைப் போட்டு, பைலுக்குள்வைத்து மூடிவிட்டு நிமிர்ந்தார் சரவணன்.

''நான்தான் வரச் சொன்னேன். மனோகரன் என்கிட்ட சொன்னான், உனக்குப் பிறந்த வீட்டுக்குப் போகணும்னு ஆசை வந்திருக்காமே உண்மையா?''

திகைப்பும், நடுக்கமுமாக அவள் மெல்ல நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். வார்த்தைகள் வரவில்லை. உதடுகள் அச்சத்தில் நடுங்கின.

உண்மையைச் சொல்லிவிடலாமா? என்று, ஒருகணம் மனம் சஞ்சலப்பட்டது. லேசாகத் தலையை அசைத்து விட்டு, தரையைப் பார்த்தாள்.

''இதுமாதிரி எண்ணம் ஏற்படுவது குழந்தைத்தனம். கல்யாணமான பிறகு ஒரு பெண்ணுக்குக் கணவன் வீடு தான் நிரந்தரமான இருப்பிடம். உரிய காலத்தில் பிறந்த வீட்டுக்குப் போய் வருவது நியாயம். நினைத்தபோது கிளம்பணும்னு நினைக்கிறது தவறு. நீ படிச்ச பெண். வந்து இரண்டு மாதம்கூட ஆகலை. அதுக்குள்ள பிறந்த வீட்டை நினைச்சுக்கொண்டு கிளம்ப ஆசைப்படுவது மதியீனம்'' படபடவென்று பேசினார்.

அவள் மவுனமாக நின்றாள்.

''இந்த வீட்டில் உள்ள மூன்று மருமகள்களையும் நான் ஒரே சீராகத்தான் நடத்திவரேன். அவர்களது பாதுகாப்பில் ஒரே விதமான கவனத்தைத்தான் செலுத்தி வரேன். திடீர்னு உனக்கு மட்டும் தனிப்பட்ட சலுகையை நான் எப்படித் தரமுடியும்?

''மூத்த மருமகள் கமலா, தாய்மையடைஞ்சபோது தான் பிறந்த வீட்டுக்குப் போனாள்.

''இளையவளின் அக்கா மகள் நோய்வாய்ப்பட்டு இறந்தபோது அனுப்பி வச்சேன்.



''நீ ஆசைப்படுகிறாய் என்று உன்னைப் பிறந்த வீட்டுக்கு அனுப்ப முடியாது. வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிறாப்பல உன் மனதுக்குத் தெரிந்தால், இளைய மருமகளோட கோயிலுக்குப் போய் விட்டு வா. உன் கணவன் பொழுதோட வீட்டுக்கு வந்தால், அவனுடன் கடற்கரைக்குக் காரில் போய் விட்டு வா. மீதிப் பொழுது வீட்டு வேலைகளை நன்றாகத் தெரிந்து கொள்வதில் உற்சாகம் காட்டு. நல்ல புத்தகங்களைப் படி. என்ன சொல்றே!''

சொல்வதற்கு அவளுக்கு ஏதும் இல்லை. இரும்பை விடக் கடினமான கொள்கைகள் கொண்ட அந்தக் கிழவரிடம் அவள் தன் மனப் போராட்டத்தை எப்படி விவரிக்க இயலும்?

பிறந்த வீட்டுக்குப் போவதே ஒரு பெரிய தவறுபோல நினைக்கும் அவர், அவள் மனதை உறுத்தும் அந்த சங்கதியைக் கேட்டால் பொங்கிப் போய் விடுவார்.

எங்கள் குடும்ப கவுரவத்தை நாசமாக்கும் வகையில கண்டபடி பேசும் உன்னை நிரந்தரமாக உன் பிறந்த வீட்டுக்கே அனுப்பி விடுகிறேன் என்று கடுமையாகத் தண்டித்து விட்டாலும் வியப்படைவதற்கில்லை.

''என்ன பதிலையே காணலையே!'' கிழவர் லேசாக முறுவலித்தபடி அதட்டினார்.

''மன்னிச்சுக்கோங்க. வீட்டு நினைவு மனதைக் குழப்பிச்சு. நீங்க சொல்றது நியாயம். அதுபடி நானும் நடந்துக்க முயலுகிறேன்.''

''புத்திசாலிப் பெண். போ, போய்க் காரியங்களைக் கவனி'' என்றபடி அவர் இன்னொரு பைலை எடுத்து விரித்து வைத்துக் கொண்டார்.

கழுத்தைப் பிடித்துத் தள்ளிய உணர்வில் அவள் அறையை விட்டு வெளி வந்தாள்.

"நம்ம மாமனார் ஒரு நாள் ஓகோன்னு புகழ்வார். மறு நாள் ஒரேயடியாகக் குழியிலே இறக்கி மண்ணைப் போட்டு மூடி விடுவார். இந்த வீட்டிலே நான் அனுபவிக்காத சங்கடிகள் இல்லை. பருப்பு சாம்பார் தீய்ந்துபோன வாசனை வந்ததுன்னு உன்னைத் திட்டக் கூப்பிட்டு அனுப்பினாரா?" சுகந்தியை நடையில் சந்தித்து அனு ஆவலுடன் கேட்டாள்.

"இல்லை...வீட்டு வேலைகளை நான் இன்னும் சரிவரக் கற்றுக் கொள்ளவில்லைன்னு புத்தி சொல்லக் கூப்பிட்டு அனுப்பினார்."

"நேத்து இவர் கொடுத்த மெடலைத் தூக்கிக் குப்பைக் கூடையில் போடு. வயதாயிடுச்சா, கிழவருக்கு நிதானம் தவறிட்டு வருது. ஒருநாள போல ஒருநாள் பேச மாட்டார். இப்போ ஒண்ணு புரிஞ்சுக்கோ. மாமனார் மகிழ்ச்சியோட பாராட்டுகிறாரேன்னு ஏமாந்துடாதே. அடுத்த நாளே, ஒருசிறு தவறுக்கு வீடே இடிஞ்சுடும் போல இரைஞ்சு அதட்டுவார். இவருக்கு நாம் மருமகள்கள் அல்ல. இவர் விலை கொடுத்து வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கும் கொத்தடிமைகள். எனக்கு இந்த வாழ்க்கை அலுத்துப் போச்சு. உனக்கும் சீக்கிரம் அலுத்து விடும்" கூறிவிட்டு நகர்ந்தாள்.

ஆண் பிள்ளைகள் வேலைக்குப் புறப்பட்டுப் போனதும், கமலா அண்ணியும் வெளியே கிளம்பி விட்டாள். வீட்டு நிர்வாகத்தையும், சமையலையும் சுகந்தியும் அனுவும் சேர்ந்தே கவனிப்பது நலம் என்று ஆலோசனைக் கூறி விட்டுக் காரில் ஏறிக் கொண்டு போய் விட்டாள்.

"சில தினங்களாக நானும் பார்த்திட்டு வரேன். இந்த அண்ணி இப்படி அடிக்கடி வெளியிலே ஏன் போறாங்க?" தனக்குள் பேசுவது போல அனு கூறிக் கொண்டு மெல்ல சுகந்தியைத் திரும்பிப் பார்த்தாள்.



"வெளியில் ஏதாவது முக்கிய காரியம் இருக்கும் அதான் போறாங்க."

"இந்த வீட்டுக்கு வரதுக்கு முந்தி...இப்படி அடிக்கடி வெளியே போக மாட்டாங்க."

"இப்ப எதுக்குப் போறாங்கன்னு நீங்க நினைக்கிறீங்க சொல்லுங்க."

"சுகந்தி! உனக்கு நான் சொன்னா குற்றமாகப்படும். எதுக்குப் போறாங்க? மனோகரனை வெளியே சந்திக்கப் போறாங்க. முன்னெல்லாம் வீட்டிலே மத்தவங்க கண்களில் மண்ணைத் தூவிட்டு, காரியத்தை சாதிக்க முடிஞ்சது. இப்போ நீ ஒருத்தி கண்ணுலே விளக்கெண்ணெயைப் போட்டுகிட்டுப் பார்த்துகிட்டிருக்கியே, அதனாலே..."

அதற்குள் சமையல் ஆள் நாகநாதன் வந்து அவர்களை அழைக்கவே, அத்துடன் அனு தான் திரித்த கதையை நிறுத்திக் கொண்டு விட்டாள்.

ஆனாலும், சுகந்தி மிகவும் குழம்பிப் போய்விட்டாள்.

ஓரகத்தி அனு சொல்வதைப் பற்றி அவள் நேர விசாரித்து உண்மையை அறியாதவரை மனதிற்கு நிம்மதி ஏற்படப் போவதில்லை.

விசாரித்து அறியவும் வழியில்லை. ஐயோ! அவள் என்னதான் செய்வாள்? அன்று அவளது கவனம் முழுவதும் சமையலில் இருக்கவில்லை.

"சின்ன அம்மா... பருப்பிலே முன்னமேயே உப்பு போட்டுட்டீங்க. மறுபடியும் உப்பு ஜாடியிலே ஏன் கை வைக்கிறீங்க?" நாகநாதன் அவளது தவறை எடுத்துச் சொன்னான்.

"ரசம் சூடா இருக்கு எலுமிச்சம் பழத்தை நறுக்கித் தட்டில் வச்சால், வேண்டியவங்க தேவையான அளவு

தாங்களே எடுத்துப் பிழிஞ்சுப்பாங்கன்னு சொல்லி யிருக்கேனே. சின்னவருக்கு தக்காளி மட்டும் போதும். அவருக்கு எலுமிச்சம் சாறு ரசத்திலே பிழிவது பிடிக்காதுன்னு உங்களுக்குத் தெரியுமே!''

இதென்ன இது! அவளுக்கு என்ன ஆகிவிட்டது? சமையல் அறைக் காரியங்களில் ஏன் இப்படி ஒரு தடுமாற்றம்?

அன்று இரவு விமானத்திலே, அவள் கணவன் மனோகரன் தொழில் சம்பந்தமான ஒரு விவகாரத்தைக் கவனிக்கத் தந்தையின் உத்திரவுப்படி பம்பாய்க்குப் புறப்பட்டுவிட்டிருந்தான்.

அவன் இல்லாது அவளுக்கு அந்த வீடே வெறுமையாகி விட்டதொரு பிரமை. இரவு முழுவதும் உறக்கமின்றிப் புரண்டாள். மறுநாள் பொழுதும் நத்தை வேகத்தில் நகர்ந்தது.

மூன்றாவது நாள் வழக்கம் போல் கமலா அவர்களை விட்டு வெளியே சென்றிருந்தாள்.

காலை வீட்டு முகவரிக்கு வந்த தபால்களைக் கட்டாக முன் அறை மேசை மீது கொண்டு வந்து வேலையாள் வைத்ததும், அனு வேகமாக அவைகளைப் புரட்டினாள்.

அவள் முகம் பிரகாசமாகியது.

''சுகந்தி! இங்கே வா!'' பரபரப்புடன் அழைத்தாள்.

என்னவோ ஏதோ என்ற அவசரத்தில் வேலையை அப்படியே போட்டு விட்டு முன்னறைக்கு ஓடி வந்தாள் சுகந்தி.

''இந்தக் கடிதத்தைப் பார்த்தியா?'' அவள் முன் ஒரு வெள்ளைக் கடித உறையை அனு நீட்டினாள்.



சுகந்தியின் நெஞ்சு படபடத்தது. முகவரியில் இருந்த கையெழுத்து அவளது கணவன் மனோகரனுடையது. ஆனால் அது அண்ணி கமலாவுக்கு எழுதப்பட்ட கடிதம்.

''உனக்குக் கூடக் கடிதம் போட முடியலை. ஆனால் கமலா அண்ணிக்குக் கடிதம் போட்டிருக்கார்... என்ன எழுதியிருப்பார்? பிரிச்சுப் பார்த்தால்...''

''ஐயோ! அவங்களுக்கு வந்ததை நாம எப்படித் தொடுகிறது...''

''அவங்களுக்கு வந்ததாகத் தெரிஞ்சாத்தானே. சில சமயம் தபால்கள் குறிப்பிட்ட முகவரிக்கு வராமல் தொலைஞ்சு போறதில்லையா... அதுபோல இது தொலைஞ்சிட்டதுன்னு நினைச்சிடுவோம்.''

''எனக்கு பயமா இருக்கு... இந்த வம்பெல்லாம் வேண்டாம்'' திணறினாள் சுகந்தி.

அவள் கணவன் மனோகரன் அவளுக்கு கடிதம் எழுதாது, அண்ணிக்கு எழுதக் காரணம்? அதில் என்ன எழுதியிருப்பார்... ஆத்திரமும் பொறாமையுமாக அவள் மனம் குமுறிக் கொந்தளித்தது.

''எனக்கு ஒரு யோசனை தோணுது. இந்த உறையைக் கொஞ்ச நேரம் அடுப்பிலே கொதிக்கும் நீரின் ஆவி மீது காட்டினால் மெல்லக் கோந்து இளகிவிடும். உறையைக் கிழிக்காமல் பிரிச்சுப் பார்க்கலாம். நீ சும்மா இரு. நாகநாதனையும் முருகனையும் நான் மெல்லப் பின்பக்கம் அனுப்பிவிட்டு ஒரு விநாடியில் காரியத்தை முடிச்சு எடுத்து வரேன்.''

அனு இந்த மாதிரியான சில்லரை சேட்டைகளில் கைதேர்ந்தவள். ஒரு சில விநாடிகளில் வெற்றியுடன் சமையலறையில் இருந்து வெளிவந்தாள்.

"இப்போது உறையை நாசப்படுத்தாமல் பிரிக்க முடிகிறது. உள்ளே என்ன எழுதியிருக்கார்னு பார்க்கலாமா?..." சுகந்தி அனுமதி தருமுன், அவள் கணவன் அண்ணிக்கு எழுதியிருந்த கடிதத்தைத் துணிச்சலுடன், மெல்லிய குரலில் அவள் காதுகளில் கேட்கும்படி அனு வாசித்தாள்.

"அன்புள்ள அண்ணிக்கு,

நான் உங்களைப் பற்றியே நினைத்துக் கவலைப் பட்டுக் கொண்டு இருக்கிறேன். நான் உங்களுக்கு வாக்களித்தபடி, காரியங்களைக் கவனித்துக் கொள்வேன். நீங்கள் வீணாக மனதை அலட்டிக் கொள்ளாமல் தைரியமாக இருக்க வேண்டும். நான் நாளை இரவு விமானத்தில் திரும்பி விடுவேன். மற்றவை நேரில்.

தங்கள் அன்புள்ள மனோகரன்"

"இந்தக் கடிதத்தைப் பற்றி என்ன நினைக்கிறே? உனக்குக்கூட எழுத முடியாதபடி உன் கணவருக்குத் தலைக்குமேல் அங்கே வேலை. ஆனால் அண்ணிக்கு எழுத முடிகிறது. அவங்களைப் பத்தியே நினைச்சுக்கிட்டிருக்கிறாராமே! கண்றாவி" சொல்லியபடி மறுபடியும் மிகவும் எச்சரிக்கையுடன் கடிதத்தை உறைக்குள் வைத்து, நெகிழ்ந்து விட்டிருந்த பசையினால் நன்றாக ஒட்டினாள். பின்னர் அதை மற்ற கடிதங்களுடன் வைத்தாள்.

பிரமை பிடித்தவள்போல் சுகந்தி தன்னைப் பார்த்துக் கொண்டு நிற்பதை அறிந்து அனுவுக்கு மட்டற்றமகிழ்ச்சி.

மிகவும் தந்திரமாக ஒரு பெரிய வெடியை வைத்து விட்டாள். இனி அது வெடிக்க வேண்டியதுதான் பாக்கி. இந்த முறை சுகந்தி வாயை மூடிக்கொண்டு இருக்க



மாட்டாள். மூக்கும் முகமும் சிவந்து கண்களில் நீர் முட்டிக் கொண்டிருக்கும் அவளது முகமே சொல்கிறதே.

மறுநாள் வரப்போகும் மனோகரனிடம் அவள் மோதப் போகிறாள். வீடு அல்லோலகல்லோலப் படப்போகிறது.

அனுவைப் பார்த்து எரிச்சலுடன் தமது மீசையைத் தடவிக் கொண்ட மாமனார் கிழம் இப்போது என்ன செய்யப் போகிறார்?

தனக்குள்ளே பூரித்துப்போய் கள்ளத்தனமாக சிரித்துக் கொண்டாள், அனு.

## 5

பம்பாயில் இருந்து வந்த மனோகரன் நேரே அலுவலகத்திற்குப் போய்விட்டான்.

இரவு உணவுக்குப் பின் பெரிய அண்ணியுடன் மாடி முன் அறையில் அடிக்குரலில் ஏதோ பேசிவிட்டுப் பின்னர் தான், தனது அறைக்குள் வந்தான். "இந்தா! அதுக்குள்ளே தூங்கிட்டியா?" சுகந்தியைக் குலுக்கி எழுப்பி உட்கார வைத்தான்.

"உனக்காக நான் என்ன வாங்கிட்டு வந்திருக்கேன் தெரியுமா?" கேட்டபடி மகிழ்ச்சியுடன் தனது பயணப் பெட்டியைத் திறந்தான்.

ஒரு சிறு அழகான அட்டைப் பெட்டியை அதிலிருந்து எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"சூரத்தில் இருந்து இப்போ பம்பாயில் கடை வச்சிருக்கான் என் நண்பன் ஒருவன். அவனுடைய நகைக்

கடையில் இருந்து உனக்காக நான் இதை வாங்கிட்டு வந்திருக்கேன். பணம் எதுன்னு கேட்கிறியா? இந்தமாதிரி வெளி ஊர்ப் பயணங்கள்போது கம்பெனி எனக்குத் தரும் இனப்படி செலவில் மிச்சம் பிடிச்சு, உனக்காக ஆசையோட வாங்கிட்டு வந்திருக்கேன். என் உழைப்பில் உனக்கு நான் வாங்கும் முதல் பரிசு இதுதான். அப்பா கொடுத்த செலவுப் பணத்திலிருந்து தேன்நிலவு போன போது சில சாமான்கள் வாங்கித் தந்தேன். ஆனால், இது என் பணம் பெருமையோடு தரேன்'' என்றபடி அவன் கையில் பிடித்திருந்த அட்டைப் பெட்டியைத் திறந்து, பஞ்சுக்குள் பொதிந்து கிடந்த முத்து மாலையை எடுத்து அவள் கழுத்தில் தன் கையால் பூட்டினான்.

''பம்பாயிலே இருந்த இந்த மூணு நாளும் உன் நினைப்புதான் எனக்கு!''

பொய்! பொய்! இதே வார்த்தைகளை அண்ணிக்கு எழுதிய கடிதத்திலும் எழுதியிருக்கீங்க், மனதிற்குள் அவள் ஆத்திரப்பட்டாள்

''மூச்சு விடக்கூட நேரமில்லாமல் கம்பெனி காரியம் சரியா இருந்திச்சு!''

அப்படியா? அண்ணிக்குக் கடிதம் எழுத மட்டும் நிறைய மூச்சு விட்டீங்களா? நினைத்தபடி பற்களைக் கடித்துக் கொண்டாள்.

''இந்த முத்து மாலை உனக்கு ரொம்ப அழகா இருக்கு...கண்ணாடியிலே பார்த்துக்கோயேன்'' கொஞ்சினான் அவன்.

'முத்துப் போலக் கண்ணீர் வடிக்கிறேனே? அது போதாது போல இந்த மாலை வேற எனக்குப் பரிசா?' கோபத்தில் சிரிக்கத் தோன்றியது. ஆனால், அவள்



வாயடைத்துப் போய் விட்டிருந்தாள். ''இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து நீ ஒரு மாதிரி இருக்கே. முகத்திலே சிரிப்பை அதிகம் காணலை. எதையோ பறிகொடுத்துட்டாப்பல ஒரு ஏக்கம் கண்களில் தெரியுது, சுகந்தி! என் கிட்ட சொல், உன் மனதில என்ன குறை?''

அழுகை அவள் நெஞ்சை அடைத்தது. ''குறை ஒண்ணுமில்லை. வீட்டு நினைவு மனதைக் கலவரப் படுத்துது.''

''என்னைவிட உனக்குப் பிறந்தகம் ரொம்ப உசத்தியாக இருக்கில்லையா?'' சிரித்துக் கொண்டே அவள் கன்னத்தை வருடினான்.

''பெத்து வளர்த்த ஆளாக்கினவங்களை, சுலபத்தில் மறக்க முடியாதே!''

பிறந்த வீட்டுக்குக் கிளம்ப அப்பா அனுமதி தரலைன்னு உன் மனதிலே சங்கடம். புரியுது. ஆடி மாதம் வரும்போது உன்னை அனுப்பி வைப்பார்! அதிருக்கட்டும். இந்த இரண்டு மாதத்திலே உனக்கு என் அன்பு திகட்டிப் போச்சா? ஆசை அறுபது நாள் என்பாங்க. நமக்கு கல்யாணமாகி அறுபது நாளுக்கு மேலாயிட்டதாலே உனக்கு ஆசை குறைஞ்சு போச்சா?... மோகம் முப்பது நாள் என்று கூடத்தான் சொல்லுவாங்க. என்னைப் பொறுத்தவரை எனக்கு உன் மேலே ஏற்பட்டிருக்கும் மோகம், ஆயுசுவரை இருக்கும். சரிதானே.''

பொய்! பொய்! சுத்தப் பொய். கூக்குரலிட வேண்டும் போல் இருந்தது. பதிலுக்கு ஈரமாகிவிட்ட, தன் கண்களை மெல்ல துடைத்துக்கொண்டாள்.

''உன் மனதில் ஏதோ ஒரு சங்கடம் இருக்கு. வெளிப்படையா அதை சொல்ல மாட்டேங்குதே? பரவாயில்லை. காலம் வரும்போது தெரிஞ்சுக்குவேன். சுகந்தி, நீ வீணாக அழுதால் என் 'மனம் கவலைப்படுகிறது'' என்றபடி

அவளது கண்ணீரைத் துடைத்துப் பலவாறு சமாதானப் படுத்த முயன்றான்.

மறுநாள் காலை, சாப்பாட்டறை மேசையில் காலைப் பலகாரத்திற்குத் தட்டுகளை வைத்துக் கொண்டிருந்த அனுவின் கண்களில், சுகந்தியின் கழுத்தில் கிடந்த மாலை பளிச்சென்று பட்டுவிட்டது.

''இது என்ன புது நகை...யார் கொடுத்தாங்க?''

''யார் கொடுப்பாங்க! என் கணவர் பம்பாயில் இருந்து வாங்கிக்கொண்டு வந்தார்.''

நாடை இறுக, அவளது கழுத்தை வெறித்துப் பார்த்தாள் அனு.

அவள் அக்கா அவளுக்குக் கல்யாணப் பரிசாக ஒரு ஜோடி முத்துத் தோடு தந்து விட்டிருந்தாள். மாமன் வீட்டிலிருந்து ஒரு ஜதை முத்து வளையல் பரிசாகக் கிட்டியிருந்தன. அவைகளுக்கு ஏற்றாற்போலக் கழுத்தில் அணிய ஒரு முத்துச்சரம் வாங்கித் தரும்படி அவள் தன் கணவனிடம் பலமுறை கேட்டு அலுத்து விட்டிருந்தாள்.

அப்பாவின் உத்திரவின்றி, அவனால் துணிந்து மனைவிக்கு எதுவும் வாங்கித்தர இயலவில்லை. நேற்று வந்தவள் சுகந்தி. அவள் கணவன் நன்கு மனைவிக்குப் பரிசு வாங்கித் தந்திருக்கிறான். அவனை அப்பா அதற்காகத் தண்டித்து விடப் போகிறாரா? இவருக்குத்தான் துப்பில்லை. தன் கணவனை மனதிற்குள் சாடிக்கொண்டாள்.

இதை இப்படியே விட்டுவிடக் கூடாது என்று, கருவிக் கொண்டாள்.

''ஒருபக்கம் தவறு செய்கிறது. அதுக்கு ஈடு போல இப்படி விலை உயர்ந்த ஒரு பரிசைக் கொடுத்து ஏமாற்றுகிறது. இதற்குப் பெயர் லஞ்சம்'' மெல்லிய குரலில் குத்தலாகச் சொல்லிவிட்டு நகர்ந்தாள் அனு.



அவமானத்தில் சுகந்தி குறுகிப் போனாள். அவளது முகமும் காதுகளும் சூடாகின. நெஞ்சு தீவிரமாகத் துடித்தது.

''இவரது தவறான நடத்தையைப் பற்றி விளக்கம் கேட்டு அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்காவிடில், இளைய அண்ணியிடம் தினமும் பேச்சு வாங்கிக் கட்டிக்கொண்டு, வதைபட வேண்டும். எனவும்... ஒரு முடிவை அவள் தேட வேண்டும்'' தன்னுள் எண்ணியபடி, அவள் வேகமாக வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள்.

அன்று இரவு அவள் துணிவையெல்லாம் திரட்டிக் கொண்டு மனதை உறுத்திய அந்த சங்கதியைப் பற்றி, மெல்லக் கணவனிடம் கேட்டு விட்டாள். ''ஆமாம், உங்க பெரிய அண்ணியோட சில நாளாத் தனியா ஏதோ பேசுகிறீங்களே, அது என்னவாம்?''

மனோகரன் முகத்திலிருந்து சிரிப்பு மறைந்து போனது. ''உனக்குத் தெரிய வேண்டிய சங்கதியாக இருந்தால் முன்னமையே சொல்லியிருப்பேன்.''

''கம்பெனி சம்பந்தப்பட்டது ஏதாவது பேசுறீங்களா? நானும் தெரிஞ்சு வச்சுக்கொண்டு உதவலாமேன்னு கேட்டேன். அது தப்பா?''

''ரொம்பத் தப்பு! அண்ணி சம்பந்தப்பட்ட ஏதோ ஒரு முக்கிய சங்கதி. அதைப்பத்தி உன்கிட்ட நான் பேச விரும்பலை.''

அவள் நெஞ்சு கோபத்தில் கொதித்தது. கட்டின மனைவியை விட வயதில் பெரியவளான அண்ணியிடம் ஒரு கிறக்கமா?...கேட்கவே அசிங்கமாக இருக்கிறது? அவங்க சம்பந்தப்பட்ட சங்கதியாம், எனக்குப் புரியலையா? தன்னுள் வெகுண்டாள். மேலே பேசாது மவுனமாகினாள்.

"இதோ பார்! நீ பிறத்தியாரின் சொந்த சங்கதிகளில் தலையிடறதை இன்றோட நிறுத்திக்கோ. எனக்கு சாதாரணமாகக் கோபம் வராது. வந்தால்..." என்று முடிக்காது அவளை உறுத்துப் பார்த்தான். பின்னர் காலடியில் கிடந்த தலையணையை எட்டி உதைத்துத் தள்ளிவிட்டு, தலைமாட்டில் எரிந்த விளக்கை படக்கென்று அணைத்துவிட்டு, மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டான்.

அந்தக் கேள்வி அவனுக்கு அப்படி ஏன் கோபத்தை உண்டாக்க வேண்டும்? தலையணையை உதைத்ததிற்குப் பதில் அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டிருக்கலாமே?

நடுநடுங்கிப் போய்விட்டாள் சுகந்தி. கிழவர் சரவணன் பிள்ளைகளுக்கும் அப்பனைப் போல முன்கோபம் உண்டு போலும்.

எப்பொழுது சிரிப்பார்கள், எந்த நிமிடம் எரிமலையாவார்கள் என்று கணிப்பு செய்யவே முடியாது போலிருக்கிறதே...

நெஞ்சை இறுக்கிய துக்கத்தை விழுங்கிக்கொண்டு, அவள் வெகு நேரம் உறக்கமின்றி பலவும் சிந்தித்துக் கொண்டு, படுக்கையில் புரண்டு அசையவும் பயந்து, ஒரே நிலையில் கட்டையாகக் கிடந்தாள்.

அனு விடிவிளக்கைப் போட்டுவிட்டு, தன் படுக்கையில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவள் கணவன் குமரனுக்கு அன்று தொழிற்சாலை மேற்பார்வையில் மிக்க அலைச்சல். உடல் சோர்ந்து உண்ட மயக்கம் நெட்டித் தள்ளி, முன்னறையில் உட்கார்ந்து டி.வி.யைக்கூடப் பாராது, படுக்க வந்து விட்டிருந்தான்.



லேசாகக் குறட்டை எழுப்பிக்கொண்டு கிடந்தவனைத் தட்டி எழுப்பினாள் அனு.

திடுக்கிட்டு விழித்துக்கொண்டு "என்னது? யாருக்கென்ன?" உளறியபடி எழுந்து உட்கார்ந்தான், குமரன்.

சமீப காலமாக அவன் அளவுக்கு மீறிச் சாப்பிடத் தொடங்கியிருந்தான். சட்டையை மீறி வெளியே முட்டிக் கொண்டு நின்ற அவன் வயிற்றைப் பார்த்து அவளுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது.

"வாயைக் கட்டத் தெரியலை. கண்ணைக் கட்டிக் கொண்டு முட்டாளாக வாழ்கிறார் மனிதர்" தன்னுள் அவனைத் திட்டிக் கொண்டாள். பளிச்சென்று குழல் விளக்கைப் போட்டாள்.

கூசிய தன் கண்களை இடுக்கிக்கொண்டு குமரன் மனைவியைப் பரிதாபமாகப் பார்த்தான். "என்ன அனு! ரொம்பக் களைச்சுப்போய் வந்திருக்கேன். நல்ல தூக்கத்திலே எழுப்பி உட்கார்த்தி வச்சா என்ன அர்த்தம்?" சிணுங்கினான்.

"நீங்க தூங்கிக் கொண்டிருந்தால் முடிவில் பட்டை நாமம் சாத்திக்க நேரும். கொஞ்சம் விழிப்பா இருங்கோ. அப்பாவைக் கண்டு நடுங்காமல் துணிவாப் பேசங் கோன்னுதான் சொல்ல எழுப்பினேன்."

"அதுக்கு இப்ப என்ன அவசரம், ராத்திரி வேளையிலே!"

"உங்களோட உட்கார்ந்து நிதானமாப் பேசப் பகலில் எனக்கு ஏது நேரம்? செக்கு மாடாக உழைக்கிறேன். இப்பத்தானே நாம தனியா ஒருசில நிமிடம் பேச முடியும்?"

''சொல்றதைச் சீக்கிரம் சொல்லி முடி'' என்றபடி கொட்டாவி விட்டான் குமரன்.

''பெங்களூரில் உங்கப்பா தனியா ஆரம்பிச்சு இருக்கிற அந்த நிறுவனத்தை யாருக்குக் கொடுக்கப் போறாராம்?''

''அப்பாவின் விருப்பம். நாம என்ன கேட்க முடியும்?''

''அதுதான் இல்லே. உங்களை இங்கேயே தம் காலடியில் வச்சுகிட்டு நல்லா வேலை வாங்கப் பார்க்கிறார் உங்கப்பா, அவருக்கு மனோகரன் என்றாலே கொஞ்சம் கூடுதலான அன்பு! அண்ணன் ஆனந்தன் உபயோகமில்லை பெயருக்குத்தான் வேலைக்குப் போய்விட்டு வருகிற ஆசாமின்னு அவருக்கு நல்லாவே தெரியும்.''

''எல்லாருக்கும் தெரிஞ்ச கதை. அதைப்பத்தி இப்ப என்ன?''

''உங்கப்பாருடைய திட்டம் எனக்கு நல்லாவே புரிஞ்சுட்டது, இல்லாட்டி நீங்க வயதிலும் அனுபவத்திலும் பெரியவர் இருக்கும்போது, தம்பி மனோகரனை அடிக்கடி டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களுக்குக் கம்பெனி காரியமா அனுப்பி வைப்பாரா? உங்க சின்னத் தம்பி லேசுப்பட்டவர் இல்லே.''

''பாவம் அவன் மேலே ஏன் திடீர்னு பழி சுமத்தறே? புதுசா கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்தவன் தன் மனைவியை விட்டுட்டு அப்பா பேச்சுக்கு மதிப்புக் கொடுக்க வெளியூர் போயிட்டு வந்திருக்கான்.''

சும்மா ஒண்ணும் பாவ புண்ணியத்துக்காக அவர் செய்திடலை. வெளியூர் பயணம் அப்படி ஒண்ணும் சிரமமானது இல்லே. விமானப் பயணம், ஐந்து நட்சத்திர ஓட்டல் வசதி, இன்னும் என்ன என்னவோ, யார் கண்டா?



ஆசாமி அந்தச் செலவு இந்தச் செலவுன்னு கம்பெனி கணக்கில் எழுதிட்டு, தன் பெண்டாட்டிக்கு நகை வாங்கிட்டு வந்திருக்கார். அந்த மக்குப் பெண் என்கிட்ட அவள் போட்டுக்கிட்டிருந்த முத்துமாலையைக் காட்டினதாலே தெரிஞ்சது. இல்லாட்டா, நமக்கு விவரம் தெரிய வழி இருந்திருக்காது.''

''என்ன நீ தொண தொணக்கிறே?''

''நான் பேசறது உங்களுக்கு இப்போ கசப்பாதான் தெரியும். நாளைக்கு உங்க தம்பி, இதே போக்கில் போய் தனக்குன்னு கணிசமா பணத்தைச் சுருட்டிக்கிட்டு, மூவர் மண்டையைப் போட்டதும், அண்ணன்களை விட்டுத் தனியாகி விடுவார், அப்போ சொல்லுவீங்க''

''என்னை என்ன பண்ணச் சொல்றே? அப்பாவின் விருப்பப்படிதானே இங்கே எல்லாம் நடக்கிறது.''

''இதுவரை அவர் விருப்பத்துக்கு நாம் ஆடியது போதும்னு சொல்றேன். பெங்களூரில் திறக்கப்போற அந்த நிறுவனத்தை உங்கவசம் கொடுக்கச் சொல்லி உங்க பங்கைக் கேட்டு இப்பவே நாம் பிரிஞ்சு போயிடறது நல்லது. இல்லாட்டி ஏமாந்துடுவோம்.''

''அப்பாகிட்ட பேசற சங்கதியா இது?''

''தலையைக் கொய்துடமாட்டார். தைரியமா நாளைக்கு அவரை ஒரு வார்த்தை கேட்டு வையுங்க. இல்லாட்டி மனோகரன் முந்திக்குவார். பெங்களூரில் உங்கப்பா வாங்கின புது பங்களாவும், அந்த நிறுவனமும் மனோகரனுக்குத்தான்னு ஒரு வார்த்தை என் காதில் பட்டது.''

''அப்படியா?'' தூக்கம் கலைந்து உட்கார்ந்தான் குமரன்.

''அப்பா மோசம் பண்ணுகிறார்னு நினைக்கிறியா?''

''உங்க அப்பாவுக்கு ஓரவஞ்சனை அதிகம். சின்னப் பிள்ளை மீது ரொம்பப் பிரியம். அதனாலே அந்த மகனுக்கு மத்தவங்களைக் காட்டிலும் அதிகப் பங்கு தருவார்.''

''எப்படி அவரிடம் கேட்கமுடியும்? எல்லாம் அவராக சம்பாதிச்ச பணம். ''என் விருப்பப்படி கூடுதலாகவோ குறைவாகவோ தருவேன்''னு சொன்னாலும் சொல்வார்.''

''ஒரு வார்த்தை கேட்காம சும்மா இருந்தால், கையில் வெறும் சட்டியைத் தூக்கிக் கொடுத்துட்டுப் போயிடுவார். பிழைக்கத் தெரியாத மனுசனா இருக்கிங்களே'' சடிந்து கொண்டாள் அனு.

''சரி, நாளைக்குப் பார்க்கலாம்'' சலிப்புடன் படுக்கை மீதுசரிந்து கொண்டான் குமரன்.

மறுநாள் காலை பூஜையறையில் இருந்து வெளிவந்த தந்தையுடன் மனோகரன் பேசப் புறப்பட்டுவிட்டிருந்தான்.

என்ன பேசுவது? எப்படி ஆரம்பிப்பது என்று ஏற்கனவே பல தடவை மனதிற்குள் ஒத்திகை செய்து கொண்டு தயாராகத் தன் கணவனுடன் காத்திருந்த அனுவுக்கு ஏமாற்றம், கோபம்.

வெகுநேரமாகக் கிழவர் தன் கடைசி மகனுடன் அந்த அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. கடைசியில் கவலைபடர்ந்த முகத்துடன் மனோகரன் வெளிப்பட்டான். ''ஆமாம், இவனுக்கு என்ன வந்துவிட்டது?... யாரையோ சாகக்கொடுத்தவன் போல முகம் வாடிப்போய் வருகிறானே?''

தன் கணவனை மெள்ள உசுப்பினாள் அனு.



''பத்திரம், சீக்கிரம் உள்ளே போங்க. இல்லாட்டாக் கிழவர் சாப்பிட எழுந்து வந்துடுவார்'' கெகிகத்தாள்.

மேல்துண்டை உதறித் தோளில் போட்டபடி எழுந்த கிழவரின் புருவங்கள் உயர்ந்தன.

''காலை வேளையில் வீட்டில் இன்னொரு பிரச்சினையா?'' என்றபடி, கண்களால் இரண்டாவது மகன் குமரனையும், அவன் பின்னால், பூனை போல வந்துநின்ற அனுவையும் கவனித்தார்.

வீட்டில் உள்ளவர்களிடமோ, அலுவலகத்து ஊழியர்களிடமோ பேசும்போது நிற்க வைத்தே பேசி முடிப்பார் அந்தக் கண்டிப்பான கிழவர்.

''அலுவலகம் கிளம்ப முக்கால் மணி நேரந்தான் இருக்கு. இன்னமும் நாம் காப்பி பலகாரம சாப்பிடலை. என்ன சங்கதின்னு சட்டுனு சொல்ல முடியுமா?''

குமரன் எச்சிலை விழுங்கிக் கொண்டான். சின்ன வயதில் இருந்து அவனுக்கு அப்பாவிடம் ஒரு மருட்சி பூதம் பிசாசை சந்தித்துவிட்டதை போல, தனியாக அவரிடம் நின்று பேசும்போது, பயத்தில் நிலைகுலைத்து போய் விடுவான். இத்தனை வயதிற்குப் பின்னரும் கல்யாணமாகிய பின்னரும் அவனுக்கு அப்பாவிடமிருந்த அச்சம் சிறிதும் அகலவில்லை.

இந்த அனு கொண்டு வந்து நிறுத்திவிட்டாளேஎன்று உள்ளூரக் குமுறிக்கொண்டு மெல்லிய குரலில் ஆரம்பித்தான்.

'பெங்களூரில் திறக்கப்போற நிறுவனத்தையும், அங்கே வாங்கிப் போட்டிருக்கிற வீட்டையும் யாருக்குக் கொடுக்கப் போறீங்கன்னு...'' பேசமுடியாது தடுமாறினான்.

லேசான ஒரு ஏளனப் புன்னகை கிழவர் உதட்டில் தவழ்ந்தது. ''இந்த விவகாரத்தை உனக்குச் சொன்னது அனு தானே?'' ஆணி அடித்தாற்போல் மணிநர் கேட்டு விட்டார்.

''ஆமாம்!'' என்று சொல்லமுடியாது தலையை அசைத்தான் குமரன்.

''இந்த காலை வேளையில், இங்கே உள்ள தொழிற்சாலை, கடை, அலுவலகம் இதுகளில் எத்தனை வேலை கிடக்கு. அதைப்பற்றி அக்கறைப்படாமல், ஆரம்பிக்கப் போற பெங்களூர் நிறுவனத்தைப் பத்திப்பேசவேண்டியது அவசியமா?'' கிழவர் அதட்டினார்.

''அதை யாருக்குத் தரப் போறீங்கன்னுதானே கேட்கிறேன்.''

''ஏன் நானே அங்கே போய்த் தனிப்பட்ட முறையில் நடத்தப் போறேன்னு வச்சுக்கோயேன்'' கிழவர் கோபத்துடன் சிரித்தார்.

''மனோகரனைவிட நான் பாடுபட்டு உழைக்கிறேன். வெளியூர் பயணச் சலுகைகள் எல்லாத்தையும் நீங்க அவனுக்கே தர்றீங்க. இந்த பெங்களூர் நிறுவனமும் அவனுக்காகத்தான்னு நினைக்கிறேன்...''

''நீ பாடுபட்டு உழைக்கிறதாக சொல்லிட்டால் போதுமா? உன் உழைப்பினால் என்ன பயன் என்கிற கணக்கை நிர்ணயித்துப் பார்க்கிறவன் நான். யார் யாருக்கு என்ன தரணும் எப்பத் தரணும் என்கிறது எனக்குத் தெரியும்.''

''அந்த பெங்களூர் நிறுவனத்தைத் தனக்குக் கொடுத்து அங்கே வாங்கியிருக்கும் வீட்டையும் கொடுத்து, தமது பங்கைத் தந்துவிடும்படி கேட்கிறார்...'' அனு துணிவை



யெல்லாம் திரட்டிக் கொண்டு சட்டென்று சொல்லி விட்டாள் ஆத்திரத்துடன்.

கிழவர் அவளை அதிசயமாகப் பார்த்தார்.

அவள் எதிர்பார்த்தபடி அதற்காக அவர் கூச்சலிட்டோ உரத்த குரலில் பேசியோ அவளை அதட்டவில்லை.

மிகவும் சன்னமான குரலில் கேட்டார்.

'''ஏம்மா! இதெல்லாம் உன் யோசனையா? குமரனுக்கு சொந்தமாகச் சிந்தித்து செயல்படும் புத்தி எப்போதுமே கிடையாது. என் பிள்ளையைப் பத்தி எனக்குத் தெரியாதா? எத்தனை நாளா நீ இந்தத் திட்டத்தை இவனுக்கு உருவேத்திகிட்டு வர்றே?''

''அவர் பச்சைக் குழந்தையா? அவராகத்தான் கேட்கிறார். பெத்த தகப்பனுக்கு மரியாதை கொடுத்து இத்தனை நாளும் வாயை மூடிக்கிட்டு எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டிருந்தார்'' அனு கோபத்துடன் அவரை உறுத்துப் பார்த்தாள்.

''மதிப்புக்குரிய மாமனார்னுகிட்டு நீயும் வாயை மூடிக்கிட்டு இருந்தியாக்கும், இப்போ மூன்றாவதாக வீட்டுக்கு ஒருத்தி வந்துட்டாளேன்னு உன் மனதில் பொறாமை. இங்கே இருக்கப் பிடிக்கலை. மெதுவாப் புருஷனைக் கிளப்பிட்டுப் போகணும்னு திட்டம், இல்லையா?''

அனு மவுனமாக வெறித்தாள்.

''காலை வேளையில் எனக்கு உங்களோடு தகராறு செய்து கொண்டு நிற்கப் பொழுதில்லை. இப்படிப்பட்ட சம்பவங்களை நான் எதிர்பார்த்தே சில ஏற்பாடுகள் செய்துட்டு வரேன். என்னா, என் உயிர் கல்லால கட்டி, சாந்தால பூசி வச்சிருக்கலை. ஒருநாள் போகக்குன்னு

நான் போயிட்டா, என்ன நடக்கும்னு என்னால் இப்பவே ஊகிக்க முடியும்."

"எல்லாரும் நல்லா சுமுகமா இருக்கும்போதே நல்லதை செய்துடலாமே?"

அனு சொன்னதும், கிழவர் அவளை வெறுப்போடு பார்த்தார்.

"நீ வெறும் பட்டதாரி. இந்தப் படிப்புக்கே இத்தனை கேள்வி கேட்கிறே... வக்கீலுக்குப் படிச்சுவிட்டிருந்தால் என்னைக் கிழிச்சுக் கூறு போட்டிருப்பே போலிருக்கு. ஒண்ணு மட்டும் ஞாபகத்திலே வச்சுக்கோ. இந்த சொத்து அத்தனையும் என்னுடையது. வெளியே போங்கோன்னு என் மகன்கள் மூணு பேரையும், அவன் பெண்டாட்டிகளையும் அனுப்பி வைக்க என்னால் முடியும் எந்தக் கோர்ட்டுக்கு நீங்கள் போனாலும் செல்லுபடியாகாது தெரிஞ்சுக்கோங்கோ. அம்மா, அனு! இன்னொரு தடவை இந்த மாதிரி பேசிகிட்டு என் பொழுதை வீணாக்கினியோ, உன்னை உன் பிறந்தகத்திற்கு ஓய்வாக இருக்க அனுப்பி விடுவேன். சொத்தைப் பிரிச்சு நான் கொடுத்த பிறகு நீ உன் கணவனோட வந்து வாழலாம்னு சொல்லி விடுவேன். என் கோபத்தைக் கிளறாதே. பெரியவங்களை எதிர்த்துப் பேசுகிறதை இன்னியோட விட்டுடு" எச்சரிக்கை செய்துவிட்டு அவர்களைத் தாண்டி அறையை விட்டு வெளியேறினார்.

"நான் சொன்னேன், நீ கேட்டியா!" என்று குமரன் மனைவியிடம் சீறினான்.

"கிடக்கார் கிழவர். எத்தனை நாளைக்கு இந்த ஆட்டம்? ஒருநாள், தொப்புனு மாரடைப்பில் மனிதன் அலுவலகத்து இருக்கையிலேயே மண்டையைப் போடப் போறார். என் வயிற்றெரிச்சல் வீண் போகாது" ஆத்திரத்துடன் சூளுரைத்தபடி அனு வெளியே வந்தாள்.



குமரனையும், அனுவையும் பற்றி அக்கறை காட்டாதது போல, தன் இரு மகன்களுடன் அமர்ந்து கிழவர் காலை உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அனுவின் துணிச்சலான தர்க்கத்தினால் மனம் கொதித்துப் போனதையோ, அவர் உணர்வுகள் பொங்கி எழுந்ததையோ அவர் சிறிதும் காட்டிக் கொள்ளவில்லை.

மாறாக, "வெங்காய சாம்பார் ரொம்ப சுவையா இருக்கும்மா... இட்லிக்கு சரியான பொருத்தம் சாம்பார் தான். நீதானே தயார் செய்தே. ரொம்ப கெட்டிக்காரியா இட்டு வர்றே!" என்று தமது கடைக்குட்டி மகனின் மனைவி சுகந்தியை அவர் உரத்த குரலில் பாராட்டிக் கொண்டிருந்தார்.

## 6

அடுத்த மூன்றாம் நாள் காலை ஆண்கள் அலுவலகத்திற்குப் புறப்பட்டுப் போன பின்னர், கமலா அண்ணி வெளியே போகத் தயாராகக் கீழே இறங்கி வந்தாள்.

"நீயும் சுகந்தியும் வீட்டையும் மற்ற வேலைகளையும் கவனிச்சுக்கணும். நான் திரும்ப நேரமாகும்" என்று கூறியதைக் கேட்டு, முகம் சுருங்கிப் போனாள், அனு.

மாமனார் மட்டந்தட்டிப் பேசியதிலிருந்து அவள் மனம் குமைந்து போய் விட்டிருந்தாள்.

"அதிகாரம் செய்கிற மட்டும் செய்து கொண்டிரு. விரைவில் நானும் என் கணவனும் இந்த நரகத்தை விட்டு வெளியேறி விடப் போகிறோம்" என்று தனக்குள் எரிச்சலுடன் எண்ணியபடி பதிலளிக்காது தலையை ஆட்டினாள்.

"சுகந்தி! சாப்பாட்டுக்கு அவங்கள்ளாம் வருவாங்க. நல்லா கவனிச்சுக்கோம்மா" சொல்லியபடி தன் தோள்ப் பையை எடுத்துக் கொண்டாள் கமலா.

"அப்படின்னா நீங்கள் பகல் பொழுது கூட வீட்டுக்குத் திரும்ப மாட்டீங்களா? எங்கே அண்ணி போகப் போறீங்க?" கேட்க வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு.

ஆனால், மர்மமாகப் பேசிய பெரியவளிடம் குறுக்குக் கேள்வி கேட்க அச்சமாக இருந்தது. கமலா அண்ணியின் சொந்த சங்கதிகளில் அவள் தலையிடுவது தவறு என்று கணவன் சொல்லியிருந்தது சுகந்தியின் மனதைக் குடைந்தது.

எங்கேயோ போகட்டும். நமக்கென்ன என்று எண்ணியபடி, "ஆகட்டும் அண்ணி. எல்லாத்தையும் கவனிச்சுக்கிறேன்" என்றாள் சன்னமான குரலில்.

சொல்லி வைத்தாற்போல் வாசலில் கார் வந்து நின்றது. அலுவலகத்தில் இருந்து தன் காரை ஓட்டிக் கொண்டு திரும்பி வந்திருந்தான் மனோகரன்.

கமலா அண்ணி வேகமாக வெளியேறி முன்பக்கத்து இருக்கையில் மனோகரன் பக்கத்தில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

உள்ளே வந்து மனைவியிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாது அவன் வண்டியை அவசரமாக ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

அனு அவளைப் பார்த்து ஏளனமாக முறுவலித்து விட்டு, முன்னறையை சுத்தம் செய்து கொண்டிருந்த வேலையாட்களைக் கவனிக்கச் சென்றுவிட்டாள்.

ஆயிரம் ஊசிகளால் நெஞ்சைக் குத்திவிட்டது போன்ற வேதனையில் தவித்துப் போனாள் சுகந்தி.



அலுவலகத்தில் இருந்து அவசரமாக அண்ணியை அழைத்துப் போக காரணம்?

வண்டியோட்டுகிறவர் இருக்கும்போது மனோகரன் வந்து ஏன் அழைத்து போக வேண்டும்?

இதில் ஏதோ ஒரு சூது இருக்கிறது. எத்தனை நாளைக்கு அவள் இந்த அக்கிரமத்தைப் பார்த்துக் கொண்டு பேசாமல் இருப்பது!

இப்படி, அண்ணியுடன் சுத்திக் கொண்டிருந்தால் பெரியவர் கண்களில் படாமலா போய்விடும்?

பணக்காரர் வீட்டு மருமகளாக அவள் பால் சோறு தின்று கொண்டிருப்பதாகப் பெற்றவர்கள் மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

சாகவும் முடியாது. பிழைக்கவும் வகை இல்லாமல் அவள் தவித்துக்கொண்டு நிற்பது அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

சிறிது நேரம் சமையலறையில் வளைய வந்தாள். அவளுக்கு வேலை ஓடவில்லை. இந்நேரம் மனோகரன் அலுவலகம் திரும்பியிருக்க வேண்டும்.

தொலைபேசியில் தைரியமாகக் கேட்டுவிட்டால்...?

ஓசைப்படாது மாடிப் பக்கம் விரைந்து தன் அறைக் கதவை மூடிக்கொண்டாள்.

முன்பு ஒரு தடவை அவள்தன் கணவனை அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டிருக்கிறாள்.

அனு வந்ததும் வராததுமாகச் சொன்ன திடுக்கிடும் தகவல்களில் மனம் அதிர்ந்துபோய், கணவன் உண்மையில் அலுவலகத்தில்தான் இருக்கிறானா? அல்லது வெளியே

புறப்பட்டுப் போன கமலா அண்ணியை சந்திக்கப் போயிருக்கிறானா? என்று துப்பு துலக்கத்தான் போன் செய்தான்.

"என்ன, சுகந்தியா? அலுவலகத்துக்கு அனாவசியமாகத் தொலைபேசியில் கூப்பிட்டுப் பொழுதை வீணாக்குவது அப்பாவுக்குப் பிடிக்காது, சீக்கிரம் சொல்" அதட்டினான் அவன்.

"உங்கள் சட்டைப் பையில் மணிபர்சை வைத்து விட்டுப் போயிருந்தீங்க. அதைச் சொல்லத்தான்' நல்லவேளை அவனது மறதி அவளுக்கு சட்டென்று கைகொடுத்தது.

"பணம் இல்லாமல் நான் வீடு திரும்பத் தவிச்சுப் போயிடுவேன்னு நினைக்கிறியா? பைத்தியம். வேலை தலைக்கு மேலே குவிஞ்சு கிடக்கு..."

அவன் வைக்குமுன் தொலைபேசியை அவள் வைத்து விட்டாள்.

இந்தத் தடவை அவன் என்ன காரணம் சொல்லுவான்?

ஓ! ஞாபகத்துக்கு வருகிறதே! கைக் கடிகாரத்தை அவிழ்த்து அலங்கார மேசை மேல் வைத்து விட்டுப் போய் விட்டார். அதைப் பற்றிச் சொன்னால் போச்சு?

துணிவுடன் அவசரமாக அலுவலக எண்களைச் சுழற்றினாள்.

"மனோகரன் அவர்களா? அவர் வெளியில் போயிருக்கிறார். எப்ப வருவார்னு சொல்ல முடியாது. நீங்கயார்னு சொன்னா..." வரவேற்பு பெண் பணிவுடன் கேட்டாள்.

"பரவாயில்லை" என்று டக்கென்று தொலைபேசியின் தொடர்பைத் துண்டித்துக் கொண்டாள். மனம்



விளக்கம் இல்லாத குருட்டு யோசனைகளில் தவியாகத் தவித்துப் புலம்பியது.

கீழே அவள் இறங்கி வரும்போது எதிரே வந்து நின்றாள், அனு.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, லேசாக சிரித்தாள்.

"தொலைபேசியில் உன் கணவரைக் கூப்பிட்டியா? அவர் அங்கே இல்லையென்னதும் மனசுக்கு வேதனையா இருக்கிறது அப்படித்தானே?"

"நான் கூப்பிட்டது எப்படித் தெரியும்?" கோபமாகக் கேட்டாள் சுகந்தி.

"நீ சுத்த முட்டாள். உன் அறையில் தொலைபேசி எண்களைச் சுழற்றும்போது வரவேற்பறை தொலைபேசியும் கிணுகிணுக்கும். நான் எடுத்தேன். நீ பேசுறது கேட்டது. இப்ப சொல்றேன் தெரிஞ்சுக்கோ. கொஞ்சம் துணிவாக இரு. இல்லையென்றால், உன் கதி அதோகதியாகி விடும். பெங்களூர் நிறுவனம் தயாராகியதும் நானும் என் கணவரும் இங்கிருந்து வெளியேறித் தனிக் குடித்தனம் செய்யப் புறப்பட்டு விடுவோம். அதோட நீயும் கமலா அண்ணியும் இழுத்துப் பறிச்சுக் கொண்டு இங்கே வாழப் போறீங்க. அதனாலே, துணிவாக இந்தக் காரியத்துக்கு ஒரு முடிவு கட்டு."

"நீங்க தனிக் குடித்தனம் அமைக்கப் புறப்படப் போறீங்களா? மாமனார் உத்தரவு தந்துட்டாரா?"

"அந்தக் கிழவர்கிட்டே அடிச்சுப் பேசினேன். அசந்து போயிட்டார். அவர் புலியுமில்லே, சிங்கமுமில்லே. நாம் தான் பயந்துக்கிட்டிருக்கிறோம். வெறும் வெத்துவேட்டுன்னு பேசின பிறகு புரிஞ்சுக்கிட்டேன்."

"அப்படியா!" என்றாள் சுகந்தி வியப்புடன், அவள் பிறந்தகம் போக விரும்பியதற்கு, அவனைக் கூப்பிட்டு

எப்படிச் சாடினார். அவள் கோழையாகத் தலையைக் குனிந்து கொண்டு நின்றதால் மனிதன் ரொம்பவே அலட்டிக் கொண்டாரோ! அனுவைப் போல அவளும் அவரிடம் துணிவாகச் சங்கதியைச் சொல்லி, அந்த அக்கிரமத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முயன்றால்...

''அவங்க ரெண்டு பேரும் எங்கே போயிருக்காங்கன்னு தெரியுமா?'' அனு கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு வஞ்சகமாக முறுவலித்தாள் அனு. ''வீட்டு வேலை அப்படியே கிடக்குது. நேரம் வேகமா ஓடுது... ஆண்பிள்ளைகள் சாப்பிடப் பகலுக்கு வந்துடுவாங்க. ரொம்ப நேரம் பேசிக் கொண்டு நிற்க முடியாது!''

''எதுக்குப் போயிருக்காங்களாம்?'' சுகந்தி கோபத்தையும் துயரத்தையும் அடக்கிக் கொண்டு, அடிக்குரலில் கேட்டாள்.

''கமலா அண்ணியை ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்க மனோகரன் வந்து கூட்டிப் போயிருக்கிறார்!'

''அண்ணிக்கு உடம்புக்கு என்ன?''

''உன்னைப் பைத்தியம்னு நினைக்கிறதான்னு புரியலை. இந்த வயதில் பெண்களுக்கு வரும் சாதாரண வியாதிதான்.''

''கமலா தாய்மையடைஞ்சிருக்காங்கன்னு சொல்றீங்களா!''

''சாதாரணமாக நீயும் நானும் தாய்மை அடைஞ்சால் அதைக் கொண்டாடி மகிழ்வோம். இங்கே இப்போ உண்டாயிருக்கிற சங்கதி பெரியவருக்குக் கூடத் தெரியக் கூடாத ஒரு அசிங்கம் இன்னும் புரியலையா? இரண்டு போதும், இரண்டுக்கு மேல் வேண்டாம்னு ஆனந்தன்



அனுவை சிகிச்சை செய்து கொண்டு விட்டார். அண்ணி உண்டாயிருக்கிறாங்கன்னா என்ன அர்த்தம்? இன்னும் விளக்கமா சொல்ல எனக்கு வெட்கமா இருக்கு. அதை மேலே வளரவிடாம சிதைக்கத்தான் அவங்க இரண்டு பேரும் சில நாட்களாக சதி செய்திட்டு இருந்தாங்க. கமலா அண்ணி முகத்திலே, உனக்குக் கல்யாணமான அன்னியிலேயிருந்து சிரிப்பே மறைஞ்சு போச்சு. ஒரே கவலைதான்.''

ஆத்திரத்தில் உடல் நடுங்க கீழே விழுந்து விடுவது போன்ற தள்ளாட்டத்தில் சட்டென்று மாடிப்படியின் கைப் பிடியை, வேகமாகப் பற்றிக் கொண்டு நின்றாள் சுகந்தி.

'இப்படி ஒரு அக்கிரமம் நடக்குமா? அவளது கணவன் நடத்தையில் இத்தனை மட்டமானவனா?'

பணக்காரர்கள், பங்களாவாசிகள் காரும் ஆட்களுமாக வாழ்வதாக வெளி உலகம் நினைத்து வியக்கிறது. உள்ளே வந்து பார்த்தால்தானே, சமூகத்தின் அடிப்படையான சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக அசிங்கமாக அவலமாக பயங்கரமாக வாழ்கிறார்கள் என்பது புரியும்!

''அம்மா! இன்னும் சமையலைப்பத்தி எதும் சொல்லலையே?'' நாகநாதன் குரல் கொடுக்க, இருவரும் திடுக்கிட்டு உள்ளே திரும்பினர்.

கனவில் நடப்பதுபோல அறைக்குள்ளே வளைய வந்தாள் சுகந்தி. என்ன செய்கிறோம் என்று நினைப்பின்றி காரியங்களைக் கவனித்தாள்.

ஏதோ சிந்தனையில், அடுப்பில் சூடாகிவிட்ட பாத்திரத்தைக் கையால் தொட்டுவிட்டு, ''ஐய்யோ... அம்மா...'' என்று, தாங்க முடியாத எரிச்சலில் அவள் கிரீச்சிட்டு அலறிவிட்டாள். பாத்திரத்தின் விளிம்பு விரலில் நெருப்பாகச் சுட்டுவிட்டது.

''அம்மா! கைப்பிடிக்கும் துணியை வச்சுத் தூக்குங் கோன்னு சொல்லிட்டே இருந்தேன்'' என்று முதல் உதவி செய்யப் புறப்பட்டான், நாகநாதன்.

எல்லாவித சிகிச்சைக்குப் பின்னும், விரலில் லேசான எரிச்சல். மனதிலோ...திகுதிகுவென்று கோபம்கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது.

பகல் உணவிற்கு வீட்டுக்கு வந்த ஆண் பிள்ளைகளுக்கு அனு பரிமாறினாள்.

சாப்பிடும்போது வழக்கமாக அவர்களிடையே அடி படும் பேச்சும் சிரிப்பும் இன்றி, சாப்பாட்டறை அமைதி யில் மூழ்கியிருந்தது.

மனோகரன் கவலைபிடித்தவனாகக் காணப்பட்டான்

கையைக் கழுவிக் கொண்டதும், அவர்கள் உடனடி யாகக் கிளம்பிவிட்டனர்.

தன்னிடம் சொல்லிக்கொண்டு போக வருவானென்று சுகந்தி நடையில் சிறிது நேரம் நின்றதுதான் மிச்சம். அவன் எல்லோரையும்விட முன்னதாகப் புறப்பட்டுக் காரில் ஏறிக் கொண்டு விரைந்தான்.

சந்தேகமேயில்லை! தனியார் மருத்துவமனையில் அனுமதித்திருக்கும் தன் அன்புக்கு உகந்த அண்ணியைப் போய்ப் பார்க்கத்தான் இந்த அவசரம். மனைவியைக் கூடத் திரும்பிப் பார்க்க முடியாதபடி... அண்ணி பக்கம் அப்படி ஒரு சார்பா!

எத்தனை நாள் அவள் இந்தக் கொடுமையைப் பொறுத் துக் கொண்டிருப்பது! சீறி எழுந்து, சண்டை போட்டு வீட்டில் ரகளை செய்ய அவளுக்குத் துணிவு வரமாட்டேன் என்கிறதே!



அன்று பகல் அவள் சாப்பாட்டில் நாட்டமின்றி, தட்டில் பரிமாறப்பட்ட உணவு வகைகளை ஒதுக்கிவிட்டு மோரும் சோறும் போட்டுத் தின்றுவிட்டு எழுந்து விட்டாள்.

மாலை மனோகரன் அலுவலகத்திலிருந்து திரும்பிய போது கமலா அண்ணியையும் கூட்டிக் கொண்டு வந்திருந் தான்.

''இந்தக் காரியமெல்லாம் ஒரு நாள் வேலைபோதும், இதைப் பற்றி யாருக்குத் தெரியும். முன்பின் செத்திருந் தால்தானே சுடுகாடு தெரியும்!'' என்று கோபத்துடன் குமைந்த சுகந்தி, சமையற்கட்டிடையே முகாமிட்டுக் கொண்டிருந்தாள்.

சிறிது பொழுதில் அவளைப் பெரியவர் அழைப்பதாக வீட்டு வேலையாள் ஒருவன் வேகமாக ஓடிவந்து சொன் னான்.

அவரது அலுவலக அறைக்குள் சுழல் நாற்காலியில் சரவணன் சாய்ந்து கொண்டிருந்தார்.

''உன்னைத்தான் இப்போ இந்த வீட்டு நிர்வாகம் நம்பியிருக்கு. அதனாலேதான் கூப்பிட்டு அனுப்பிச்சேன் கமலாவுக்கு உடம்புக்கு சுகம் இல்லை. ரெண்டுநாள் ஓய்வாப் படுக்கையில் இருக்கணும்னு டாக்டர் சொல்லி யிருக்கார். குழந்தை அமுதன் வளர்மதி இருவரும் அவளைத் தொந்திரவு செய்யாமல் நீதான் பார்த்துக்க ணும். கமலாவுக்குப் பத்தியமா சாப்பாடு தந்து கவனிச் சுக்கணும்.''

சுகந்தி மவுனமாக நின்றாள். கமலாவுக்கு உடம்புக்கு என்ன என்கிற சங்கதி கிழவருக்குத் தெரியாமலா இருக்கும் தெரிந்திருப்பதால்தான் அந்த அசிங்கத்தை மற்றவர்கள் காணாமல் மறைக்கப் பார்க்கிறாரா?

''அனுவிடம் இந்த பொறுப்பெல்லாம் கொடுக்க நான் விரும்பலை. எல்லா சமீப காலத்திலே அவள் ஒரு மாதிரி மாறிக்கிட்டு வருவதை நான் கவனிச்சுக்கொண்டு வரேன். அவளுக்கு தனிக்குடித்தனம் செய்ய வேணும்னு ஆசை வந்திருக்கு.''

''உனக்கு அப்படி ஒரு ஆசை ஏதும் இல்லையே! இருந்தால் மனம்விட்டுச் சொல்லலாம்'' கிழவர் அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

அதிகாரமும் மிடுக்கும் நிறைந்த அவரது பார்வையில் அவள் வாய் கட்டுண்டு போனது.

'எனக்கும் அப்படி ஒரு ஆசை இருக்கிறது. என் கணவர் பங்கைக் கொடுத்துவிட்டால் நாங்களும் தனியே போய்விடுவோம்' சொல்ல மனம் துடியாகத் துடித்தது.

சிறுவயதில் இருந்து அவள் பெரியவர் பேச்சுக்கு அடங்கிப் போகும் பணிவுமிக்க ஒரு பெண்ணாக வளர்க்கப் பட்டுவிட்டாள். இப்போது திடீரென்று அந்த ஆவேச சக்தி எங்கிருந்து வரும்? கீழ்ப்படிந்து கிழவர் காலடியில் மிதி பாயாக அவள் கிடக்க வேண்டியதைத் தவிர வேறு வழி?

''அப்படியெல்லாம் நான் நினைக்கலையே!'' மென்று விழுங்கினாள்.

''உனக்கு இந்த வீட்டில் எங்களோடு சேர்ந்து வாழ்வதில் முழு விருப்பந்தானே!''

''ஆமாம்'' என்று தலையை அசைத்துவிட்டு, கண்கள் கலங்கிப் போனதை அவர் பார்த்துவிடக் கூடாது என்ற பயத்தில், தரைக் கம்பளத்தை வெறித்தாள்.

''சரி, ரொம்ப மகிழ்ச்சி. போய் அண்ணியைக் கவனி. குழந்தைங்க பள்ளிக் கூடத்தில் இருந்து வருவாங்க-



அதுகளை சமாளி'' கிழவர் உத்திரவிட்டு விட்டு, அலமாரியில் இருந்த ஒரு புத்தகத்தை எடுக்கத் திரும்பினார்.

அதுதான் சரியான தருணம் என்று சுகந்தி ஓட்டமாக வெளியேறினாள்.

குழந்தைகள் பள்ளியிலிருந்து வந்தனர். அவர்களைக் கவனித்துவிட்டு, கமலா அண்ணிக்கு சாப்பிடக் கஞ்சி தயார் செய்து எடுத்துக் கொண்டு மாடிப் பக்கம் கிளம்புவதற்குள் பொழுது அமிழ்ந்துவிட்டது.

வெளியே போகத் தயாராகிவிட்டவள்போல, அந்த வேளையில் அனு பட்டுச் சேலை அலங்காரத்தில், மிதமிஞ்சிய ஒப்பனையில் கும்மென்று செண்ட் நல்லணைச் சுற்றிலும் மணக்க தோளில் மாட்டிக் கொண்டிருந்த கனமான பையைக் கையில் அழுத்திப் பிடித்துக்கொண்டு இறங்கி படிகளில் மெல்ல வந்து கொண்டிருந்தாள்.

''அண்ணிக்குப் பணிவிடை செய்யக் கிளம்பிட்டியா? பலே! பலே! இப்படியெல்லாம் நடக்கும்னு நான் எதிர் பார்த்தேன். வீணாகலை நல்லவேளை. நான் தப்பிச்சேன்'' அடிக்குரலில் எளியாகத் தைத்த ஓரகத்தி மெலிதாக சிரித்தாள்.

பதிலளிக்காது சுகந்தி முகம் சிவந்து கோபத்தில் பொங்கிப் போவதைக் காண அனுவுக்குத்தான் எத்தனை ஆனந்தம்? தூங்கிக்கொண்டிருக்கும் தாய்க் குட்டியைச் சீண்டும் பூனையைப் போல அவள், சதா சுகந்தியின் உணர்வுகளை குத்திக் குதறிக் கொண்டு, அதில் இன்பமடைந்து கொண்டிருந்தாள். அப்படி அவளுக்கு ஒரு வக்கிரமான புத்தி.

''ஒரு சங்கதி தெரியுமா? நாங்க இன்னிக்கு ராத்திரி சாப்பாட்டுக்குப் பிறகு ஊருக்குக் கிளம்பிக் கிட்டிருக்கோம் சித்த முன்னே கிழவர் சொல்லியனுப்பினார். நானும் என்

கணவரும் போய் அவரை அவர் அறையில் பார்த்தோம். நாங்க ரெண்டு பேரும் காரில் புறப்பட்டுப்போய் அந்தப் பெங்களூர் வீட்டையும் நிறுவனத்தையும் பார்த்துட்டு வந்து, திருப்தியான்னு அபிப்ராயம் சொல்லணுமாம். நாளை மறுநாள்தான் வருவோம். இனி வீட்டு வேலை முழுவதும் உன் தலையில். நீ கெட்டிக்காரி. சமாளிப்பே. எத்தனைப் பிரச்சினைகள் வந்தாலும் பொறுமையா சமாளிக்கத் தெரிஞ்சவள். 'பை...பை'' என்றபடி இறங்கிக் கீழே ஓடி மறைந்தாள்.

தாடை இறுகிப் போனாள் சுகந்தி. ''அனு மிகவும் கெட்டிக்காரிதான். தான் நினைத்ததை முடித்து விட்டாளே?''

படுக்கையில் இருக்கும் கமலா அண்ணியைக் கவனிப்பதில் இருந்து எல்லா வேலையும் இனி அவளுடையது. அவள் அந்த வீட்டின் உயர் மட்டத்து வேலைக்காரி!

பொங்கிய சினத்தை அடக்கிக்கொண்டு, கஞ்சிப் பாத்திரத்துடன் அவள் கமலா அண்ணியின் அறைக்குள் புகுந்தாள்.

கமலா மிகவும் சோர்வாகப் படுத்துக் கிடந்தாள். முகம் வெளிறிக் காணப்பட்டது.

சுகந்தியைக் கண்டதும் கமலா மெல்லப் படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்தாள்.

கஞ்சியை ஒரு தம்ளரில் நிறைத்து ''அண்ணி! இதை சாப்பிடுங்கோ. ராத்திரி வேளைக்கு இதுபோல திரவமான உணவுதான் சாப்பிடணும்னு டாக்டர் சொன்னாராமே? இவர் வந்து சொல்விட்டுப் போனார். உங்களுக்குப் பிடிக்குமோ என்னவோ, கொஞ்சம் ஜவ்வரிசி போட்டு, கஞ்சி தயாரிச்சு பால், சர்க்கரை கலந்து கொண்டு வந்திருக்கேன். சூடு ஆறுமுன் சாப்பிட்டா நல்லா இருக்கும்'' என்றாள்.



தன் வாழ்வில் மண்ணை அள்ளிப்போடும் இவளுக்கு, நாம் பணிவிடை வேறு செய்யவேண்டியிருக்கே என்று உள்ளூர அவள் மனம் குமுறியது.

கமலாவின் கண்களில் நன்றி தெரிந்தது. ''சுகந்தி, குழந்தைகள் உனக்கு ரொம்பத் தொல்லை தரலையே?'' கேட்டபடியே கஞ்சியைக் குடித்தாள்.

''அனுகூட ரெண்டு நாள் இங்கே இருக்க மாட்டாள். நீ ஒருத்தியா சிரமப்படப் போகிறியேன்னு மனம் அடிச்சுக்குது. நீ செய்கிற இந்த உதவிக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன்.''

''நீங்க எனக்கு ஒரு உதவி செய்தால் நானும் ரொம்பக் கடமைப்பட்டிருப்பேன். என் கணவனை உங்க கைப்பிடியில் இருந்து உதறிவிடுங்கோ. நாங்க ரெண்டு பேரும் எங்கேயாவது கண்காணாத இடத்திலே போய் வாழ்ந்துக்கிறோம்'' அவள் மனம் புலம்பியது. முகத்திலே சோகம் நிறைந்த மெல்லிய சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள்.

''கவலைப்படாதீங்க அண்ணி! நீங்க உடம்பை பத்திரமா பார்த்துக்கோங்க. நான் வீட்டை கவனிச்சுக்கிறேன். வேறே ஏதாச்சும் வேணும்னா கூப்பிடுங்கோ.''

''அந்தப் போர்வையை அலமாரியில் இருந்து எடுத்துப் போர்த்திட்டு, விளக்கை அணைச்சுட்டு, கதவை லேசா சாத்திட்டுப் போம்மா!''

கமலா சொற்படி செய்து முடித்துவிட்டு. வெளியே போகக் கஞ்சிப் பாத்திரத்துடன் சுகந்தி திரும்பியபோது கமலா அவளைக் கூப்பிட்டாள்.

''இன்னிக்கும் நாளைக்கும் மட்டும் குழந்தைகள் அறையிலே அவர்களுக்குத் துணையா நீ படுத்துக்கோம்மா அம்மாவுக்கு என்னவோ ஏதோ வந்திடுச்சுன்னு அவங்க

ரெண்டு பேரும், என்னைப் படுக்கையிலே பார்த்துட்டு அழுதுட்டாங்க. தனியாப் படுத்துத் தூங்கப் பயப்படுவாங்க. இந்த உதவி செய்வியாம்மா?''

சுகந்திக்கு உண்மையிலேயே தாங்க முடியாத கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

அவள் தன்னுடைய கணவனிடம் அன்று என்னென்னவோ துணிவாகப் பேச வேண்டும் என்று மனதிற்குள் திட்டமிட்டிருந்தாள். அவன் படுக்கை அறைக்குள் வரும் போதுதான் அந்தத் தனிமையில்தான் அது சாத்தியப்படும்.

ஒரு சில நிமிடம் அவன் பேசுவான். அந்தப் பேச்சைக் கூட அவள் அனுபவிக்கக்கூடாதா?

பேசாவிட்டாலும் அவன் படுக்கையிலே அருகில் தூங்குகிறான் என்ற நினைப்பு அவளுக்கு ஒரு அமைதியை கொடுத்தது. அந்த அமைதிக்கும் இப்படி ஒரு குறுக்கிடா?

முடியாது. என்னால் இதெல்லாம் செய்ய முடியாது. உங்கள் கணவர் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளட்டுமே என்று சொல்ல வேண்டும்போல நெஞ்சில் இருந்த வார்த்தைகள் வாய்க்குள் வந்துவிட்டன.

''என் கணவருக்கு வீட்டுப் பொறுப்பு ஏதாச்சும் இருந்தா இப்படி உன்னை நான் வற்புறுத்த மாட்டேன். இரவு படுக்குமுன் கூட அவர் கொஞ்சம் மது அருந்துவார். வளர்கிற பிள்ளைகளுக்கு அப்பாவின் துர்பழக்கம் எல்லாம் ஏன் தெரியணும்?''

அம்மாவின் நடத்தையும் தெரியக்கூடாது அல்லவா? சுகந்தியின் மனம் எரிந்தது.

அவள் மறுத்தால், மனோகரன் அவளிடம் கோபம் கொள்ளக்கூடும். அவளது வாழ்க்கை முன் மேல் போட்ட



சீலை. மெல்லக் கிழிபடாது கணவனது மனத் தாங்கலுக்கு ஆளாகாமல், அவனை நாளடைவில் அந்த அசிங்கமான உறவில் இருந்து விடுவித்து அவனுடன் வெளியேறிவிட வேண்டும்.

''சரி அண்ணி, கவலைப்படாமல் தூங்குங்க. நான் பாத்துக்கிறேன்!'' என்று கூறிவிட்டு, அறையைவிட்டு வெளியேறினாள்.

# 7

அன்று ஞாயிற்றுக் கிழமை. அலுவலகத்திற்குக் கிளம்ப வேண்டிய அவசரம் யாருக்கும் இருக்கவில்லை. பள்ளிக்கூடம் அனுப்பக் குழந்தைகளைத் தயாராக்க வேண்டிய நிர்பந்தமும் இருக்கவில்லை.

விடியுமுன்பே எழுந்துவிட்ட கமலா தலைமுழுகிவிட்டு, ஈரமுடியில் துவாலையைச் சுற்றிக் கொண்டு, சுகந்தி தடுத்தும் தானே பூஜையறை வேலைகளைக் கவனித்தாள். பின்னர் சமையல் அறைக்குள் வந்து சுகந்தியுடன் கூட உதவினாள்.

பூஜையை முடித்துக்கொண்டு, சாப்பாட்டு அறையில் வந்து உட்கார்ந்த சரவணன் முகம் கவலையில் கூம்பியிருந்தது. மனோகரன் கூட ஞாயிறு அன்று வரும் நாளேடுகளைப் படிக்காது குளியலுக்குப் பின் நேரே அப்பாவுடன் சாப்பாட்டு அறைக்குள் வந்து உட்கார்ந்து விட்டான்.

வழக்கம்போல் சில நிமிடம் தாமதம் செய்துவிட்டு மெள்ள வந்து கலந்து கொண்டான் மூத்த மகன் ஆனந்தன்.

ஞாயிற்றுக்கிழமைகளில் குழந்தைகளும், அவர்களுடன் சேர்ந்து காப்பிப் பலகாரம் சாப்பிடுவது வழக்கம்,

பள்ளிக்கூடத்துக் கதைகளை அவர்கள் மாறி மாறிச் சொல்ல தாத்தா, மகிழ்ச்சியில் பூரித்துப் போய் சாப்பிடுவார்.

''தாத்தா நேத்து எங்க வகுப்பிலே என்ன நடந்தது தெரியுமா?'' அமுதன் ஒரு கதையை ஆரம்பித்தபோது, சட்டென்று தாத்தா நிமிர்ந்து அவனைப் பார்த்தார்.

''இந்தக் கதைகளை எல்லாம் ராத்திரி சாப்பாட்டின் போது வச்சுக்கலாம். இப்போ யாரும் சத்தம் போடாமல் இட்டுன்னு போட்டதை சாப்பிட்டு விட்டு, மாடியிலே போய்ப் புத்தகத்தை வச்சுப் படிச்சுக்கிட்டிருக்கணும்'' கடுமையான குரலில் அதட்டினார்.

விடுமுறை நாட்களில் அந்த வீட்டில் காலைப் பலகாரத்திற்கு ஆப்பம் செய்வது வழக்கம். மல்லிகைப் பூப்போல, கையால் தொட்டால் துவளும் ஆப்பத்தை மிகவும் பிரியமாக இரண்டுக்கு மேல் கேட்டு வாங்கி சுவைத்து சாப்பிடுவார் கிழவர்.

சுகந்தி அவரது தட்டருகே வந்தபோதே சரவணன் கண்டிப்பாகக் கூறி விட்டார்.

''ஒண்ணே ஒண்ணு வை போதும். துளியளவு தேங்காய்ப் பால் ஊத்தினால் போதும். சர்க்கரையா! தேவையில்லை'' என்றார்.

மனோகரனும் ஆப்பத்தை அதிக விருப்பமின்றி, கடமைக்குத் தின்பவன் போல வேகமாகப் பிட்டு விழுங்கினான்.

விரைவாகக் காலை உணவை முடித்துக் கொண்டு கிழவர் அமைதியின்றி வாயில் வராந்தாவில் முன்னும் பின்னும் உலாவத் தொடங்கினார்.

மனோகரன் தன்னுள் ஏற்பட்ட ஒரு பரபரப்பை அடக்க முடியாதவன் போல நகத்தைக் கடித்துக்கொண்டு



முன்னறையில் ஒரு இருக்கையில் வெளித் தோட்டத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

கமலா வெறும் காப்பியை மட்டும் பருகி விட்டு வெளியே செல்லத் தயாராகியவளாகக் கீழே இறங்கி வந்தாள். அவள் முகம் மிகவும் வெளிறிக் காணப்பட்டது. கண்களில் ஒரு விதமான ஒளி தெரிந்தது.

''நான் வெளியே போக வேண்டியிருப்பதால், நீ தான்...'' மேலே பேச முடியாது திக்கினாள் கமலா.

''நான் எல்லாத்தையும் கவனிச்சுக்கிறேன். நீங்க போய் விட்டு வாங்க. ஆனால், பகல் சாப்பாட்டிற்கு என்ன சமைக்கிறதுன்னு சொல்லலையே?'' சுகந்தி மெல்லிய குரலில் கேட்டபடி பின்னால் வந்து நின்றாள்.

''பகல் பொழுது ஒரு சமயம் பெங்களூரில் இருந்து அனுவும் குமரனும் வருவாங்க. அவங்களுக்கும் சேர்த்து சமையல் செய்து வைக்கிறது நல்லது. உன் மனதுக்குத் தோணினதைச் சமை அம்மா. இன்னிக்கு என்கிட்ட எதுவும் கேட்காதே'' என்று கூறிவிட்டு அவள் வேகமாக முன்னறையைத் தாண்டி வெளியே சென்றாள்.

"அண்ணி! நான் கூட வரவா?" என்று கேட்டபடி மனோகரன் ஓடி வந்தான்.

"வேண்டாம். நானே தனியாப் போய் விட்டு வர விரும்பறேன். டிரைவர் வண்டியை ஓட்டட்டும், கூட நீங்க யாரும் வரத் தேவையில்லை'' அவள் குரலில் துக்கம் தொனித்தது.

''ஏம்மா! பத்து மணிக்குத்தானே நீ அங்கே இருக்கணும்? இப்போ ஒன்பதுதானே ஆகிறது. அதுக்குள்ளே அங்கே போய், என்னம்மா பண்ணப் போறே?'' ஆதங்கத்துடன் கேட்டார் சரவணன்.

"அங்கே உட்கார்ந்துகொண்டு கொஞ்ச நேரம் மன அமைதியோட சிந்திக்க விரும்பறேன் மாமா" என்று கூறிவிட்டு மாடிப்படிகளில் ஆவலுடன் ஓடிவந்து நின்ற தன் குழந்தைகளைக் கனிவுடன் பார்த்தாள். திடீரென்று கண் கலங்கிப்போய் அதற்குமேல் அங்கே நிற்கப் பிடிக்காதவள் போல், வேகமாகப் படியிறங்கித் தயாராகக் காத்து நின்ற காரின் பின் இருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

பேயறைந்துவிட்டது போன்ற முகத்துடன் உள்ளே வந்த மாமனாரையும், கவலையே உருவாகத் தெரிந்த கணவனையும் வியப்புடன் பார்த்தாள் சுகந்தி.

கமலாவுக்கும் அவர்களுக்கும் இடையே ஏதோ ஒரு ரகசியம் உள்ளது. அதை ஏன் அவளுடன் அவர்கள் பங்கிட்டுக் கொள்ளக்கூடாது? கமலா அண்ணி ரொம்பவும் கவலையுடன் கிளம்பித் தனியே ஏன் போகவேண்டும்? அவளுக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

சமையல் அறைக்குள் அவள் திரும்புமுன் பெங்களூருக்குப் போயிருந்த குமாரனும், அனுவும் காரில் வந்து இறங்கினார்கள்.

"அப்பா! அங்கே இப்போ எப்படி இருக்கு தெரியுமா? ஏ.சி. இல்லாமல் நல்லா தூங்கலாம். ஒரே சீராக குளுகுளுன்னு இருக்கு. கடைத்தெருவில் சுத்தினால், களைப்பே தெரியலை" வந்ததும் வராததுமாகப் படபடவென்று உரத்த குரலில் ஆர்ப்பரித்தாள், அனு.

"நான் போய் மாடியறையில் குளிச்சுட்டு வரேன். பசி காதை அடைக்கிறது. இன்னிக்கு டிபன் ஆப்பந்தானே வர்ற வழியிலேயே அதை நினைச்சு சாப்பிடாது வந்திருக்கேன்" என்று சுகந்தியிடம் இரைந்து பேசிவிட்டு மாடிக்கு ஓடினாள் அனு.



கணவன்—மனைவி இருவரும் வீட்டின் நிலைமைக்கு மாறாக மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டனர். அவர்களுக்குப் பெங்களூர் வீடும், அந்த ஊர் வாழ்க்கையும் ஆரம்பிக்கப் போகும் நிறுவனத்தின் அமைப்பும் ரொம்பவும் பிடித்துவிட்டது போலும்.

மூன்று நாள் வெளியூரில் இருந்துவிட்டு வீடு திரும்பியவன், ஒப்புக்குக்கூட கமலா அண்ணி எப்படி இருக்காங்க என்று கேட்கவில்லை. கணவனும் மனைவியும் பஞ்சத்தில் அடிபட்டவர்கள் போல சுகந்தி கொண்டு வந்து, வைத்த ஆப்பத்தையும், காப்பியையும் ஒரு கை பார்த்தனர்.

"மாமா எங்கே? அவர் அறையில்தானே இருக்கார்" என்றபடி எழுந்து அவசரமாகக் கையைக்கழுவிக்கொண்டு கணவனுடன் முன்பக்கம் விரைந்தாள் அனு.

இனிமேல் தனக்கும் அந்த வீட்டின் நிர்வாகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றது போலிருந்தது அவளது செயல்.

வராந்தாவிலே வெகுநேரம் நடந்து கால் ஓய்ந்துவிட்டிருந்த சரவணன், அவர்கள் வந்து இறங்குவதற்கு சற்று முன்னர்தான் தமது அறைக்குள் வந்து உட்கார்ந்து இருந்தார். வாசலில் கார் வந்து நின்றதையும், அவர்கள் ஆர்ப்பாட்டமாக உள்ளே நுழைந்ததையும், அதுவரை அமைதியில் மூழ்கிக்கிடந்த வீட்டில் அதற்குப் பின் கேட்ட சத்தத்தையும் அவர் கண்டும் கேட்டும் கொண்டும்தான் உட்கார்ந்திருந்தார்.

கதவைத் தள்ளித் திறந்துகொண்டு வந்து நின்ற மகனையும், மருமகளையும் கிழவர் கடுமையாகப் பார்த்தார்.

"உங்களுக்குப் பெங்களூர் வாழ்க்கையும் தனிக்குடித்தன அமைப்பும் ரொம்பப் பிடித்துவிட்டிருக்கிறது

என்று புரிகிறது. மற்றவைகளை நாம் பிறகு பேசலாமா? இப்போ நான் கொஞ்ச நேரம் தனியாக இருந்து, சிந்திக்க விரும்பறேன்'' மிகவும் கண்டிப்பாகப் பேசினார்.

இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துக் கொள்வோம் என்ற அசட்டையில இருவரும் தலையை அசைத்துவிட்டு வெளியே வந்தனர்.

''உங்கப்பா என்ன, எதையோ பறிகொடுத்தவர் போல முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிறார்'' ஏளனமாகக் கேட்டாள் அனு.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் பாகப் பிரிவினை சங்கதியைப் பேசி முடித்ததும் நிரந்தரமாக ஒரு பிள்ளையைப் பிரிஞ்சிடுவார் இல்லையா? அதை நினைக்கக் கலங்கிப் போயிருக்கிறார் போலிருக்கு.''

''கடுகு சிறுத்தாலும் காரம் போகாதும்பாங்க. உங்கப்பாவுக்கு நமது திட்டம் தெரிஞ்சு மனுஷனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டும் ரொம்பவும் துணிச்சலா அலட்டிக்கிறார். கிடக்கார் கிழவர்'' என்று கூறிவிட்டு மாடிப் பக்கம் போகத் திரும்பினாள்.

சமையல் அறையில் இருந்து வெளிப்பட்ட சுகந்தியைக் கண்டதும் முகம் சிறுத்துப்போனது.

''இதோ பார் சுகந்தி! எனக்கு பயணக் களைப்புமுதுகை வெட்டுது. உனக்கு வீட்டு வேலையில் கைகொடுக்க என்னால் முடியாது. மேலும் இனிமேல் இந்த வீட்டுக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருக்கப் போறதில்லை அதையும் தெரிஞ்சுக்கோ'' அகங்காரமாகக் கூறிவிட்டு மாடிக்கு விரைந்துவிட்டாள்.

பகல் உணவுத் தயாரிப்பை விரைவாகச் செய்து முடித்து விட்டு வெள்ளி தம்ளரில் மோரை நிரப்பிஎடுத்துக் கொண்டு சுகந்தி மாமனார் தங்கியிருக்கும் முன் பக்கத்து அறைக்கு வந்தாள்.



''இன்னிக்கு எனக்குப் பசியும் இல்லே, தாகமும் இல்லே, பாவம், நீ மறக்காமல் எடுத்து வந்திருக்கே. சாப்பிடறேன்'' என்றபடி தம்ளரை வாங்கி சிறிதளவு மோரைப் பருகிவிட்டு அதை மேசைமீது வைத்தார். கேட்டைத் திறக்கும் ஓசையைத் தொடர்ந்து, கார் பங்களாவின் நடைபாதை மீது விரைந்து வரும் சத்தம் கேட்டதும் கிழவர் பரபரப்படைந்து போனார்.

அது சமயம் மனோகரன ஆவலுடன் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே ஓடி வந்தான்.

''அண்ணி வராங்க அப்பா'' என்றான். அங்கே சுகந்தி நிற்பதைக் கண்டு மேலே பேசாது தயங்கினான்.

''சுகந்தி! நீயும் அப்படி இங்கேயே இரும்மா கமலா வரா. நல்ல சேதி கொண்டு வரட்டும். எனக்குக் கையும் ஓடலை. காலும் ஓடலை'' என்று கிழவர் கூறியதைக் கேட்டு சுகந்திக்குக் குழப்பம்.

கிழவர் தமது இருக்கையில் இருந்து எழுந்து நின்றார். மேல் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார். கழுத்தைத் தடவி விட்டுக் கொண்டு ஆவலுடன் கதவுப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார்.

கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே வந்த கமலாவின் முகத்திலே பெரியதொரு புன்னகை தெரிந்தது.

''மாமா! என்னை வாழ்த்துங்க. மனம் நிறைஞ்சு வாழ்த்துங்க. டாக்டர் நல்ல சேதிதான் சொன்னார். எனக்கு வந்திருப்பது புற்று நோய் இல்லையாம்.

''பரிசோதனை சாலையில் இருந்து வந்த விவரம் பளிச்சுன்னு சொல்லுதாம். எனக்கு வயிற்றிலே வந்திருக்கிற கட்டியை அறுவை சிகிச்சையாலே எடுத்து விட்டால், நான் பூரண சுகமடைஞ்சுடுவேனாம். ஒரு பெரிய பாரம்

தலையிலிருந்து இறங்கினாப்பல இருக்கு'' என்றவள், திடீரென்று விசும்பியபடி மாமனாரின் காலடியில் விழுந்து கும்பிட்டாள்.

''எழுந்திரும்மா! சுத்தப் பைத்தியக்காரப் பெண்ணா இருக்கியே. இப்போ நீ சிரிச்சுகிட்டு இருக்கணும். அதை விட்டுட்டு ஏன் அழுகிறே?''

சுகந்தி குனிந்து கமலாவைத் தூக்கி நறுத்த, அவள் முகத்தை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு பேசினாள்.

''தம்பி மனோகரன் கல்யாணத்தின்போதே எனக்கு உடம்புக்கு முடியாம இருந்தது. பல்லைக் கடிச்சுக்கிட்டு, நான் சமாளிச்சுக் கொண்டிருந்தேன். ரொம்பவும் வயிற்று வலியும், ரத்தப் போக்குமா இண்டாடிப் போனப்போ தான் அந்தப் பெண் டாக்டரைப் போய்ப் பார்த்தேன். அவங்க எனக்குப் புற்று நோய் ஆரம்பமாகியிருப்பதாக சந்தேகப்படுவதாகச் சொன்னதும் ரொம்ப அரண்டு போயிட்டேன்.''

''நாங்களும் ரொம்பக் கவலைப்பட்டுப் போனோமே அம்மா'' கிழவர் கனிவாகச் சொன்னார்.

''சரி, இன்னும் சில மாதத்தில் வியாதி முற்றி இறந்து போய்விடப் போகிறோம். கணவரும் வீட்டையோ, குழந்தைகளையோ, தொழிலையோ, ஒழுங்கா கவனிக்காமல் ஏனோதானோன்னு இருக்கிறாரே! சின்னஞ்சிறுசுகள் அனாதையாயிடுமேன்னு நான் விட்ட கண்ணீர், அழுத அழுகை, மனோகரன் தம்பி மட்டும் எனக்கு ஆறுதல் சொல்லி, தைரியம் கொடுத்து, அப்படி ஏதாச்சும் நேர்ந்துட்டா கூடக் குழந்தைகளுக்கு சேர வேண்டிய சொத்துக்களைப் பாதுகாத்து அதுகளை முன்னுக்குக் கொண்டு வரது தன் கடமைன்னு எனக்கு வாக்குக் கொடுத்தான். மனோகரன் என் கொழுந்தன் மட்டுமல்ல, நான் பெற்றெடுக்காத ஒரு மகன்.''



''அதைப்பத்தி இப்போ என்ன அண்ணி'' மனோகரன் இடைமறித்தான்.

'இல்லேப்பா, நீ உதவி செய்ததைப்பத்தி ஒரு வார்த்தை சொல்லாட்டா மனம் அடங்காது. மனோகரன் நான் இன்னொரு நிபுணரைப் பார்த்து ஆலோசனை கேட்கணும்னு வற்புறுத்தினான். அந்தப் பெரிய டாக்டர் ஒரு சிறு அறுவை சிகிச்சை செய்யணும், சில மணி நேரம் மருத்துவமனையில் இருக்கணும்னார். அந்த சிகிச்சையிலே யிருந்து எடுத்த சிறு தசைப் பகுதியைப் பரிசோதனைக்கு அனுப்பினார். இன்னிக்குக் காலை வந்து பார்க்கும்படி சொன்னார்.''

''நீ அங்கே போய்விட்டு திரும்பறதுக்குள்ளே என்ன சேதி கொண்டுவரப் போகிறியோன்னு நான் செத்துப் போயிட்டேன்' கிழவர் தழுதழுத்தார்.

''ஒருத்தருக்கு மனதாலும் தீங்கு நினைக்காத உங்களுக்கு இப்படி ஒரு வியாதி வரணுமா? டாக்டர் புற்று நோய் இல்லேன்னு சொல்லணும்னு நான் வேண்டாத தெய்வமில்லே, அண்ணி'' மனோகரன் குரல் தடைப்பட்டது.

சுகந்தி அவமானத்தில் சுருங்கிப் போய் தலைகுனிந்தபடி நின்றாள்

''உண்மை இதுவாக இருக்க, அனு சொன்ன பொய்க் கதைகளை நம்பி, ஒழுக்கத்தின் இலக்கணமான அண்ணியைப் பற்றி அசிங்கமாக நினைத்து, கண்ணியமான கணவனைப் பற்றி சந்தேகித்து, அந்த இரண்டு மாத வாழ்க்கையை அவள் நரகமாக்கிக் கொண்டு விட்டாளே!''

களங்கமற்ற அண்ணியை சந்தேகித்த பாவத்துக்குப் பரிகாரம்?...

''சுகந்தி! நீ ரொம்ப நல்ல பெண் அம்மா. இந்த வீட்டில் எனக்கு எல்லா வேலைகளிலும் கைகொடுத்து

ரொம்ப உதவி செய்திருக்கே. என் குழந்தைகளை உன் குழந்தைகளைப் போலப் பார்த்துக்கிட்டிருக்கே. இதுக்குப் பிரதியா நான் என்ன செய்தாலும் தகும்.''

''சுகந்தி மட்டும் இது சமயம் இங்கே இல்லாதிருந்தால், இந்த வேதனையை என்னால் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. பொறுமையிலும் அடக்கத்திலும் அவள் உன்னைப் போலவே இருப்பதைக் கண்டு, நான் ரொம்பவும் பெருமைப் படறேன். இந்த பயங்கரப் பிரச்சினை நம்மைத் திணற வைத்த சமயம் சுகந்தி நிதானமும் பொறுமையுமா வீட்டையும் நம்மையும் கவனித்துக் கொண்டாள். அதுக்காக, நான் அவளுக்கு ஒரு பரிசு தரப் போகிறேன்'' கூறியபடி கிழவர், அறைக்கு மூலையிலிருந்த இரும்பு பீரோவைத் திறந்தார்.

'கமலா! ஞாபகமிருக்கா? ஒருவாட்டி நான் காய்ச்சலில் பத்து நாள் படுத்து விட்டபோது நீ கொஞ்சமும் முகம் கோணாமல், சலிக்காமல் எனக்குப் பணிவிடை செய்தே. அதுக்காக, நான் உனக்கு ஒரு தங்கக் காசு, மகாலட்சுமி அச்சடித்த காசு-என் மனைவி தாலிச் சரட்டில் போட்டுக் கொண்டிருந்ததைக் கொடுத்தேன்.''

''ஆமாம் மாமா! தினமும் நான் என் மாங்கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒத்திக்கும்போது— சரட்டோடு கோத்துக்கிட்டிருக்கும் அந்தப் பொற்காசையும் கண்களில் ஒத்திக் கொண்டு வணங்குவது வழக்கம்.''

''இதே போன்ற இன்னொருகாசும் இருக்கு. இன்னொரு மருமகளுக்குத் தரலாம்னு எடுத்து வச்சிருந்தேன். அதைப் பெறத் தகுதியுடையவள் சுகந்தி. இந்தா உன் கையால் சுகந்திகிட்ட இதைக்கொடு. அவளும் உன்னைப் போலத் தன் கழுத்துச் சரட்டிலே அதை கோத்துப் போட்டுக்கிட்டு மகராசியா, நல்லா இருக்கட்டும்'' மகிழ்ச்சியுடன் சொன்னார் சரவணன்.





இரு கைகளையும் நீட்டி அதைப்பெற்றுக்கொண்ட சுகந்தியின் கண்களில் நீர் பனித்தது.

அந்தப் பரிசுக்கு அவள் தகுதியுடையவளா? தகுதியுடையவள் இல்லை. ஆனால், இனி அந்தத்தகுதியை தேடிக்கொள்ளப் போகிறாள். கமலா அண்ணிக்குச் செய்யப்போகும் அந்தப் பெரிய அறுவை சிகிச்சையின் போது வீட்டையும், குழந்தைகளையும் பத்திரமாகக் கவனித்துக் கொள்வதோடு அண்ணியையும் கவனமாகப் பார்த்துக் கொள்ளப் போகிறாள். பலவும் எண்ணியபடி, மாமனார் சரவணன் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டாள்.

''அண்ணி! என்னை வாழ்த்துங்கள்'' என்று, கமலாவின் பாதங்களை மன்னிப்புக்கோரும் பாவனையில் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''என்ன பெரிய கலாட்டா நடக்குது?'' என்று, சற்று உரத்த குரலில் தன்னுள் பேசிக் கொண்டே உள்ளே கணவனுடன் வந்த அனு, மாமனாரின் கடுமையான முகத்தைக் கண்டு, வாயை அடக்கிக் கொண்டு ஒரு பக்கம் வந்து உள்ளே நின்று கொண்டாள்.

''உங்களைக் கூப்பிட்டு அனுப்பணும்னு நினைச்சேன். நீங்களே வந்தது நல்லதாப் போச்சு. உங்கள் இஷ்டப் படியே பெங்களூர் நிறுவனமும், வீடும் உங்கள் பங்குக்கு உயிலில் ஒதுக்கி விட்டேன். நாளைக்கே நீங்கள் புறப்பட்டுப் போய் அவைகளை அனுபவிக்கலாம். ஆனால், ஒன்று. அந்த நிறுவனம் மிகவும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. அதை நிர்வகித்து லாபம் கண்டு, முன்னுக்கு வரவேண்டியது உன் பொறுப்பு. நீயாகக் கேட்டதினால் கொடுத்தேன். ஏற்கனவே நன்றாக இயங்கி வரும் சென்னை அலுவலகம், தொழிற்சாலை, கிடங்கு இத்யாதிகளை மூத்தவனுக்கும், மூன்றாவது மகனுக்கும் பங்கிட்டு விட்டிருக்கேன். அவங்க ரெண்டு பேராவது ஒற்றுமையா இருந்து சுகமா வாழ்வாங்கன்னு நம்புகிறேன்.''

''இந்தப் பங்கீட்டில், யாருக்காவது கூடக் குறையன்னு பாரபட்சமாக ஏதாச்சும் செய்திருக்கிறீர்களா?'' துணிவுடன் ஒரு கேள்வியை எழுப்பினாள் அனு.

பெங்களூர் நிறுவனத்தையும், வீட்டையும், சென்னை தொழிற்சாலை மற்றவைகளோடு ஒப்பிட்டால் கொஞ்சம் குறைவுதான். புத்தம் புதிய நிறுவனம் ஒழுங்காக நடத்தத் தெரியாவிடில் நஷ்டம் வரலாம். ஆனால் இவை நீங்களாக கேட்டு வாங்கிக்கொண்டது. இதைக் கூட தர நான் மறுத்திருக்கலாம். ஆனால், தொடர்ந்து உன்னை இந்த வீட்டில் தங்க அனுமதிக்க எனக்கு மனம் இல்லாததால், பெங்களூருக்கு உன் கணவனுடன் அனுப்பி வைக்கிறேன், புரிஞ்சுக்கோ'' அதட்டினார் கிழவர்.

''அப்படி நான் என்ன தவறு செய்தேன்?'' முறைத்தாள் அனு.

''நீ செய்தது மன்னிக்கப்பட முடியாத மாபெரும் தவறு. அலுவலகத்துக்குப் போய்விட்டதாக ஒருநாள் நீ தப்பா நினைத்துக்கொண்டு, சுகந்தியிடம் நடையில் நின்றபடி பேசிய அசிங்கம் என் காதுகளில் துல்லியமாகக் கேட்டது எப்பேர்ப்பட்ட குற்றச்சாட்டு. கள்ளங்கபடமில்லாதவங்க மேலே எத்தனை பெரிய பழியை சுமத்தினாய்? அத்தோட வீட்டுக்குப் புதிதா வந்திருப்பவளின் வாழ்க்கையைக் குலைக்க என்ன மாதிரி கதை சொல்லிக் கலக்கிவிட்டே. அனு நீ சாதாரணப் பெண் இல்லே, குடியைக் கெடுக்க வந்த ஒரு நச்சுப் பாம்பு.''

உதட்டைக் கடித்துக்கொண்டு கோபத்துடன் உறுத்து விழித்தாள் அனு.

''கொக்குன்னு நினைச்சியோ கொங்கணவான்னானாம். அது போல முறைச்சுப் பார்த்துட்டா, பண்ணின தப்பை நான் மறந்துடுவேனா? கடவுள் கிருபையாலே கமலாவுக்கு வந்த நோய், நாங்கள்ளாம் நினைச்ச பயந்தாப்பல புற்று



20242

நோயாக இல்லாமல், சாதாரணமான நோ[illegible] போய் விட்டிருக்கு. அவளும், சுகந்தியும் [illegible] போல நேசமா இந்த வீட்டுல இருக்கப் போறாங்க. ஒண்ணு தெரிஞ்சுக்கோ நாலுபேராக் கூடி ஒரு காரியத்தை செய்யும்போது அது ரொம்ப சுலபமா முடியும். தனியா ஒருத்தர் செக்கைத் தள்ளப் பார்த்தால், ரொம்ப சிரமமாகத்தான் இருக்கும். தன்னந்தனியா ஒரு வீட்டை நிர்வகிக்கிறது அத்தனை சுலபமில்லேன்னு சீக்கிரம் புரிஞ்சுக்குவே. கொஞ்ச நாளைக்கு முன் ஒரு மாதர் சங்கத்திலே போய் நீ தேசிய ஒருமைப்பாட்டைப் பத்திப் பேசிட்டு வந்தாயே, நினைப்பிருக்கா? உன் படம்கூட சில பத்திரிகைகளில் வந்ததே. வீட்டிலே, ஓரகத்திகளோட ஒற்றுமையா இருக்க முடியாத உனக்கு தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேச வெட்கமாயில்லே! நம்ம பெரியவங்க கூட்டுக் குடித்தனம் அமைச்சதிலே அர்த்தமில்லாமல் போகல. வீட்டுக்குள்ளே அண்ணன், மற்ற உறவினர்கள் இடையே ஒற்றுமை ஏற்பட்டால், அது மெள்ளப் பரவி சமூகத்திலே ஒற்றுமை நிலவும். பின்னர் அது தேசம் முழுவதும் பரவும் என்ற அடிப்படையில்தான் அமைச்சாங்க. நீங்கள்ளாம் இந்தக் காலத்துப் பெண்கள்... ஆண்கள். உங்களுக்குக் கூட்டுக் குடித்தனம் பிடிக்காது. ஆனால், தேசிய ஒருமைப்பாட்டைப் பத்தி ரொம்ப வாய் கிழியப் பேசுவீங்க'' வார்த்தைகளால் சாடி, வெறுப்புடன் தன்னை மாமனார் வெறித்ததைக் கண்டு, கூசிப் போய் விட்டாள், அனு.

''உங்களுக்கு இஷ்டமில்லைனா, நாங்க...இங்கேயே...'' அனு தடுமாறினாள் திகிலுடன்.

''இந்த சரவணன் முடிவு எடுத்தால், அதில் மாற்றம் இல்லை. நீங்கள் இருவரும் பகல் சாப்பாட்டுக்குப் பிறகு பெங்களூர் கிளம்பறீங்க. உங்க சாமான்களை சுகந்தியும் மனோகரனும் பத்திரமாகப் பார்சல் செய்து, லாரியில் அனுப்பி வைத்து விடுவாங்க. அங்கே போய் நல்ல பெயர்

எடுத்துட்டு சுகமாக வாழுங்கள் என்று வாழ்த்தறேன்'' என்று கூறிவிட்டு, சுகந்தி பக்கம் திரும்பி முறுவலித்தார்.

''அம்மா சுகந்தி! ஒரு சின்னக் காரியம் செய்வியா? சிரமம் பாராம இன்னிக்குப் பகல் உணவோட சாப்பிடக் கொஞ்சம் பாயாசம் தயார் பண்ணுவியா? கமலா கொண்டு வந்த நல்ல செய்தியைக் கேட்டதும் எனக்கு இனிப்பு சாப்பிடணும்னு ஆசையா இருக்கு. அத்தோட என் இளைய மகனையும், மருமகளையும் இனிப்போட ஊர் அனுப்பி வைக்க விரும்பறேன். செய்வியா அம்மா?''

'இதோ பத்து நிமிடத்தில் தயார் செய்துவிடறேன்'' சொல்லிக்கொண்டு வேகமாக உள்ளே ஓடினாள் சுகந்தி. அவள் மனதில்தான் எத்தனை நிம்மதி, ஆனந்தம், மனோகரன் மேல் எத்தனை மதிப்பு, காதல்! அவள் வாழ்க்கை அங்கே இனி எத்தனை இனிமையாக இருக்கப் போகிறது!

தன்னையும் மீறிய உற்சாகத்தில் அவள் லேசாகப் பாடிக்கொண்டு சமையல் அறைக்குள் மறைந்தாள்.

* * *

# உண்மை ஊமையல்ல

## 1

வீட்டுக் கூரைமீது விமானம் இறங்கிவிட்டதுபோன்ற பேரிரைச்சல். சுரேந்திரன் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான். சமையலறையில் காஸ் அடுப்பின் மீது வைக்கப்பட்டிருந்த பால்குக்கர் அப்படி கூச்சலிட்டு ஊரைக் கூட்டிக் கொண்டிருந்தது என்று புரிந்து கொண்டான். பூஜையறையிலிருந்து ஊதுவத்தியின் மணம் மெல்ல அவனது அறைக்குள்ளும் பரவியது.

அம்மா பார்வதி காலை ஸ்நானத்தை முடித்துக் கொண்டு கடவுளை வழிபடத் தொடங்கி விட்டிருந்தாள்.

பூஜை வேளையில் கரடி போல...பிள்ளையைப் பற்றிய நினைவு தலைதூக்க...அறையிலிருந்தபடியே அவள் உரத்த குரலில் உத்தரவிட்டாள்.

''ஏய்! ஊமச்சி! அந்தக் குக்கரை இறக்கிக் கீழே வை. சத்தம் தலையைப் பிளக்குது...தம்பி தூங்குகிறது உனக்கு எங்கே நினைப்பு இருக்கப் போகுது சனியன்!''...

ஜன்னல் திரையை விலக்கிவிட்டு மெல்ல வெளியே பார்த்தான் சுரேந்திரன். பொழுது விடிந்து புது வெளிச்சம் வேகமாகப் பரவிக் கொண்டுவருவதை உணர்ந்தான். அரை மணிக்கு முன்னதாகவே அலுவலகத்திற்கு

வரப் போவதாக அவன் பரிமளாவிடம் சொல்லியிருந்தான். இப்படித் தன்னை மறந்து தூங்கிவிட்டிருக்கானே?

முதல்நாள் மாலை பம்பாயிலிருந்து வந்த முதலாளியுடன் தொழிற்சாலையை ஊர்வலம் வந்து கால் ஓய்ந்து போய்விட்டிருந்தான். அத்துடன் வீட்டுக்கு கையோடு கொண்டு வந்த ஃபைல்களைப் பார்த்துப் படிப்பதற்குள் இரவு ஒரு மணிக்கு மேலாகிவிட்டது. களைப்பும் அசதியுமாக அடித்துப் போட்டது போலப் படுக்கையில் விழுந்தவன் நன்றாகத் தூங்கிப் போனான்.

கண கணவென்று மணி ஓசை பூஜையறையினின்று எழுந்தது. அம்மா மணியை அசைத்தபடி ஏதோ மந்திரத்தை முணுமுணுப்பதும் கேட்டது. அது அவளது நித்தியப்படி காரியங்கள். சில நாட்கள் பூஜையை வேகமாக முடித்துக்கொண்டு வெளிவந்து விடுவாள். சில நாட்கள் மெல்ல விமரிசையாக சுவற்றில் தொங்கும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனிப்பட்ட முறையில் பிரார்த்தனையை சொல்லி, மெல்லத்தான் வெளிவருவாள். வீட்டை கவனிக்கவும், சமைத்துப் போடவும், பாத்திரங்களைக் கழுவி, துடைத்து வைக்கவும் நாள் முழுவதும் மாடாக உழைக்கவும் வாய் பேசமுடியாத ஒரு வேலைக்காரி இருபத்திநான்கு மணி நேர ஏவலுக்கும் தயாராக இருக்கும்போது அம்மாவின் காரியங்கள் இஷ்டத்திற்கு இழுபடுவது இயல்புதானே?

கால்மீது கனமாகப் படிந்து கிடந்த போர்வையை உதைத்துத் தள்ளிவிட்டுக் கட்டிலினின்று இறங்கி அவசரமாகக் குளியலறைக்குள் புகுந்தான். பற்பசையை பிரஷ் மீது பிதுக்கிவிட்டபடி தன் முகத்தை வாஷ்பேசின் மேலிருந்த கண்ணாடியில் பார்த்துக் கொண்டபோது பரிமளா சொன்னது நினைவுக்கு வந்தது.

''உங்களோடு கடைத் தெருவில் பார்த்தேனே—அவர்களா உங்க அம்மா!''



''ஏன்! நாங்கள் இருவரும் அம்மாவும் மகனும்போல உன் கண்களுக்குத் தெரியலையா?'' சிரித்தான் அவன்.

''வயது வித்தியாசத்தை ஒப்பிடும்போது அப்படித்தான் இருந்தது. ஆனால் உங்களுக்கு உங்கம்மா ஜாடை கொஞ்சமும் இல்லை.''

''என்ன அப்படி சொல்லிட்டே? சின்ன வயதில் என்னை மடி மேலே போட்டுக்கொண்டு தட்டித் தூங்க வைக்கும் போது அம்மா என்ன சொல்வாங்க தெரியுமா! என்னை உரிச்சுக்கொண்டு வந்திருக்கிற என் செல்லக்குட்டி மகனே! தூங்குடா கண்ணு... தூங்குன்னு கொஞ்சுவாங்க!''

''சிறு வயதில் அம்மாவைப் போல ஒரு சாயல் இருந்திருக்கலாம். ஆனால் இப்போ ரொம்ப வித்தியாசமா இருக்கறீங்க.''

''என்னை நீ வேணும்னு கிண்டல் பண்றே இல்லையா?'' போலியான கோபத்துடன் அவளை வெறித்தான்.

''உங்கம்மா இளவயதிலே அழகானவங்களா இருந்திருப்பாங்கன்னு தெரியுது. பெரிய இடத்தைச் சேர்ந்தவங்கன்னும் புரியுது. இந்த வயதிலும் முகத்திலே என்ன களை? நடையிலே என்ன கம்பீரம்...?''

''அதெல்லாம் என்கிட்ட துளியும் இல்லேன்னு சொல்றே!''

''உங்க கம்பீரக் குரலும், மிடுக்கான நடையும் ஆபீசையே அலற வைக்குதே. அதைச் சொல்லலை... சட்டுனு பார்த்தா உங்கள் ரெண்டுபேர் கிட்டேயும் ஜாடையில் ஒற்றுமை இல்லை. உங்கம்மாவுக்கு சற்று நிமிர்ந்த மூக்கு. உங்களுக்குக் கூரான மூக்கு. உங்கம்மா தலைமுடி சுருட்டையில்லாத வழவழப்பான நேர்முடி. உங்களுக்கு அலைபோல சுருட்டையில் சரிந்த முடி. இப்படி பல வித்தியாசங்கள்.''

''பரவாயில்லை. ஒரே பார்வையில் ரொம்பவே எங்களைக் கூறு போட்டிருக்கே.''

''நீங்க உங்கப்பாவைப் போல சாயலில் இருப்பீங்கன்னு நினைக்கிறேன்.''

''எங்கப்பாவை நானே பார்த்ததில்லை. நான் பிறந்து சில மாதங்களில் அவர் மாரடைப்பால் மரணமடைந்து போனார்.''

''துக்கிரிப் பிள்ளையினு உங்க உறவினர்கள் உங்களை ஏசவில்லையா?''

''அம்மாவுக்கு நான் ரொம்ப செல்லப்பிள்ளை. ஊரில் யாரும் எதுவும் என்னைப் பற்றிப் பேச அனுமதிக்க மாட்டாங்க.''

''கிராமமாச்சே உங்க சொந்த ஊர்... அங்குள்ளவர்களுக்கு சில நம்பிக்கைகள் உண்டாயிற்றே.''

''ஊரிலே அப்பாதான் பெரிய தனக்காரர். வீடு வாசலும், பல ஏக்கர் நஞ்சை புஞ்சை என்று பூமி வளமும் வங்கியில் லாக்கருமாக வாழ்ந்தவர். அவசரத்துக்கு நூறு, ஆயிரம் கடன் வாங்க அப்பா கிட்டதான் ஊர் மக்கள் ஓடி வருவாங்க. அப்பாவுக்குபின் அம்மாவை உதவிக்கு நாட வேண்டியிருந்தது. வம்பு பேசினால் அம்மா வாயைக் கிழித்துப்போட்டு விடுவாங்க.''

''அப்பாடி! அம்மா ரொம்பக் கோபக்காரிபோலிருக்கே. ஆனால் உங்களுக்கு அப்படிக் கோபம் வரும்னு நான் நினைக்கலை.''

''எப்போதாவது வருவதுண்டு'' சிரித்தான் அவன்.

''அம்மாவை குணத்திலும், உருவத்திலும் கொண்டு வரலைன்னு நினைக்கிறேன்.''

''ஏன் அப்படி சொல்றே?''



''உங்கப்பாவைத்தான் நீங்க ஜாடையிலும் குணத்திலும் கொண்டு வந்தவராக இருக்கிறீங்க. கடைத்தெருவிலே கவனிச்சேன். உங்க தாயார் முகத்திலே ஒரு பரபரப்பு இருந்தது. எதையோ பற்றிக் கவலைப்படுவது போலக் கண்களில் ஒரு ஏக்கம். ஆனால் உங்கள் முகத்திலே எப்பொழுதும் சாந்தம் தவழ்ந்து கொண்டிருக்கு...வேலை செய்யுமிடத்தில் எத்தனை தொல்லைகள் என்றாலும் சிரிச்சுக் கொண்டு எரிந்துவிழாம ரொம்பவே சமாளிக்கிறீங்க.''

''நீ பெரிய மனோதத்துவ நிபுணர். அம்மாவையும் என்னையும் ஆய்வு செய்து அலசிப் பார்க்கிறே. சுத்தி வளைச்சு நீ எதுக்காக இப்படிப் பேசறேன்னு எனக்குத் தெரியாதா?''

''எதுக்காம்?''

''ஆறு மாசத்துக்கு மேலே ஆகிறது நாம் காதலிக்கத் தொடங்கி... இன்னமும் உங்களுக்கு அந்த நினைவு இல்லை. என்னை அழைத்துக்கொண்டு உங்கள் அம்மா எதிரில் நிறுத்தி, இவள் தான் உங்கள் வருங்கால மருமகள் என்று சொல்லித் துணிவுடன் அறிமுகப்படுத்த தெம்பில் தைரியம் இல்லை. இதுதானே உன் குற்றச்சாட்டு.''

''எங்க வீட்டுக்கு நான் உங்களை அழைத்துக்கொண்டு போய் என் பெற்றோர்களுக்கும், சகோதரிகளுக்கும் அறிமுகம் செய்து வைத்தேனே?''

''வருங்கால கணவர் என்றா அறிமுகம் செய்து வைத்தாய்?''

''திருமணம் என்ற பேச்சு உங்களிடமிருந்துதான் ஆரம்பமாகணும். அதுவரை நீங்கள் எனக்கு எங்கள் நிறுவனத்திலே வேலைபார்க்கும் ஒரு அலுவலர். பழகுவதற்கு இனியவர் என்றுதான் அறிமுகம் செய்யவேண்டியிருந்தது.''

''உங்கப்பா அம்மா இருவரும் என்னைப் பார்த்துப் புரிந்து கொள்ள முடியாத அளவு காதில் பூ சுற்றிக் கொண்டிருந்தார்களா?''

''எங்கம்மாவுக்குப் புரிந்து விட்டது. ஆனாலும் என் வாயால் வரட்டும் என்று பொறுமையாக இருக்காங்க. அப்பா என்னைப் பார்த்து ஒரு மாதிரி சிரித்தாரே அதன் அர்த்தம் உங்களுக்கு விளங்கலையா?''

''என் வீட்டிற்கு உன்னை அழைத்துச் சென்றால், அம்மாவுக்குத்தான் அபிப்ராயம் தெரிவிக்க இயலும். என் அப்பா சாப்பாட்டறை சுவற்றிலே சட்டத்திற்குள் ஒரு பெரிய படத்தில் சிரித்துக் கொண்டிருப்பார்.''

''உங்கள் அப்பாவின் படத்தைப் பார்த்து வீட்டில் நீங்கள் உங்க அப்பா ஜாடையா என்று நன்றாக கண்டு பிடித்துச் சொல்ல முடியும்.''

''உருவ ஒற்றுமையில் நான் அவரைப் போலவும் இல்லாதிருந்தால்...''

''உங்கள் பாட்டன் அல்லது முப்பாட்டனைப் போல இருக்குறீங்களோ என்னவோ. ஒரு குழந்தையின் உருவ அமைப்பிலும், குணத்திலும் நாற்பத்தேழு தலைமுறையின் சாயலும், குண விசேஷமும் தென்படலாம்னு விஞ்ஞானம் விவரிக்கிறது. இப்படி வாயைப் பெருக்காதீங்க. எனக்கு வேலை இருக்கு. வருகிற ஞாயிற்றுக்கிழமை முடிந்தால் என்னை உங்க வீட்டுக்கு அழைச்சுக் கொண்டு போக முயற்சி செய்யுங்க.''

''இப்பவே என்னை இப்படி ஆட்டிப் படைக்கிறாயே, வலது காலை எடுத்து உள்ளே வைச்சு எங்க வீட்டுக் குள்ளே வந்துட்டா ரொம்பவும் நீ படுத்துவே.''

''வேலைக்குப் போகும் பெண் நான். சரி நிகர்சமான மாக ஆண்களோடு உழைக்கும் ஒரு ஊழியர். படித்தவள், பாரதியின் அபிமானி. வீட்டிலும் சரி, வெளியிலும் சரி சரிநிகர் சமமாக பாவிக்கப்பட வேண்டும் என்று உரிமைக்



குரல் எழுப்ப அஞ்ச மாட்டேன். போதுமா ஸார்... என்னைக் கொஞ்சம் நிம்மதியா வேலை செய்யவிடுங்கோ. ரொம்பவும் தொண தொணக்காதீங்க'' என்று கேலியாகப் பேசிவிட்டு வணக்கம் செலுத்தும் பாணியில் கைகளைக் கூப்பிவிட்டு, தன் மேஜை முன் விரிக்கப்பட்டுக் கிடந்த ஃபைல் முன் குனிந்து கொண்டாள்.

ஓங்கி அவள் தலையில் ஒரு குட்டு. செல்லமாகக் குட்டி... அந்த அழகான முகம் கோபத்தில் சிவப்பதை அள்ளிப் பருக வேண்டும் போன்ற ஆர்வத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு அவன், தன் அறையை நோக்கிப்போய் விட்டான்.

ஆறு மாதகால பழக்கம்தான். ஆனாலும் பரிமளாவைப் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தெரிந்தவன் போல... 'ஹலோ! குட்மார்னிங்' என்று சொல்வதற்குள்ளே மனம்... ஓடி அவளது உள்ளத்துடன் ஒட்டிக் கொள்வதை உணர்ந்து கொண்டிருந்தான்.

முதல் முதலாக அவளை அங்கு அவன் சந்தித்ததைப் பற்றி நினைத்த போதெல்லாம் அவனுள் ஒரு சிரிப்பு எழுவது வழக்கம்.

அவன் வேலை பார்த்த அந்த நிறுவனத்திற்குப் பல கிளைகள் நாட்டின் பல பாகத்திலும் இருந்தன. உரம் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று கல்கத்தாவிலும் மின் விசைக் கம்பிச்சுழல் தயாரிக்கும் ஒரு பெரிய தொழிற் சாலை அம்பத்தூரிலும் இருந்தன நகரத்திலே அவர்களது சில்லரை வியாபார நிலையமும் அலுவலகமும் இருந்தன.

பம்பாயில் விற்பனைப் பகுதியில் உயர்மட்ட அலுவல ராக நியமிக்கப்பட்டிருந்த சுரேந்திரன் ஓராண்டு காலத் திற்குப் பின்னர் சென்னைக்கு மாற்றப்பட்டிருந்தான். பதவி உயர்வு, சம்பளம், அலுவலகம் தந்து உதவிய வீடு, கார் என்று பல வசதிகள் அவனுக்குத் தரப்பட்டன. கொண்டு ஜெம்பி கிராமத்து வீட்டை காலி செய்து

மகனுடன் கூடவே வசிக்க ஆசைப்பட்டாள் அம்மா பார்வதி. கணவரின் மரணத்திற்குப் பின்னர் அவள் தேவைக்கு அதிகப்படியான பூமியை விற்றுக் காசாக்கி வங்கியில் சேமித்து வைத்திருந்தாள். இருந்த கொஞ்ச பூமியையும் பயிரிட்டு உதவ தன் கணவரின் தூரத்துஉறவுக்காரர் ஒருவரின் கையில் ஒப்படைத்துவிட்டிருந்தாள்.

வீட்டை விற்க மனமில்லை. கிராமத்து வீடு அத்தனை விலைக்குப் போகாது என்பதொரு காரணமும் கூட. வேலைக்காரியாக, அடிமையாக வாய் திறவாது கிடக்கும் ஊமைப் பெண் சுகுணாவின் தாய் செல்லம்மாள் அவர்களுக்கு தூரத்து உறவு. சுரேந்திரனுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து சுகுணாவும் செல்லம்மாளும் அவர்களை அண்டிக் கொண்டு கிடந்தவர்கள். மூட்டு வீக்கமும், இரத்த அழுத்தமும், வயதின் தன்மையும் அதிகமாகிவிட்ட செல்லம்மாள் பட்டணத்தின் பரபரப்பான வாழ்க்கையை விரும்பவில்லை.

''பார்வதி அம்மா என்னை இங்கேயே விட்டுட்டு போங்க. தோட்டத்து செடி கொடிகளைப் பார்த்துகிட்டு, வீட்டை கவனிச்சுக்கிறேன். நெல்லும் உளுந்தும் நம்ப பூமியிலே விளையறதில் எனக்கு கொஞ்சம் தந்து விடுவார் உங்க பங்காளி. மாசம் கை செலவுக்கு ஏதாச்சும் நீங்க அனுப்பிவச்சா போதும். என் கட்டை கீழ விழறமுட்டும் வீட்டை காவல் காத்துக்கிட்டிருப்பேன்'' கெஞ்சினாள்.

கடல்போல வீடு என்று அதைவிட்டு விடுவதற்கு மனமில்லாத அம்மா, செல்லம்மாளின் வார்த்தைகளில் ஆறுதல் அடைந்தாள்.

''உன் மகள் பட்டணத்தில் எனக்குத் துணையாக இருக்கட்டும். வீட்டு வேலைகளில் கொஞ்சம் கை கொடுக்கட்டும். அதற்குப் பதிலுக்கு உன் காலமுழுவதும் இந்த வீட்டில் நீ தங்கிக்கோ. செலவுக்கு ஏதாவது அனுப்பிடறேன்'' என்று ஒப்புக்கொண்டிருந்தாள்.



வருஷ முடிவில் ஒருமுறை பத்து நாள் லீவு எடுத்துக்கொண்டு காரிலே அம்மாவுடன், வேலைக்காரி சுகுணாவுடன் அவன் கிராமத்துக்குப் போய்த் தங்கிவிட்டு வந்தான்.

கிழவி செல்லம்மாளிடம் மகன் பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டால் கூடப் பார்வதிக்குப் பிடிக்காது.

''கண்பார்வை மங்கி, கால் தடுமாற திண்டாடிக்கொண்டிருக்கும் அத்தோட உனக்கு என்ன பேச்சு வச்சிருக்கு; கொஞ்சம் காலார நடந்து போய் காவேரியையாவது பார்த்துட்டு வா. மெட்ராசிலேதான் நாம் எப்பவும் குழாயைக் கட்டிகிட்டு மாரடிக்கிறோமே'' என்று கத்துவாள்.

அம்மா ஒரு பலத்த பொஸஸிவ் வுமன். தன் மகனைத் தன்னிடமிருந்து யாராவது அபகரித்துக்கொண்டுவிடுவார்களோ என்று பயப்படுறவள். ஒரு வருஷ காலம் தனியே பம்பாயில் அவன் வசித்தபோது, கிராமத்துக்கு அருகிலிருந்து டவுனுக்குப் போய், வாரத்திற்கு இருமுறை அவன் அலுவலகத்திற்கு டிரங்கால் செய்துவிடுவாள்.

''என்ன ஆபீஸ் வேலை வேண்டியிருக்கு? அப்பா போல விவசாயம் செய்திட்டு இருந்திருக்கலாம். மத்தவனுக்குக் கை கட்டி சேவகம் செய்ய வேண்டியதில்லை. கேட்டாத் தானே...'' ஒவ்வொரு முறையும் ஓலமிடுவது வழக்கம்.

பட்டணத்திற்கு மாற்றலாகி வந்ததும அவன் உடனடியாகப் பெட்டி படுக்கை சகிதம் கிளம்பிவிட்டாள்.

''இனி ஒரு கணம் கூட உன்னை விட்டு நான் பிரிஞ்சு இருக்கிறதா உத்தேசமில்லை சுரேன்! எனக்கு வயசாகிட்டுவருது. உன் கைகொள்ளி வாங்கிட்டு போகணும்னு ஆசை'' என்று அழுதாள்.

சுரேந்திரனுக்கு அம்மா மீது கொள்ளை ஆசை. அவன் நினைவு தெரிந்த நாளிலிருந்து காதுகளில் வைரக்

கம்மல்கள் மின்ன, கழுத்தில் பட்டையாக தங்கச் சங்கிலி ஒளிவிட, கரு கருவென்ற கூந்தலைக் கோதி முடிச்சுக் கொண்டு வெள்ளைப் புடவையும் விபூதியணிந்த நெற்றியுமான ஒருத்தியைத்தான் அறிவான்.

அவசரமாகக் குளித்துவிட்டு அலுவலக உடையணிந்து கொண்டு அவன் சாப்பாட்டறைக்குள் வருவதற்குள் அம்மா பார்வதி சுகுணாவை ஏவிக்கொண்டிருந்தாள்.

''நான் முழுவதும் கத்தித் தொண்டை காஞ்சு போகிறது. சனியன் பேச வாய்தான் இல்லைன்னா காதுமா செவிடாகஇருக்கணும். இவளோட ஜாடை காட்டி நான் முழுக்க நான் பரத நாட்டியம் ஆடவேண்டியிருக்கு'' உரத்த குரலில் கத்திவிட்டு தண்ணீரையும் கொண்டு வந்து வைத்தாள்.

''என் அம்மா இப்படிக் கத்திக் கூச்சலிட்டு உடம்பைக் கெடுத்துக்கிறீங்க. ஊமையாகப் பிறந்தது சுகுணாவின் தவறா? பாவம்... அவங்களுக்கு நம்மைத் தவிர யார் அம்மா ஆதரவு. சும்மாவா இங்கே தங்கிகிட்டு இருக்காங்க பட்டணத்திலே இப்படி நன்றி விஸ்வாசத்தோட நாள் முழுக்க உழைக்க உங்களுக்கு சட்டுனு வேலையாள் யாரும் கிடைக்க மாட்டாங்க. சும்னு இருங்கோ'' சிறிது அதட்டலாகப் பேசிவிட்டு மேஜையருகே உட்கார்ந்தான்.

சமையலறைக் கதவின் பின்னால் நின்று கொண்டிருந்த சுகுணா, அவனைக் கண்டதும் கண்கள் பளபளக்க, மிகவும் பரபரப்புடன் இட்டிலி நிறைந்த பாத்திரத்தையும், சட்டினி கிண்ணத்தையும் தூக்கிக்கொண்டு ஓடிவந்தாள். சூடான இட்டிலியைப் பரிமாறி, தட்டின் ஓரத்திலே சட்டினியை அள்ளி வைத்துவிட்டு காப்பியைக் கலக்கி வர உள்ளே விரைந்து ஓடினாள். பேசமுடியாது என்ற குறையைத் தவிர, செயலில் அவள் சளைத்தவளே இல்லை.

வாய்திறந்து அவன் எதுவும் கேட்குமுன் குறிப்பறிந்து ஓடோடி வந்து உதவி செய்வதில் வெகு சாமர்த்தியக்காரி.



பட்டணத்திற்கு வந்தபின் ஏனோ அவளிடம் ஒரு மாறுதல், முன்னைவிட உடல் இளைத்துக் காணப்பட்டாள். கருகருவென்ற தலைமுடியில் நரை கோடுகள் அதிகமாகத் தென்பட்டன. கண்களைச் சுற்றியும், வாயின் கடை பக்கத்திலும் லேசான சுருக்கங்கள் காணப்பட்டன.

எதிர்ப்பக்கம் அமர்ந்துகொண்டு நெய்யைக் கரண்டியால் முகர்ந்து இட்லி மீது கொஞ்சம்விட்டு உபசரித்துக் கொண்டிருந்தாள் பார்வதி. காப்பி டம்ளரை கொண்டு வந்து அருகில் வைத்த சுகுணாவை சுட்டு எரிப்பது போல பார்த்தாள்.

''திரு திருன்னு முழிச்சிகிட்டு இங்கே நின்னா தம்பிக்கு வயிற்றுவலி வந்திடும்'' சீறினாள்.

பரக்கப் பரக்க விழித்தபடி, சில விநாடிகள் நின்ற சுகுணா பார்வதியின் உதட்டசைப்பைப் புரிந்துகொண்டு உள்ளே மறைந்துபோனாள்.

''அம்மா! தினமும் பூஜை செய்துவிட்டு காப்பி பலகாரம் சாப்பிட வர்றீங்க. அவைகளைக் கொண்டுவந்து பரிமாறும் அந்த வாயில்லாத சுகுணா அம்மாவை ஏன் இப்படிக் கசந்துகிட்டு திட்டுறீங்க'' கேட்டபடி இட்டிலியைப் பிட்டு சாப்பிடத் தொடங்கினான்.

''பீடை எந்த வேளையில் நம் வீட்டில் கால்வச்சதோ அந்த நாளில் இருந்து எனக்கு சனி திசை ஆரம்பமாகி விட்டது. வந்த கொஞ்ச காலத்திலே உங்கப்பா போயிட்டார்.''

''நான் பிறந்தவுடனேயே அப்பாவை விழுங்கி விட்டேன்னு என்னையல்லவா கோவிச்சுக்கணும்.''

''நீயும் இல்லாட்டி அந்த மாபெரும் இழப்பை நான் எப்படி சகிச்சிப்பேன்.''

''அம்மா! சும்மா என் காதுபட அவங்களை நீங்க கோவிச்சுக்கிறது எனக்குப் பிடிக்கலை. மனசுக்குக்

கஷ்டமாயிருக்கு. ஒரு வாயில்லாத ஜீவனைப் போல அவங்க மனசிலிருக்கிறதை சொல்ல முடியாம திண்டாட றது எனக்குப் புரிகிறது.''

''சரி சரி...காலை வேளையில் சுகுணாவின் புராணம் எதுக்கு. தட்டில் இருக்கிறதைப் பார்த்து சாப்பிடு.''

''அம்மா, சுகுணா அம்மாளின் வலது கை மேலே... அந்தக் காய வடு எப்படியம்மா வந்திச்சு. ஒரு வாட்டி நீங்க என்னவோ சொன்னீங்க மறந்துட்டேன். இன்னிக்குப் பரிமாறினப்போ கையைப் பார்த்தேன். மனதுக்கு வேதனையா இருந்தது. பட்டையா இரண்டு பெரிய வடு. தங்கம் போல சிவப்புக் கை மேலே கருப்பா அந்த வடுவை பார்க்கிறச்சே...''

''இன்னிக்கு உனக்கு என்ன வந்துட்டது. சுகுணாவைப் பத்திப் பேச்சு எதுக்கு இப்போ...அவ சின்ன வயசிலே ரொம்பக் கைநீட்டக்காரியா இருந்தா!''

''நம்ப முடியலை அம்மா... நம்ம வீட்டிலே ஒரு நயா பைசாவைக் கூட அவங்க தொட்டதில்லை...''

''சூடுபட்ட பின் வந்த புத்தி அது. நம்ப வீட்டுக்கு வந்த விருந்தாளியம்மா உங்க அப்பாவின் உறவுக்காரி... திருநெல்வேலியிலிருந்து வந்திருந்தா, அவ. ரொம்பப் பணக்காரி...பிடி பிடியாக தங்கச் சங்கிலியும், வைர நெக்லசுமா மின்னிக்கிட்டிருந்தா...ஏழைத்தாய். வாயில் லாத ஊமைப் பெண்ணுனு இரக்கப்பட்டு இரண்டு பேரை யும் வீட்டோட வேலைக்கு வச்சுக்கிட்டிருந்தேன். அப்போ இந்த ஊமைச்சி என்ன பண்ணினா தெரியுமா!...''

''வீட்டுக்கு வந்த விருந்தாளியோட நகையைத்திருடிக் கிட்டான்னு சொல்லப் போறீங்க...நான் நம்ப மாட் டேன்.''

''நம்பித்தானே ஆகணும். அவளைப் பெத்த ஆத்தாவே—கோபம் தாங்க முடியாம...நம்ப உறவுக் காரியோட வைர நெக்லசை எடுத்துப் பாவாடை இடுப்



பிலே ஒளிச்சி வச்சிருந்த மகளைக்கையும் களவுமா பிடிச்சு அடிச்சுட்டு...திருட்டு வழக்கத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க அடுப்பில் இரும்பைப் பழுக்கக் காய்ச்சி...''

''ஐயோ அம்மா, மேலே விவரிக்காதீங்க, எனக்குக் கேட்கப் பிடிக்கலே இல்லை!''

''சுகுணா அம்மா சின்ன வயதில் திருடினாள் என்று என்னால் நம்ப முடியலை... அப்படியே திருடியிருந்தாலும் அவர்களுக்குக் கொடுத்த தண்டனை கொடூரமானது அம்மா.''

''நானா சூடு போட்டேன்-அவ தாய் செல்லம்மா போட்டாள்.''

வேகமாக சாப்பாடு டிபனை முடித்துக் கொண்டு அவன் எழுந்திருந்தான். ''வரேன் அம்மா...'' என்று கூறி விட்டு... சாப்பாட்டறையில் தொங்கிய தந்தையின் போட்டோவை வணங்கிவிட்டு...கார் சாவியுடன் வாயி லுக்கு புறப்பட்டான்.

கராஜிலிருந்து காரை எடுத்தபோதுதான் நினைப்பு வந்தது. அலுவலகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய அந்த முக்கிய ஃபைல்கள் கொண்ட பெட்டியை உள்ளே வரவேற்பறை மேஜைமீது வைத்து விட்டிருந்தான். அவன் உள்ளே திரும்புமுன், மூச்சிறைக்க பெட்டியைத் தூக்கிக் கொண்டு சுகுணா வெளியே ஓடிவந்தாள்.

மௌனமாகப் பெட்டியை அவனிடம் நீட்டிவிட்டுப் புன்னகைத்தாள். கழுத்தில் நூல் பிரிந்த ரவிக்கையும் முந்தானையில் கிழிசல்கள் தென்பட்ட புடவையுமாக அவளது தோற்றத்தைப் பார்த்ததும் அவனுள் ஒரு எரிச்சல் இயல்பாகவே ஏற்பட்டது...

''வேலைக்காரி என்றால் இப்படி வறுமைக் கோலத் திலே வச்சுக்கிட்டிருக்கணுமா அம்மா...என்னைப் பார்க்க நாலு பெரிய மனிதர்கள் வருவார்கள். சுகுணா அம்மா சுத்தமான புடவை ஒன்றை அணிந்து வந்து சிற்றுண்டி

பரிமாறினால்தானே கௌரவமாக இருக்கும். இது பட்டணம் அம்மா...நம்ப கிராமம் இல்லை'' என்று படபடவென்று அம்மாவிடம் சொன்னான்.

கார் கேட்டைத் தாண்டி வெளியே செல்லும்வரை தாடை இறுக...கோபத்தை அடக்கிக்கொண்டு இருந்தாள் பார்வதி.

கேட்டை மூடிவிட்டு...ஆவேசமாக சுகுணா பக்கம் பார்த்தாள். ''ஊமைக்கோட்டான்! உன்னை யாரு பெட்டியைத் தூக்கிட்டு வரச் சொன்னது! கட்டுக் கழுதை போல குழந்தை வெளியே போற சமயம் வந்து வாசலில் நிக்கணுமா...உன் மூஞ்சியிலே விழிச்சா!...'' ஓங்கிக் கத்தி விட்டு ஆங்காரமாக அவளைப் பார்த்தாள்.

பதில் பேச முடியாது பரிதவித்தாள் சுகுணா.

''உள்ளே போ சனியனே—ஊமை ஊரைக் கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்பாங்க'' கத்தினாள் பார்வதி.

உள்ளத்திலே பொங்கி எழுந்த உணர்வுகள் அனைத்தும் கண்ணீராகக் கண்ணில் பெருக, பேச முடியாத இயலாமையால் முகத்துத் தசையும் உதடுகளும், சுருங்கி விரிய—கலவரத்துடன் நின்ற சுகுணா... கன்னத்திலே விழுந்த கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக சமையலறைக்குள் புகுந்து கொண்டாள்.

## 2

அன்று அலுவலகத்திற்கு வந்து மேஜை மேலிருந்த கடிதத்தைப் படித்த பின்புதான் அவனுக்கு சங்கதி தெரிந்தது.

பரிமளாவின் தந்தைக்கு ஒரு சிறு அறுவை நடக்க விருந்தது. துணையாக அப்பாவுடன் அவள் ஆஸ்பத்திரிக்கு



போக நேரிட்டதால் ஒருநாள் லீவு எடுத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

அவள் இல்லாது அந்த அலுவலகமே ஒளியிழந்து விட்டதைப் போன்ற பிரமிப்பில் அவன் தன் ஆசனத்தில் அலுப்புடன் சாய்ந்துகொண்டான்.

காலைப்பொழுது முழுவதையும் தொழிற்சாலையில் கழித்துவிட்டு அலுப்புடன் வந்தவன்...

பகல் உணவின்போது, அவளுடன் பேசிச் சிரித்தபடி நேரத்தை இனிமையாகக் கழிக்க எண்ணியவனுக்கு பெருத்த ஏமாற்றம்.

ஆபீஸ் பையன் அறைக்கதவைத் தள்ளித் திறந்து கொண்டு ஐஸ் துண்டுகள் மிதந்த நீர் நிறைந்த கண்ணாடிக் கூஜாவையும், டம்ளரையும் மேஜைமேல் வைத்துவிட்டு நகர்ந்தான்.

பார்வதிக்குத் தன் மகன் வெளியில் உள்ள ஹோட்டல்களில் எதுவும் சாப்பிடுவது பிடிக்காது.

கண்ட எண்ணெயை விட்டுக் கண்டபடி சமைக்கிறார்கள் உடம்பு கெட்டுவிடும் என்று தினசரி முக்கிய காரியமாக சுகுணாவை ஏவி அவனது பகல் உணவை பிளாஸ்டிக் டப்பாவில் கட்டிவைக்க ஏற்பாடு செய்திருந்தாள்.

பிரீஃப்கேஸைத் திறந்தான் சுரேந்திரன். ஒரு ஓரமாக ஒரு பிளாஸ்டிக் உறைக்குள் மிக பத்திரமாக சுருட்டி வைக்கப்பட்டிருந்த அந்தச் சிறிய டப்பாவை எடுத்தான்.

காகிதங்கள்மீது உணவு சிந்து கறைப்படுத்தி விடாதிருக்க மிக்க பாதுகாப்புடன் சுகுணா பலமுறை உறைக்குள்ளே டப்பாவை அழுத்தமாக சுற்றி வைத்திருந்தாள்.

வாய் பேசத் தெரியாவிட்டாலும் அவள் எத்தனை விஷயங்களைத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தாள். அவனுக்கு சுக்கா ரொட்டியும், வெங்காயம் பூண்டு சேர்த்து,

எண்ணெயில் வதக்கிய சிறுகீரைக் கறியும் ரொம்பவும் பிடிக்கும்.

ரொட்டிமீது கீரைப் புரட்டலை நன்றாகப் பரத்தி அதைச் சுருட்டி இரண்டாக வெட்டி, சுருள் சுருளாக அழகாக டப்பாவுக்குள் அடுக்கி வைத்திருந்த பாங்கே.. நாக்கில் நீரைச் சுரக்கச் செய்தது.

பரிமளா அருகிலிருந்தால் வாயூறிப் போய் விடுவாள். ''சுகுணா அம்மா நல்லாவே சமைக்கிறாங்க. ரொம்ப கை மணம்'' என்று புகழ்ந்தபடி அவனது பகலுணவைப் பகிர்ந்து கொண்டிருப்பாள்.

நல்ல மனமும், கையில் திறமையும், ஓயாத உழைப்பைத் தரும் விசுவாசமும் உள்ள சுகுணாவை, வாயில்லா ஊமையாக்கி கடவுள் படைத்து விட்டது ஒரு கொடுமை தான்.

இளம் வயதில் பார்க்கப் பளிச்சென்று இருந்திருப்பாங்களே, அவங்களை கல்யாணம் செய்துக்க யாரும் முன் வரவில்லையே? பாவம்! வயது காலத்தில் வாயும் பேச முடியாது, எப்படித்தான் வாழப் போகிறார்களோ?

''அம்மாவிடம் சொல்ல வேண்டும். வேலை செய்ய முடியாது சுகுணா ரொம்பவும் தள்ளாடிப் போய் விட்டாலும், வீட்டை விட்டு விரட்டாது ஒரு உறவுக்காரியைப் போலக் கூடவே காலமுழுவதும் வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று அழுத்தமாகச் சொல்லவேண்டும். சுகுணா விஷயத்தில் கொஞ்சம் பரிவாகப் பேசினால் கூட அம்மாவுக்குப் பொறுக்காதே...''

ரொட்டியைத் தின்று முடித்துவிட்டு, தண்ணீரைக் குடித்து சீக்கிரமாகத் தன் பகலுணவை முடித்துக் கொண்டான்.

அருகிலிருந்த கழிவறைக்குள் சென்று வாஷ் பேசினில் களைப்புப்போக முகத்தைக் கழுவிக்கொண்டு பையிலிருந்த சீப்பால் கிராப்பை ஒதுக்கிக்கொண்டான்.



அலைபோல முடி எப்படி அழகா சரிஞ்சிக்கிட்டிருக்கு.

ஒருநாள் விளையாட்டாக பரிமளா அவனது தலைமுடி மீது கையை வைத்து விரல்களால் துழாவினபோது. மேனி புல்லரிக்க அவன் மெய்மறந்து போனான்.

பரிமளாவை முதல் முதலாக சந்தித்தது...ஒரு இனிய தொடர்கதையாக மனதை நிறைக்க அதைப் பற்றியே சிந்தித்த வண்ணம் அறைக்குள் உட்கார்ந்தான்.

அங்கு வேலையை மேற்கொண்டு வந்து சேர்ந்த முதல் நாள் முழுவதும் அவனது பொழுது தொழிற்சாலையைப் பார்வையிடவும், அலுவலர்களை அறிமுகம் செய்து கொள்வதிலும் கழிந்து போயிருந்தது.

நகரத்திலிருந்த அலுவலகத்திற்கு வந்தபோது அவன் மிகவும் களைத்துப் போயிருந்தான்.

அறையின் மேஜைமீது குவிந்து கிடந்த பைல்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு, ஒரு ஃபைலில் காணப்பட்டதொரு கணக்கில் சிறு தவறைக் கண்டு வெருண்டபடி... அதைப் பற்றிக் கேட்க, மேஜையிலிருந்த பட்டனை அழுத்தினான்.

அலுவலகப் பையன் உள்ளே வந்து சலாம் அடித்தான்.

''இந்த ஃபைல்களைப் பார்வையிடுகிறது யார்'' என்று அவன் கேட்குமுன், ''கணக்கு வழக்குப் பகுதியிலிருக்கும், தலைமை அக்கௌண்டெண்ட்தான் ஸார்!'' என்றான்

தலைமை அக்கௌண்டெண்டை அழைக்கப் பொறுமையின்றி ஃபைலுடன் வேகமாக அறையை விட்டு வெளிப்பட்டு அந்தப் பகுதிக்கு சென்றபோது... புல்லென்று கஞ்சியில் மொட மொடத்த மல்மல் சேலையில் ஒரு நீல மலர் போல ஒரு பெண் உட்கார்ந்திருப்பதைக் கண்டு திகைத்துப் போனான்.

''சீஃப் அக்கௌண்டெண்டைப் பார்க்கணும். அவர் எங்கே இருக்கார்னு சொல்ல முடியுமா?''

"இங்கேதான் சார் இருக்கார்" புன்னகையுடன் பரிமளா எழுந்து நின்றபோது கொடி போன்ற அவளது அழகுத் தோற்றத்தைக் கண்களால் வேகமாக விழுங்கினான்.

"தயவுசெய்து அவரைக் கூப்பிடுகிறீங்களா?" வியப்பை விழுங்கிக் கொண்டு கேட்டான்.

"எதிரேயே நின்றுகொண்டிருக்கிறார் ஸார். ஐயாம் ஸாரி. உங்களுக்குப் புரியவில்லை போலிருக்கு. நான்தான் இந்த செக்ஷனுக்குத் தலைவி."

திடுக்கிட்டுப் போனான் அவன். சட்டென்று சமாளித்துக்கொண்டு, கையோடு கொண்டு வந்த ஃபைலைப் பிரித்து, அந்தத் தவறை அவள் சுட்டிக் காட்டியபோது தோள்களை அவள் லேசாகக் குலுக்கினாள்.

"ஸாரி ஸார். நான் இங்க வேலைக்கமர்ந்து சில நாட்கள்தான் ஆகின்றன. இதற்குமுன் இங்கே நீங்கள் எதிர்பார்த்த பட்டை நாமம், கதர்சட்டை, வழுக்கைத் தலை திருமலை அவர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் காலத்தில் ஏற்பட்ட தவறு. நான் பொறுப்பாளியல்ல. திருமலை ஓய்வடைந்து விட்டதுடன் உலகத்திலிருந்தும் ஓய்வு பெற்றுக்கொண்டு விட்டார். அதனால் ஆடிட்டிங் போது இந்தத் தவறை ஒழுங்கு செய்யவேண்டியதைத் தவிர வேறு வழி இல்லை."

'ரொம்பக் குறும்புக்காரி. துணிச்சலாகப் பேசுகிறாளே, பொல்லாதவளாக இருக்கிறாளே.'

"ஐ. ஸீ." என்று கூறிவிட்டு உள்ளே வந்தான். அவனது பார்வையிலே அவள் பிசினாக ஒட்டிக்கொண்டு விட்டாள். சிரிக்கும்போது அழகான பல்வரிசை...கண்களில் எத்தனை குறும்புத்தனம். கைவிரல்கள் பிஞ்சு வெண்டைக்காயைப் போல...

பிரமாதமாக ஒப்பனை செய்து கொள்ளவில்லை, ரொம்ப எளிமையாகத்தான் உடுத்தியிருந்தாள். ஆனாலும்



...எத்தனை ஒரு கவர்ச்சி... அவளையே நினைத்துக் கொண்டிருந்தான்.

அதன்பிறகு, அவன் எதிர்பார்த்தபடி அந்த சந்திப்பு ஒரு மழை நாளை அன்று ஏற்பட்டது.

'சோ' வென்று வானம் மகிழ்ச்சி கொள்ளாது கொட்டத் தொடங்கியது. கூடவே பூமியைப் பிளந்துவிடும் போன்ற இடியோசை. மாடியிலிருந்து இறங்கிய அவள் லிப்ட்டை விட்டு வராந்தாவிற்கு வந்ததும் யோசனையுடன் நின்றாள்.

"மழை இப்போ கொஞ்சம் நிக்கத் தொடங்கியிருக்கு. பூராவும் நிக்காது... அதனாலே குடையை விரிச்சுகிட்டு வேகமாக பஸ் நிலையத்துக்கு நடங்கோ."

அலுவலகப் பையன் தன் தலைமீது ஒரு தாளேட்டை மூடிக் கொண்டு கூவிவிட்டு, மழையில் பாய்ந்து ஓடினான்.

சிறிது நேரம் நின்று பார்த்தாள். மழை கொஞ்சம் குறைந்து கொண்டு வந்தது. ஆனால் இடி ஓசை... அது தொடர்ந்த வண்ணமிருந்தது.

அலுவலக ஊழியர்கள் அனைவரும், எப்படியோ மழையையும் இடியையும் பொருட்படுத்தாது, குடையை விரித்தவர்களும்-தலையில் துண்டைப் போட்டவர்களுமாக விரைந்தனர்...

அவள் நின்று கொண்டேயிருந்தாள். பாத அணியின் ஓசை பின்னால் ஒலிப்பதைக் கேட்டு மெள்ளத் திரும்பினாள்.

கடைசியாக மிகவும் நிதானமாக லிப்ட்டிலிருந்து கைப்பையுடன் மழைக் கோட்டுடன், வெளிவந்த அவன் வராந்தாவை நோக்கி வந்து கொண்டிருந்தான். "உங்களுக்கு நான் உதவலாமா!" புன்முறுவலுடன் கேட்டான்.

படபடவென்று ஒரு இடியில், கட்டிடமே அதிர்ந்த போது அவள் சட்டென்று சுவற்றைப் பிடித்துக் கொண்டாள்.

"இடின்னா உங்களுக்கு பயமா?" அவன் சிரித்தபோது பரிமளாவின் முகம் சிவந்து போயிற்று... கண்கள் கோபத்தால் மின்னின.

"எங்கம்மாவுக்குக் கூட ரொம்ப பயம்... இடிக்கத் தொடங்கியதும், அம்மா ஒரு போர்வையாலே தலையை மூடிக்கிட்டு படுக்கையிலே போய் படுத்துடுவாங்க. வானத்துக்குக் கீழ் குடியிருந்து கொண்டு இடிக்கு பயப்படுவது சாத்தியப்படுமான்னு நான் அவங்களை கேலி செய்வேன். ஆனாலும் அவங்க பயம் போகவில்லை. இத்தனை நாழி எங்கம்மா... கம்பளிக்கிடையிலே ஒளிஞ்சு கொண்டிருப்பாங்க!"

பக்கென்று சிரித்து விட்டாள் பரிமளா... பளீரென்று வீசிய மின்னலில் அவளது முகம் பளிச்சென்று அந்த சிரிப்பில் மலர்ந்து அழகாகத் தெரிவதைக் கவனித்தான்... மேனியெல்லாம் புல்லரிக்க, அவளையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டு நின்றான்.

"சரி ஸார்...உங்களுக்கு மறுப்பு இல்லேன்னா என்னை பஸ் நிலையம்வரை, உங்க காரில் கொண்டு விடுங்கோ. ரொம்ப உதவியாக இருக்கும்."

"உதவி வேண்டுமான்னு நான்தான் முதலில் கேட்டவன்... உங்களுக்கு உதவி செய்வதில் ரொம்ப மகிழ்ச்சியடைகிறவனும் நான்தான்" சிரித்தபடியே அவன் மின்னலையும், இடியையும் பொருட்படுத்தாது—அசட்டையாக தோட்டத்திற்குள் இறங்கினான். "இங்கேயே நில்லுங்க, காரைக் கொண்டு வருகிறேன்" என்று ஓட்டமும் நடையுமாகக் கார் நின்ற இடத்திற்கு விரைந்தான்.

பஸ் நிலையத்தில் அவளை அவன் விட்டுப்போக விரும்பவில்லை. அவளது வீட்டு வாசலில் பத்திரமாக இறக்கிவிட்டு விடை பெற்றுக்கொண்டு கிளம்பினான்.

அதற்குப்பின் இன்னொரு மழை நாளின் போதும் அவளைத் தன் காரில் ஏற்றிக் கொண்டு வீட்டில் சேர்ப்பித்தான்.



மெல்ல இப்படி ஆரம்பித்தது அவர்களது தொடர்பு. பின்னர் தினமும் அவளைக் காரில் ஏற்றிக்கொண்டு வீடுவரைக் கொண்டு சேர்ப்பதை ஒரு இன்பப் பணியாக்கிக் கொண்டு விட்டிருந்தான்.

பயணத்தின்போது பக்கத்திலே உட்கார்ந்திருக்கும் அவளிடம் அவன் கண்ணியமாகவே நடந்து கொண்டான். தன்னைப் பற்றியும்—தன் குடும்பத்தைப் பற்றியும் சொல்லிக் கொண்டான். அவளும் தன் குடும்பத்தை வார்த்தைகளால் அறிமுகப்படுத்தினாள்.

பின்னர்...பகல் உணவின்போது இருவரும் தாங்கள் கொண்டு வந்த உணவைப் பகிர்ந்து கொண்டு சாப்பிடத் தொடங்கினர்.

இத்தனை சங்கதிகளும் மற்ற அலுவலர்களின் கண்களில் படாமலா போய் விடும்?

ஆரம்பத்தில் அவர்களிருவரைப் பற்றிப் பரபரப்பான கிசுகிசுக்களில் அலுவலகமே கலகலத்துப் போனது.

சுரேந்திரன்... பரிமளாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான் என்று ஒரு கதை எழுந்ததும், கிசுகிசுக்களின் சுவாரஸ்யம் குறைந்து போயிற்று...

"கல்யாண சாப்பாடு ஒண்ணு இருக்குடா! அது தெரிஞ்சகதை. வேறு ஏதாவது ஒண்ணு சொல்லு. பழைய கதையையே சொல்லி அறுக்காதே." என்று அலுவலர் சுந்தசாமி, டைப்பிஸ்ட் கோபுவை அதட்டும் வரை அவர்களது நெருக்கம் ரொம்பவும் தெரிந்த விஷயமாகி விட்டிருந்தது.

அலுவலகப் பையனே சிலசமயம் ஓடிவந்து செய்திகளை அவனிடம் சொல்வான்.

"பரிமளா அம்மா இன்னும் பத்து நிமிடத்திலே சாப்பிட வரேன்னு சொல்லச் சொன்னாங்க."

"பரிமளா அம்மா இன்னும் ஒரு அஞ்சு நிமிஷம் உங்களைக் காத்துக்கிட்டு இருக்கச் சொன்னாங்க—எதிர்

பக்கத்து மருந்துக் கடையிலே அவங்க அப்பாவுக்கு ஏதோ மருந்து வாங்கப் போயிருக்காங்க.''

உற்சாகத்துடன் ஊது வந்து கொண்டிருந்தான். சினிமாவில் பார்ப்பது போல, ஒரு உயர் மட்டத்து அதிகாரிக்கும் அலுவல ஊழியரான பரிமளாவுக்கும் இடையே ஏற்பட்டிருந்த காதலை அவன் ரசித்தான். இது சுபமாகக் கல்யாணத்திலே முடியணும் என்று விரும்பினான்.

பயல் படு சுட்டி! ஒருநாள் மிகவும் துணிவுடன் கேட்டு விட்டான்.

பிரீஃப் கேசைத் தூக்கிக்கொண்டு பின்னால் ஓடி வந்தவன்... ''எப்போ ஸார் எங்களுக்கெல்லாம் விருந்து சாப்பாடு!''

புரியாதவன்போலப் புருவங்களை உயர்த்திவிட்டு காரின் கதவைத் திறந்தான் சுரேந்திரன்.

''பரிமளா அம்மா ரொம்ப நல்லவங்க ஸார், தானுண்டு, தன் வேலையுண்டுன்னு இருப்பாங்க ஸார்.'' அவளது புகழைப் பாடிவிட்டு பற்கள் தெரிய அவன் கொடுத்த ஒரு ரூபாயை ஆவலுடன் வாங்கி சட்டைப் பையில் திணித்துக்கொண்டு சலாம் போடுவான் பையன்.

இப்படி அலுவலகமே தெரிந்துகொண்டு விட்டிருந்த அவர்களது காதல் அம்மா காதில் இன்னமும் விழவில்லை என்பது அதிசயம்தான். அம்மா ரொம்பப் படித்தவள் அல்ல. மேலும் சென்னை வாசம் அவளுக்குப் புதிது. கோவில் குளங்களைத் தவிர அவள் வீட்டைவிட்டு வெளாக வெளியில் அலைய விரும்பாதவள்.

வீடு, மகன், வணங்கும் தெய்வங்கள், இதுதான் அவளது உலகம். அவள் காதுகளில் மகனின் காதல் சங்கதி விழாதிருந்ததில் அதிசயம் இல்லை.



ஒருநாள் மாலை அம்மா பார்வதி குளிர் ஜுரத்துடன் படுக்கை மீது அரற்றிக் கொண்டிருந்தாள்.

''என்னம்மா'' கவலையுடன் வந்து உட்கார்ந்து கொண்டு அவள் நெற்றியைத் தொட்டான்.

நெருப்பாக உடல் தகித்தது. உடனடியாக கம்பெனியின் டாக்டரை வரவழைத்து விட்டான்.

இரண்டு தினங்களில் அவள் குணமாகி எழுந்து உட்கார்ந்து விட்டாள்.

அன்று அவளைப் பார்க்க வந்த டாக்டர் வேடிக்கையாகத்தான் சொன்னார். ''பிள்ளை பெரிய வேலையில் இருக்கிறார். நல்ல பக்குவமான வயது, வசதியான குடும்பம். இத்தனை இருந்தும் இன்னும் ஒரு மருமகளைத் தேடிக்காம இருக்கிறீங்களே?''

அன்றிலிருந்து அம்மா பார்வதி ஆரம்பித்துவிட்டாள்.

இரவு உணவுக்குப் பின் அவனது அறைக்குள் வந்து பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொள்வாள்.

''நானும் தினமும் சொல்லிக் கொண்டிருக்கேன். நீ என்னவோ காதில் போட்டுக்கிறதில்லை, என் ஒன்னுவிட்ட அண்ணா பெண் வனஜா. பி. ஏ. படிச்சிருக்கு. பார்க்க லக்ஷணமா இருக்கும். நான் சொல்றபடி ஒரு கடிதாசி எழுது'' வற்புறுத்தி வந்தாள்.

''அம்மா இந்த வருஷம்தானே இங்கே வந்து வேலை ஏத்துக்கிட்டு இருக்கேன். வேலையில் நிலையா காலை ஊனிக் கொண்ட பிறகுதான் கல்யாணம்'' அவன் மறுப்பு தெரிவித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் மனதிற்குள் ஒருநாள் பரிமளாவைக்கொண்டு வந்து அம்மா முன் நிறுத்தி, 'இவள்தான் உன் வருங்கால

மருமகள்' என்று அறிமுகப்படுத்த வேண்டுமென்ற தீவிர ஆசை.

அவளைத் தன் தாய்க்கு அவன் அறிமுகப்படுத்து முன் அவள் முந்திக் கொண்டு விட்டாள்.

''வாசல்வரை வந்துவிட்டுப் போகிறீங்க. உள்ளே வாங்க. எங்க குடும்பத்தைப் பார்க்க வேண்டாமா?'' ஒரு நாள் வற்புறுத்தி அழைத்தாள்.

அவர்களுடைய வீட்டைப்போல வசதியும், அலங்காரமும் நிறைந்த ஒரு குட்டி பங்களா அல்ல அது. தெருவீடு. ஓடு வேய்ந்த கூரை, பழங்காலத்துக் கட்டிடம். கூடம் தாழ்வாரம், முற்றம் என்ற அமைப்புடன் கூடிய வீடு.

கூடத்து ஊஞ்சலில் அவளது அப்பா அமர்ந்திருந்தார். ஒடிசலான தோற்றம்! தலைமுடி நரைத்து, வயதின் தன்மை அதிகமாகத் தெரிந்த முகம். உள்ளே வந்து எட்டிப்பார்த்தாள் அவளது தாயார்.

பின்பக்கத்திலிருந்து ஒரு வாண்டுப் பையன் ஓடிவந்து அவனுடன் அவளைப் பார்த்துவிட்டுப் பின்வாங்கினான்.

பாவாடை தாவணியில் தெரிந்த ஒரு பெண்- அவள் தங்கை, அம்மா கொடுத்த காப்பியை எடுத்துக் கொண்டு வந்து ஊஞ்சல் ஓரத்தில் வைத்துவிட்டுப் புன்னகைத்தபடி ஓடிவிட்டாள்.

' அப்பா இவர் எங்க அலுவலகத்தின் தலைவர். பழகுவதற்கு ரொம்ப இனியவர். சென்னை இவருக்கு ரொம்பவும் புதிது!'' அறிமுகம் செய்து வைத்தாள்.

மகளின் சிவந்த முகத்தையும், வந்த களிப்பையும் ஏற இறங்கப் பார்த்தார் அப்பா...

காப்பியைப் பருகிக்கொண்டே கூடத்து நாற்காலியில் உட்கார்ந்தபடி வெகுநேரம் அவன் பேசினான்.



பேசப் பேச... அவன் தந்தை கேட்ட பல கேள்விகளுக்கு அவன் பதில் சொல்லப் போக, உறவு நெருக்கமாயிற்று.

''கேட்டியா? சுத்தி வளைச்சு பார்த்தா இந்தத் தம்பி நமக்கு ஒரு வகையில் தூரபந்து.'' மகிழ்ச்சியுடன் சிரித்தார் அவளுடைய தந்தை.

''அப்பாடி ஜாதி சமய வித்யாசம் வந்து குறுக்கிடாமல் தப்பினோம்'' இருவரின் மூதாதையரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உறவு வேறே...''

அவனுக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. என்னென்னவோ முட்டுக்கட்டைகளை எதிர்பார்த்தவனுக்குப் பரிமளா வீட்டில் பலத்த வரவேற்பு கிடைத்தது.

இன்னமும், அவன்தான் அவளைத் தன் தாய்க்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை. தாய் சரி என்று தலையாட்ட வேண்டும், அவ்வளவுதான். அதற்குமேல் அவனால் காத்திருக்க முடியாது.

பரிமளாவின் கழுத்தில் மூன்று முடிச்சுகள் போட்டு அவளை ஊர் அறியத் தன்காரில் பக்கத்திலே மனைவியாக வைத்துக்கொண்டு பவனி வரவேண்டும் என்ற ஆத்திரம்.

இனியும் தாமதிக்கக் கூடாது. இந்த வாரம் ஒருநாள் பரிமளாவை அவன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போக வேண்டும். கட்டாயம் அவளை அறிமுகப்படுத்தவேண்டும்.

வீடு திரும்பியபோது அம்மா அவனிடம் ஊரிலிருந்து வந்த ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

''பிரிச்சுப் படிச்சுப் பார். எழுத்துக்கூட்டிப் படிக்கிறதுக்குள்ளே என் பிராணன் போயிடும். வெள்ளெழுத்துக் கண்ணாடியை மாத்திக்கணும். கொஞ்ச நஞ்சம் படிக்கத்

தெரிகிறதும், கண்ணாடி பவர் குறைவாலே ரொம்ப சங்கடமா இருக்கு'' முணுமுணுத்தான்.

கடிதத்தைப் பிரித்துப் படித்தான். ஊரில் அவர்களது கிராமத்து வீட்டைப் பார்த்துக்கொண்டு இருந்த செல்லம்மாளிடமிருந்து வந்த கடிதம.

அண்டை வீட்டுப் பையன் அவள் சொல்படி எழுதிய சுருக்கமான கடிதம்.

''அம்மா அவர்கள் பாத கமலத்துக்கு வணக்கம் சொல்லிக் கொண்டு செல்லம்மாள் எழுதிய கடிதம்,

இப்பவும் எனக்கு உடம்புக்கு முடியாமல் இருக்கிறபடியால் தாங்கள் கிருபைசெய்து ஒரு தடவை கருணாவை இங்கே அனுப்பிவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தங்களுக்கு சிரமம் இல்லாவிட்டால் தாங்களும் ஒரு பயணம் வந்து போனால் என் மனதிற்கு ஆறுதலாக இருக்கும். எனக்கு ஏதாவது நேர்ந்துவிடும்முன் வீட்டையும், அதில் உள்ள சாமான்களையும் உங்கள் வசமாவது, தம்பி வசமாவது ஒப்படைக்க வேண்டுமென்ற அவா. இதைத் தந்தியாக பாவித்து உடனே பதில் போடவும். அன்புள்ள செல்லம்மாள்''

கடிதத்தை மகன் படிக்கக் கேட்ட பார்வதி முகம் சுருங்கிப் போனாள்.

''இந்த ஊமைச்சி போய் என்ன காரியம் சாதிக்கப் போறா! நான் போய்தான் என்ன சாதிச்சுடப் போறேன். தம்பி சுரேன்! அடுத்த வார வாக்கில் ஆபீஸ் லீவு சேர்ந்தாப்போல மூணு நாள் வருதே, காரை எடுத்துக் கொண்டு நீ நேரே ஊருக்குப் போய் என்ன ஏதுன்னு கவனிச்சுக் கொண்டு வா.''



''நீங்க அம்மா...'' சுசப்புடன் கேட்டான் மகன்.

''நான் இந்த ஊமைச்சியோட இங்கே இருக்கேன்... இப்ப நம்ப குடித்தனம் இரண்டு பக்கமாகி அலை பாய்ஞ்சுகிட்டிருக்கே. கிராமத்து வீட்டையும் கவனிக்கணும் வீட்டையும் பார்த்துக்கணும்.''

அம்மா கவலைப்பட்டாள்.

பெருமூச்சு விட்டபடி தொடர்ந்து சொன்னாள். ''அப்படியே எங்க ஒண்ணுவிட்ட அண்ணன் வீட்டுக்குப் போய் அந்த வனஜாப் பெண்ணை ஜாடையாப் பார்த்துட்டு வா' என்றாள்.

கிராமத்திற்குப் போகுமுன் அம்மாவுக்குப் பரிமளாவை அறிமுகம் செய்து வைக்க வேண்டும். இல்லாவிடில் அம்மா நந்திபோல அவளது எண்ணங்களுக்குக் குறுக்கே வரக் கூடும், கவலைப்பட்டான் அவன்.

# 3

மறுநாள் சுரேந்திரன் அலுவலகத்தில் தன் அறைக்குள் ஓடிவந்ததுமே இண்டர்காமில் பரிமளாவை அழைத்தான்.

குப்பென்று மல்லிகையின் மணம் முகத்தில் மோதவே நிமிர்ந்து பார்த்தான்.

''நேத்து எதுக்காக லீவுன்னு அதட்டிக் கேட்கத்தானே கூப்பிட்டீங்க'' நனக்கு அவன் மேல் அதிகாரி என்ற பயம் இன்றி குறும்புத்தனமாகக் கேட்டுப் புன்முறுவலித்தாள்.

''காதல் என்றதுமே குளிர்விட்டுப் போச்சு இல்லையா?'' அவனும் கூடவே முறுவலித்தான்.

"இன்னும் இரண்டு தினங்களில் நான் திருச்சிவரை போக வேண்டியிருக்கும். எங்கள் கிராமத்திற்கு பயன்பட வேண்டிய ஒரு முக்கிய வேலை இருக்கு!"

"கூட நீயும் வா என்று அழைக்கிறீங்களா?" சிரித்தாள் அவள்.

"ஒருநாள் உன்னை என்கூட கிராமத்துக்குக் கூட்டிக் கொண்டு செல்லப் போகிறேன். என் தாயும் தந்தையும் நானும் பிறந்து வளர்ந்து ஆளான வீட்டை என் வருங்காலத்து மனைவிகிட்டே காட்ட வேண்டியது அவசியம்."

"இரண்டு நாட்கள் நீங்கள் வெளியூருக்குப் போகப் போறீங்க. அவ்வளவுதானே."

"ஆனாலும் நீ ரொம்ப அவசரக்காரி. இன்னிக்கு சாயங்காலம் வேலை முடிந்ததும் உன்னை நான்வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகப் போகிறேன்."

"அப்பாடி! இப்பவாவது துணிவு வந்ததே-உங்கம்மா விடம் என்னை அறிமுகப் படுத்தப்போறீங்க. ரொம்ப தாங்ஸ்... சாயங்காலம் எப்ப வரும்னு காத்திருப்பேன்" கூறிவிட்டு வேகமாக வெளியேறினாள்.

அவளது சிவந்த முகத்தைக் கடைக்கண்ணால் பார்த்த டைப்பிஸ்ட் காந்தமணி தன் அருகிலிருந்த பெண் ஊழியரிடம் அடிக்குரலில் கிசுகிசுத்தாள்.

"வந்ததும் வராததுமாக மிஸ்டர் சுரேசுக்கு இவளைப் பார்த்துப் பேசாட்டா வேலை ஓடாது" களுக்கென்று சிரித்தாள்.

"நீ இன்னும் அந்த அனுபவத்தில் புகவில்லை. காதல்னு வந்துட்டா மத்தவங்களைப் பத்தி கவலை, பயம் எல்லாம் போயிடும்."



வேடிக்கையாகப் பேசிவிட்டுத் தன் வேலையில் மூழ்கி விட்டாள் அவள். வண்டியை வாசலில் நிறுத்திவிட்டு கேட்டைத் திறந்து கொண்டு, அவளை இறங்கச் சொல்லி உபசரித்தபடி அவன் முன்னே நடந்தான்.

தோட்டத்திலே பூத்துக் குலுங்கிய ரோஜாச் செடியருகே அவள் நின்றபோது வேகமாக வந்து ஒரு பூவைப் பறித்து அவளிடம் கொடுத்தான் 'லேடீட் வித் பிளவர்ஸ்' என்பார்கள்-அம்மாவிடம் அறிமுகம் செய்யுமுன், ரோஜா மலர் கொடுத்து உன்னை உள்ளே அழைத்துச் செல்கிறேன் சரிதானே" லேசாக சிரித்தான்.

முன்பக்கமாகத் தெரிந்த அறையின் ஜன்னலை மறைத்த திரைக்குள் கவனித்தாள் அவள்.

அழைப்பு மணிமீது அவன் கை வைக்குமுன் கதவு திறக்கப்பட்டது அதைப் பிடித்துக் கொண்டு நின்ற அந்த அம்மாளின் முகத்தை வியப்புடன் பார்த்தபடி வராந்தாவிலேயே நின்றுவிட்டாள் பரிமளா!

"அம்மா எங்கே" என்று கூறிவிட்டு சைகை செய்தான் சுரேந்திரன்.

கண்கள் பளபளக்க, முகத்தில் மகிழ்ச்சி பொங்க உதடுகள் துடிக்க நின்ற அந்தம்மாள், மௌனமாக, வேகமாக உள்ளே சென்றாள். சில விநாடிகளில் ஒரு சிறு காகிதத் துண்டைக் கொண்டு வந்து நீட்டினாள்.

அம்மாவின் குண்டுக் கையெழுத்து, தட்டுதடுமாறி அம்மாவுக்கு தமிழ் எழுதப் படிக்கக் கொஞ்சம் தெரியும். ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தின் ஏட்டைக் கிழித்துப் பென்சிலால் அம்மா பெரிய எழுத்துக்களால் எழுதியிருந்தாள்.

"கிராமத்துக்குப் போகும்போது உன்னிடம் கொஞ்சம் சாமான்கள் வாங்கி அனுப்பணும்னு கடைக்குப் போயிருக்கேன். ஊமைச்சி காப்பி டிபன் எடுத்துக்கொடுப்பாள்."

"அப்படியே கோவிலுக்குப் போயிட்டு வருவேன், அம்மா." முன்னறையில் பொத்தென்று ஒரு சோபாவின் மீது அயர்வுடன் உட்கார்ந்தான் சுரேந்திரன்.

"எது எது எப்போ நடக்கணுமோ அப்பதான் நடக்கும் என்பதற்கு இதுவே உதாரணம். உட்கார்" என்று உபசரித்தபடி அம்மா எழுதிவைத்த சீட்டை அவனிடம் நீட்டினாள்.

உதட்டைக் குவித்துக் கொண்டு மெல்ல சிரித்தாள் பரிமளா.

"பரவாயில்லை. அவங்க கடைத்தெருவிலிருந்து வரும் வரை காத்திருந்து பார்க்கிறேன். ஆமாம், இவங்க?" என்று தன் எதிரே சற்று தூரத்தில் பவ்யமாக வந்து நின்ற சுகுணாவைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள்.

சில நாட்கள் முன் அவன் போட்ட உத்தரவுப்படி அம்மா அவளுக்கு சில புடவை ரவிக்கைகளைத் தன் பழைய துணிகளிலிருந்து எடுத்து வழங்கியிருந்தாள்.

சுகுணா அவைகளை நன்றாகத் துவைத்து, கஞ்சி போட்டு, பெட்டி போட்டு உடுத்திக் கொண்டிருந்தாள்.

பார்க்க லக்ஷணமாகவும், பளிச்சென்ற உடையிலும் தெரிந்த அவளை இந்த வீட்டின் வேலைக்காரி என்று பரிமளாவால் மதிப்பிட முடியவில்லை.

"இவங்க நான் பிறந்ததிலிருந்து எங்களோடயே வசிக்கிற தூரத்து உறவுக்காரங்க. வேலைக்காரியாக அம்மா பாவித்தாலும் எனக்கு அப்படி நினைக்க முடிகிறதில்லை."



காப்பி பலகாரம் எடுத்து வைக்கவா, என்று கைகளால் ஜாடை செய்து கேட்ட சுகுணாவின் கண்கள் மென்மையாகப் பரிமளாவின் முகத்தை ஆராய்ந்தன.

இதழ்க்கடையில் மலர்ந்த சிரிப்பில் ஒரு அர்த்தம் தேங்கி நின்றது.

"பாவம், ஊமை போலயிருக்கு. ஆனாலும் ஜாடையிலேயே எல்லாத்தையும் விளக்கிடறாங்களே," ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

"இவங்க அம்மாதான் எங்க கிராமத்து வீட்டைப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாங்க—அவங்களுக்கு உடம்புக்கு முடியலைன்னு கடிதம் வந்திருக்கு. அதனால்தான் நான் திருச்சிக்குப் போக வேண்டியிருக்கு" விளக்கினான் அவன்.

"தன் தாய்க்கு உடம்புக்கு முடியலை என்பது... இந்தம்மாவுக்குத் தெரியுமா?"

"பாவம், வாய்பேச முடியாத இவங்ககிட்ட விஷயத்தைச் சொல்லிக் குழப்புவானேன்னு சொல்லலை."

"எனக்கு உங்க வீட்டில் ஊமையான ஒரு வேலைக்காரம்மா இருப்பதைப் பத்தி இத்தனை நாள் சொல்லலையே?"

"தேவையில்லைன்னு சொல்லலை..."

கைகளைத்தட்டி சப்தமிட்டு அவர்கள் கவனத்தைத் தன் பக்கம் இழுத்தாள் சுகுணா.

காப்பி பலகாரம் சாப்பிடுங்கோ முதலில்... என்று மறுபடியும் ஜாடை செய்தாள்.

"பேசத் தெரியாதே தவிர, வீட்டு வேலைகளிலும்—என்னைக் கருத்தோடு கவனிப்பதிலும் இவங்களுக்கு ஈடு

இணை யாரும் கிடையாது; அதனால்தான் அம்மா இவங்களை கிராமத்திலே தாயோடு விட்டுவிட்டு, சென்னைக்கு வந்து புது வேலைக்காரி யாரையும் தேடிக்கலை.''

வெளேரென்ற மேஜை விரிப்பின் மீது பீங்கான் தட்டுகளைப் பரப்பி வைத்து விட்டுத் தன் கையால் தயாரித்த பாதாம் பர்பியையும், காராபூந்தியையும் கொண்டு வந்து சுகுணா பரிமாறினாள். பின்னர் அலமாரியிலிருந்த பீங்கான் கெட்டிலை எடுத்து வந்து, காப்பியை நிறைத்துக் கொண்டு வந்து மேஜையின் நடுவே இரண்டு கோப்பைகளுடன் வைத்தாள்.

''இன்னிக்கு நீ வரப்போறேன்னு ஸ்வீட், காரம் எல்லாம் ஸ்பெஷல்'' சிரித்தான் சுரேந்திரன்.

மெல்லப் பரிமளாவின் தோளைத் தொட்டு, தட்டிலிருந்த பர்பியைக் காட்டி சாப்பிடச் சொல்லி ஜாடை செய்தான். வரிசையாகத் தெரிந்த பற்கள் லேசாக ஒளியிட புன்முறுவலித்தாள்.

''ஸ்வீட், எல்லாம் தயார் பண்ணி வைக்க இவங்களுக்கு நான் வர்றது எப்படித் தெரியும்.''

''சும்மா வேடிக்கைக்கு சொன்னேன். வெள்ளிக்கிழமையன்று அம்மா ஏதாவது ஒரு இனிப்பு செய்து, குலதெய்வத்திற்கு வச்சு நைவேத்தியம் செய்யற பழக்கம்—காலையிலேயே இந்த இனிப்பை அம்மா கடவுளுக்கு நைவேத்யம் செய்துட்டாங்க—இப்போ என் காதலிக்கு நைவேத்யம்'' சிரித்துக் கொண்டே அவள் கையிலிருந்த பர்பியைத் தட்டித் தன் வாயில் போட்டுக்கொண்டான்.

ரொம்பவும் புரிந்து விட்டதுபோல சுகுணா தலையை ஆட்டிக் கைகளைத் தட்டினாள்.

''அவங்க என்ன சொல்றாங்க, புரியலையே'' கேட்டாள் பரிமளா,



''இந்த இனிப்பும் காரமும் சாதாரணமாக வெள்ளிக்கிழமைகளில் எங்கள் வீட்டில் தயாரிக்கும் பலகாரங்கள். ஆனால் இந்தப் புதுப் பீங்கான் கெட்டிலால்—கோப்பைகளில் காப்பி உபசாரணை நடப்பது, வந்த விருந்தாளிக்கு நான் காட்டும் அதிகப்படியான மரியாதை. சாதாரண நாட்களில் இதை நாங்கள் அலமாரியிலிருந்து எடுப்பதில்லை.''

''இத்தனையுமா அவங்க ஜாடையிலே பேசிட்டாங்கன்னு கதை விடுகிறீங்க'' சிரித்தபடியே அவள் பலகாரங்களை சுவைத்தாள்.

ஓடிவந்து... கோப்பையில் மெல்ல சிந்தாது நிதானமாகக் கெட்டிலிலிருந்து காப்பியை நிறைக்க வந்த சுகுணாவின் கரத்தைப் பார்த்துவிட்டு திடுக்கிட்டுப் போனாள், பரிமளா.

''இது என்ன இப்படி ஒரு காய வடு கைகள் மேல்?'' திகைப்புடன் கேட்டாள்.

''சின்னப் பெண்ணாக இருக்கும்போது, வீட்டு விருந்தாளியின் நகையைத் திருடி விட்டாங்களாம் இந்தம்மா. கோபம் தாங்காது பெற்ற தாய் மகளுக்கு சூடு போட்டு விட்டாங்களாம். கொடுமை... மகா கொடுமை இந்தக் கபடமற்ற முகத்தைப் பார்த்தால் அந்தத் தவறைச் செய் திருக்கவே மாட்டாங்கன்னு தோணுது'' என்றபடி பரிதாபத்துடன் அவன் மறுபடியும் சுகுணாவை ஏற இறங்கப் பார்த்தான்.

காப்பியைப் பருகிவிட்டு கோப்பையை மேஜையில் வைத்ததும் மீண்டும் சுகுணா, அதை நிறைக்கத் தொடங்கினாள்.

''போதும், அம்மா'' என்றபடி அவள் மறுப்பு தெரிவித்தபோது முறுவலுடன் கைகளால் ஜாடை காட்டினாள் சுகுணா.

"இவங்க என்ன சொல்றாங்க! ஒண்ணுமே புரியலை."

"புரிஞ்சு கொள்ளத் தெரிஞ்சுக்கோ. வீட்டு வேலையில் உனக்கு வருங்காலத்தில் கூட உதவப் போறவங்க இவங்க தான். என்னா என் அம்மா உடம்பு தள்ளலைன்னு சதா... ஊஞ்சலில் ஆடிக்கொண்டு உட்கார்ந்து விடுவாங்க."

"என்ன சொல்றாங்கன்னு கேட்டேன்! அதை விட்டுட்டு..." சிணுங்கினாள் பரிமளா.

"இவங்களைத்தானே கல்யாணம் செய்துக்கப் போறீங்கன்னு கேட்கிறாங்க."

"இவங்க ஜாடை எனக்குப் புரியலைனுட்டு ரொம்பவே கயிறு விடுகிறீங்க" பொய்க் கோபத்துடன் எழுந்தாள் கையைக் கழுவ. ஓடோடியும் வந்த சுகுணா டவலையும் சோப்புப் பெட்டியையும் நீட்டியபடி வாஷ்பேசின் அருகே வந்து நின்றாள்.

கையைக் கழுவிக் கொண்டு, நன்றி தெரிவிக்கும் பாவனையில் அவள் பக்கம் பரிவுடன் திரும்பிய பரிமளாவை சுகுணா புன்முறுவலுடன் பார்த்து கண்களை சிமிட்டினாள்.

பின்னர் கைகளால் கழுத்திலே தாலிகட்டும் பாவனையில் ஜாடை காட்டிவிட்டு கைகளைக் கொட்டினாள். முகத்திலே கொள்ளை மகிழ்ச்சி வழிந்தது.

திகைப்பும், ஆனந்தமுமாக பரிமளா அவளைமீண்டும் பார்த்தாள். சுரேந்திரன் சொன்னது உண்மைதான்.

வாய்பேச முடியாத நிலையில் கூட எத்தனை உவசக்தியிருக்க. வந்திருப்பவள் சுரேந்திரனுக்கு வாழ்க்கைப் படப் போகிறவள் எனப் புரிந்து கொண்டு விட்டாளே!

"ஆமாம்!" என்று தலையை ஆட்டினாள் பதிலுக்கு பரிமளா.



சட்டென்று அருகில் நெருங்கி சுகுணா அவளது கன்னங்களை வழித்து திருஷ்டி சொடுக்கினாள்.

"நீங்கள் இருவரும் பொருத்தமான ஜோடி. எனக்குப் பிடிச்சிருக்கு" என்று ஜாடை மூலம் தெரிவித்து விட்டு பற்கள் தெரிய லேசாக நகைத்தாள்.

"தாங்க்யூ..." என்று தனக்குள் சொல்லிக் கொண்ட பரிமளாவுக்கு சுகுணாவை ரொம்பவும் பிடித்து போனது.

"நீங்க கொடுத்த காப்பியும். டிபனும் ஏ ஒண்ணுன்னு நான் சொன்னதாக தயவு செய்து சொல்லுங்கோ" சுரேந்திரனிடம் கெஞ்சி விட்டு... திரும்பியவள் சுவற்றில் தொங்கிய போட்டோவின் அருகே வந்து நின்றாள்.

"நான் நினைச்சேன். அதுபடியே நீ செய்யறே... இப்போ நல்லா என் அப்பாவின் போட்டோவைப் பார்... பிறகு உன் அபிப்ராயத்தை சொல்லலாம்!"

அருகில் வந்து நின்று கொண்டான் சுரேந்திரன்.

கிராப்புத் தலையும், வெள்ளை முழுக்கை சட்டையும், சரிகை அங்கவஸ்திரமுமாக, நறுக்கிவிட்ட மீசையில் மிடுக்காகத் தெரிந்த அவனது தந்தை படத்தில் நடுவயதுத் தோற்றமுடையவராகத் தென்பட்டார். அவரது கழுத்திலே ஒரு தங்கச் செயின் டாலருடன் அங்கவஸ்திர மடிப்புக் கிடையே தெரிந்தது.

"இந்தப் படம் எடுத்த கொஞ்ச நாட்களில் அப்பா மாரடைப்பால் செத்துப் போனார். அப்போது அவருக்கு வயது நாற்பத்திரண்டுதான். ஆனாலும் பார்க்கக் கம்பீரமாக படத்தில்—காண்பதைவிட இளமையாக இருப்பாராம்."

சுரேந்திரனின் குரலில் பெருமை தொனித்தது.

கைகளைக் கட்டிக் கொண்டு படத்தின் முன் நின்ற பரிமளா அதை ஒன்றிப்பார்த்துவிட்டு லேசாக சிரித்தபடி தலையை ஆட்டினாள்.

''எதுக்கு சிரிக்கிறே? முழுக்கை சட்டை மேலே மைனர் செயின் போட்டுக் கொண்டிருக்கிறாரென்று சிரிக்கிறியா...கழுத்திற்கும் கடிகாரத்திற்கும் தங்கச் சங்கிலி போட்டுக் கொள்ளும் அளவுக்கு அப்பாவுக்குத் தகுதிகள் இருந்தன. அப்பா போட்டுக் கொண்டிருந்த அதே சங்கிலி என் கழுத்திலும் தொங்குதே...நீ கவனித்ததில்லையா?'' சொல்லிக்கொண்டே ஷர்ட்டுக்குள் கையைவிட்டு மார்பில் தொங்கிய அந்தச் சங்கிலியை எடுத்து அவளிடம் காட்டினான்

''முகத்திலேயே பணக்காரர் களை சொட்டுகிறது. இதெல்லாம் அணிந்துகொள்ள இவர் தகுதியுடையவர்னு தெரிகிறது''

''இந்தத் தகுதி என்னிடமிருந்து நமக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்குத் தொடரும். அம்மா சொல்லியிருக்காங்க. இந்தச் சங்கிலியைத் தன் பேரன் பிறந்ததும் நான் கழற்றி அவன் கழுத்தில் போட்டுவிட வேண்டுமாம்''

''பேத்தி பிறந்துவிட்டால்?'' சிரித்தாள் பரிமளா.

''பேத்திக்கு அம்மாவின் கொள்ளை நகைகள் வங்கி லாக்கரில் தூங்கிட்டுக் கிடக்கு. இது பேரனுக்குத்தான் சொந்தமாம்.''

''நான் சொல்ல வந்தது இந்த தங்கச் சங்கிலியைப் பற்றியல்ல.''

''பின்னே என்னவாம். பிரம்பு மாடு போல தலையை ஆட்டினா யாருக்குப் புரியும்.''



ஜாடை ஜாடை புரிகின்ற உங்களுக்குப் புரியாதுன்னா நம்ப மாட்டேன். அன்னிக்கு எங்கிட்ட சொன்னீங்களே மறந்து போச்சா! வீட்டுக்கு வந்து அப்பா போட்டோவை பார்த்துவிட்டு பிறகு சொல்லுன்னு. இப்போ சொல்றேன் உங்களுக்கும் உங்கப்பாவுக்கும் கொஞ்சம்கூட ஜாடை யில்லை.''

''என்ன அப்படி சொல்லிவிட்டே, அந்தக் கண், அந்த உதடுகள் எல்லாம் அப்பாவைப் போலன்னு அம்மா அடிக்கடி சொல்வாங்க.''

''அவங்களுக்கு கணவரது தோற்றத்தைப் பற்றி சதா நினைப்பு. அந்த நினைப்பிலே உங்களைப் பார்த்திருக்காங்க. அதனால் நீங்க சாயலில் அப்பாவைப் போல இருப்பதாகச் சொல்றாங்க.''

''அப்படியா சொல்கிறாய்!'' திகைப்புடன் கேட்டான் அவன்.

''உங்கப்பா போல கம்பீரமாக இருக்கிறீங்க. புருவங்கள்கூட அடர்த்தியா அவரைப் போலவே இருக்கு. ஆனால் கண்கள் உதடுகள் இதெல்லாம் உங்கப்பாவுடையவை போலக் கொஞ்சமும் இல்லை...''

''ஒருசமயம் என் அத்தை ஒருத்தி இருந்தாங்க. அவங்க சிறுவயதிலேயே அம்மை வார்த்து போயிட்டாங்க. நான் அத்தையைப் போல சாயலில் இருக்கிறேன் போலிருக்கு. இப்போ நான் யார் சாயலில் இருந்தால் என்ன? இதைப் போய் ஒரு பெரிய விவாதம் செய்யத் தேவையா'' சிறிது கோபத்துடன் கேட்டான்.

''அப்பாடி, உங்களுக்கு சின்ன விஷயத்துக்கு இப்படிக் கோபம் வராதே! உங்க குடும்பத்தைப் பத்தி தப்பித் தவறி நான் பேசிட்டா என்னை சும்மா விடமாட்டீங்க போலிருக்கே!'' செல்லமாக அவனது கன்னத்தைக் கிள்ளினாள் பரிமளா.

பக்கத்திலே களுக்கென்ற சிரிப்போசையைக் கேட்டுத் திரும்பியவன் கருணா தன் கைகளால் முகத்தை மறைத்துக் கொண்டு சிரிப்புடன் பல சப்த ஜாலங்களை எழுப்புவதைக் கவனித்தான்.

"முன்னறையில் போய் உட்கார்ந்து பேசுவோம். பாவம் அவங்களுக்கு நாம் ஜோடியா நெருக்கமா நிக்கறதைப் பார்க்க வெட்கமா இருக்காப் போல தோணறது!" என்றபடி...கருணா அருகில் நெருங்கினான் அவன்.

ஆதரவுடன் முகத்தை மறைத்த கரங்களை மெல்ல அகற்றினாள். மறுபடியும் அந்த வடுக்கள் திக்கென்றதொரு உணர்வை உண்டாக்கவே, மெல்ல அந்த வடுக்களை விரலால் தொட்டான்.

"பாவம்! அப்போ ரொம்ப வலிச்சிருக்கும் இல்லையா! உங்கம்மா ரொம்பவே உங்களை தண்டிச்சுட்டாங்க." வார்த்தைகளாலும் ஜாடைகளாலும் தன் அனுதாபத்தைத் தெரிவிக்க முயன்றான். மெல்லத் தன் கரங்களை அவனது பிடியினின்று விடுவித்துக்கொண்ட கருணா— அந்தக் கரங்களைத் தானே ஒரு சிறிது நேரம் பார்த்துவிட்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

"அயாம் வெரி ஸாரி அம்மா. ரொம்ப வலிச்சிருக்கும். இதைப் பத்தி மறந்துடுங்கோ" என்று முணுமுணுத்தபடி அவளது முகவாயை நிமிர்த்தியவன் திடுக்கிட்டுப் போனான்.

கண்களில் பொங்கிய கண்ணீர் கன்னங்களில் தாரையாக வழிவதைக் கண்டு, அவனுக்குப் பரிதாபமாக இருந்தது.

"அழாதீங்க அம்மா. எத்தனையோ காலத்துக்குமுன் நடந்தது. அழுது என்ன பயன்! வடுக்களை மாற்ற இப்போ என்ன செய்ய முடியும்!" என்று படபடவென்று



பேசிவிட்டு அதை அவள் புரிந்து கொள்ள இயலாதே என்ற பரிதாப உணர்வில் தன் முந்தானையால் அவளது கண்ணீரை மெல்லத் துடைத்து விட்டான்.

ஒருமுறை...சுரேந்திரன் பக்கம் திரும்பிப் பார்த்து விட்டு, மிகவும் அச்சத்துடன் கருணா உள்ளே ஓடி மறைந்து கொண்டு விட்டாள்.

முன்னறையில் வந்து இருவரும் உட்கார்ந்து கொண்டனர். மாலை நேரத்து மஞ்சள் வெய்யில் மெல்ல மங்கத் தொடங்கியது. மிக விரைவில் ஜன்னலுக்கப்பால் தெரிந்த தோட்டத்தில் லேசாக இருள் பரவ ஆரம்பித்தது.

கருணா உள்ளே இருந்து வந்து வராந்தாவின் விளக்கையும் போட்டாள் பூஜை அறை குத்து விளக்கை ஏற்றி விட்டு ஊதுவத்திக் கத்தையைப் புகைய விட்டாள்.

"அம்மா மறந்துட்டாக்கூட கருணா அம்மா வெள்ளிக் கிழமைகளில் ஊதுவத்தியைப் புகைக்காம இருக்கமாட்டாங்க. அப்படி ஒரு பழக்கம். இன்னொரு வேடிக்கை என்ன தெரியுமா? பூஜையறை வத்திகளில் ஒன்றை எடுத்து வந்து அப்பா படத்துச் சட்டத்தின் இடுக்கிலே சொருகி வைப்பாங்க. எங்கப்பாவுக்கு... குறிப்பிட்ட வத்தியின் மணம் ரொம்பப் பிடிக்குமாம். அத்தோட அவர் மறைந்து போனது ஒரு வெள்ளிக்கிழமை மாலை நேரத்திலாம். இந்த விவரங்களையெல்லாம் கருணா தெரிஞ்சு வெச்சுக் கொண்டு .அம்மா சொல்லாட்டிகூட செய்து முடிச்சுடுவாங்க.

"சுருங்கச் சொல்லப் போனா, கருணா அம்மா என் தாயாருக்கு வலதுகை போல!"

"கொஞ்சம் பேசத் தெரிந்திருந்தால், இன்னும் ரொம்ப உதவியாக இருந்திருப்பாங்க!" அனுதாபப் பட்டாள் பரிமளா...

மாலைப்பொழுது நன்றாக அமுங்கி இருட்டு, வேகமாகப் பரவி விட்டதும் சாலை விளக்குகள் பளிச்சிட்டன.

கடைக்குப் போன தாயை இன்னமும் காணவில்லை.

''அயாம் வெரி ஸாரி...பரிமளா, அம்மா கோயிலைச் சுத்திக் கொண்டிருக்காங்க போலிருக்கு.''

''அதனால் என்ன? இன்னொரு நாள் அம்மாவுக்குமுன் கூட்டியே அறிவிச்சுட்டு நீங்க அழைச்சிட்டு வாங்கோ. ஒருவழியில் அவங்களை நான் சந்திக்காததும் நல்லது. இன்று உங்கள் தந்தை இறந்ததினம் என்கிறீங்க. அவங்க அதை ஒரு அபசகுனமாகக் கருதினால் பிறகு நமக்குத் தானே சிரமம்.''

''நீ சொல்வதிலும் ஒரு அர்த்தம் இருக்கு.''

''தயவு செய்து கிளம்புங்கள். என் வீட்டில் கவலைப் படுவாங்க.'' துள்ளிக்கொண்டு எழுந்தாள் பரிமளா.

''நான் வரட்டுமா ரொம்ப நன்றி. பலகாரம் நல்லா இருந்தது'' என்று கூறிவிட்டுப் பையைத் திறந்து ஐந்து ரூபாய்த்தாளை எடுத்து அவளிடம் நீட்டினாள்.

''உம்...உம்'' என்று கத்தியபடி கைகளால் மறுப்பு தெரிவித்த சுகுணா உள்ளே ஓடிவிட்டாள்.

''அவங்க யார்கிட்டேயும் எதுவும் வாங்கிக்க இஷ்டப் பட மாட்டாங்க. நான் மாதம் அவங்க கைச் செலவுக் குன்னு ஏதாவது கொடுத்தா ரொம்ப சந்தோஷத்தோட பெற்றுக்குவாங்க எனக்கு மட்டுந்தான் அந்தச் சலுகை'' என்றபடி கார் சாவியைச் சுழற்றிக்கொண்டு அவன் வாயிற்படி இறங்கி தோட்டத்தைத் தாண்டி வெளியே வந்தான்.



அவர்கள் போவதைக் கவனித்த சுகுணா—ஓடிவந்து கையை அசைத்து அவர்களுக்கு விடை தந்துவிட்டு கதவை சாத்திக்கொண்டாள்.

காரில் வெகுநேரம் மௌனமாக அமர்ந்திருந்தாள் பரிமளா. வீட்டை நெருங்கும்போது சட்டென்று அவன் பக்கம் திரும்பினாள். ''என்னமோ என் மனதை கொஞ்ச நேரம் ஒரு சங்கதி அலட்டிக் கொண்டிருந்தது. அது என்னன்னு நானே மனத்தை சலித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.''

''சலிச்சுக்கொட்டினதிலே ஏதாவது தட்டுப்பட்டதா?''

''சொன்னால் உங்களுக்கு ஒரு சமயம் கோபம் வந்தாலும் வரலாம்.''

''சுகுணா அம்மாளின் கண்களில் தெரியும் அந்த சோகப் பார்வையை சில சமயம் நான் உங்கள் கண்களில் கவனிச்சிருக்கேன். அவங்க நிக்கும்போது தலையை ஒருபக்கம் சாய்ச்சுகிட்டு உங்களைப்போல நிக்கறாங்க. இந்த ஒற்றுமை எனக்கு மிக்க வியப்பைத் தருகிறது.''

''அப்படியா சொல்றே! ரொம்ப வேடிக்கையாகத் தானிருக்கிறது. இதுவரை எங்கள் உறவினர்கள்—நண்பர்கள் யாரும் இதுமாதிரி சொன்னதேயில்லை.''

''அக்கறையோட கவனிச்சிருக்க மாட்டாங்க. இந்தப் பழக்கம் சுகுணா அம்மாளின் பிறவி குணமாக இருக்க லாம்.''

''அவங்க மேற்பார்வையிலே சின்ன வயசிலே ஒரே வீட்டில் வளர்ந்ததான் சூழ்நிலையின் பாதிப்பாக இருக்க லாம் இல்லையா?''

பரிமளாவுக்கு விடை கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினான்.

கராஜில் காரை வைத்துப் மூடிவிட்டு வந்தான். அப்பொழுதுதான் அம்மா கடை சாமான்களுடன் ஒரு ஆட்டோவிலிருந்து இறங்கினாள்.

"ஊமைச்சி! ஓடியா இதுகளைத் தூக்கு!" என்று அவள் அதட்டியதைக் கேட்டு வராந்தாவில் வந்து எட்டிப் பார்த்த கருணா, பரிமளா சொன்னதுபோல, ஒரு பக்கத் தலையை சாய்த்துக்கொண்டு சோகபாவம் நிறைந்த கண்களுடன் நிற்பதைக் கண்டான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவனுக்குண்டான அந்தப் பழக்கம்—கருணாவுக்கு எப்படி வந்தது.

## 4

அவன் தாயார் எத்தனை சொல்லியும், அவன் சனிக்கிழமை இரவே காரில் புறப்பட்டு விட்டான்.

செல்லம்மாளுக்குத் தேவைப்படும் என்று அம்மா வாங்கி வந்த பழங்களைக் கூடையில் வைத்து பத்திரமாக பின் ஆசனத்தில் வைத்துக் கொண்டான்.

கருணா அவன் தேவைக்குக் கொண்டு வந்து கொடுத்த காய்ச்சி ஆறிய தண்ணீர் கொண்ட பிளாஸ்டிக் கேனையும் தம்ளரையும் முன்பக்கம் ஆசனத்தின் கீழ் வைத்துக் கொண்டான்.

உள்ளுணர்வின் எச்சரிக்கையால் அவன் பத்து நாளைக்கு லீவு போட்டுவிட்டுக் கிளம்பியிருந்தான். போகுமிடத்தில் நிலைமை எப்படியிருக்குமோ!

செல்லம்மாள் அம்மாவைவிட வயதில் மூத்தவள்... வியாதிக்காரி. ஆரம்பகாலத்து வறுமையும், கடும் உழைப்பும் அவளை மிகவும் அலசிப் பிழிந்துவிட்டிருந்தன.



அவர்கள் பால் கொண்ட நன்றி விஸ்வாசத்தினால் அவள் தன் சக்திக்கும் மீறி அத்தனை பெரிய கிராமத்து வீட்டைக் கட்டிக் காவல் காத்து வந்திருந்தாள்.

"இப்போது உடல்நிலை சரியில்லை என்றால், ஏதாவது கடும் காய்ச்சலில் அடிபட்டு படுத்திருக்க வேண்டும்" இல்லாவிட்டால் இந்த அவசரக் கடிதத்தை எழுதுகிறவள் அல்ல...

வழியில் கடை ஒன்றுக்கருகே நிறுத்தி சில பிஸ்கட் பொட்டலங்கள் வாங்கிச் சேர்த்துக் கொண்டான்.

தூக்கம் வராதிருக்க வாயில் சூயிங்கம்மை மென்று கொண்டு ஒரே தீவிரமாக வண்டியை திருச்சிக்குச் செலுத்தினான்.

போகும்போது அம்மா அவனை மிகவும் எச்சரித்திருந்தாள். "பத்திரம்... எதிரே லாரிகள் வரும். தூக்கம் வந்தா வண்டியை ஒரு ஓரமா நிறுத்திட்டு மூஞ்சியைக்கழுவிக்கோ பிளாஸ்க்கில் காப்பி வச்சிருக்கேன்...சாப்பிட்டுக்கோ..."

ஓயாது ஒன்றன்பின் ஒன்றாக நெடுஞ்சாலையில் வந்த லாரிகளின் முன் விளக்கின் வெளிச்சம் பளிச்சென்று கண்களைத் தாக்கியது.

—இரவுப் பயணம் அவனுக்குப் பிடிக்காத சங்கதி.

—ஆனால் செல்லம்மாளின் உடல்நிலை மிகவும் கேவலமாக இருந்து விட்டால், தாமதம் செய்ததினால் பயன் இல்லாது போய் விட்டால், வீட்டை நாய் போல் கட்டிக் காத்தாள் அனாதையாக சாகவிட்டாங்க பெரிய தனக்காரர் என்று ஊரார் கண்டபடி பேசுவார்கள், ஏசுவார்கள்.

—ஊமையோ, முடமோ பெத்த மகள் கருணாவைக் கூட அம்மா அனுப்பாது தன் உதவிக்கும் துணைக்கும் சுயநலம் காரணமாக வைத்துக்கொண்டு விட்டது தவறு.

பலவாறு எண்ணியபடி அவன் வண்டியை ஒரே மூச்சாக ஓட்டிக் கொண்டு சென்றான்.

கார் சமீபத்தில்தான் வாங்கியது. சில தினங்களுக்கு முன்னர் சர்வீஸ் செய்து எடுத்துக் கொண்டு வந்து விட்டிருந்தான். புறப்படு முன் எல்லாவற்றையும் சரி பார்த்துக் கொண்டுதான் கிளம்பினான்.

அப்படியிருந்தும் ஒரு ஆணி 'குத்தி டயர் பஞ்சராகி திருச்சி நகரம் சமீபத்தில், ஒரு இடத்தில் வண்டியை நிறுத்த வேண்டி வந்துவிட்டது

மேலே போட்டிருந்த ஸ்போர்ட் சட்டையைக் கழற்றி விட்டு பனியனுடன்... மாற்று டயரை எடுத்துக்கொண்டு காற்றை இழந்துவிட்ட, பின் சக்கர டயரை மாற்ற அவன் பாடுபட்டுக் கொண்டிருந்தபோது, ''அய்யா நீங்களா'' குரல் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

அவர்கள் ஊரில் பெட்டிக்கடை வைத்துக்கொண்டு வாழ்ந்த முனுசாமி, முண்டாசும், புஸ் மீசையும்—சிவப்பு கடுக்கனுமாக இருப்பான்.

''என்ன முனுசாமி சவுக்கியமா'' என்று வினவிய போது, முனுசாமி தன் வேட்டியை இழுத்து தார்பாய்ச்சி கச்சமாகக் கட்டிக் கொண்டான்.

''நகருங்க நான் மாத்திக் கொடுக்கிறேன்'' என்று கூறிவிட்டு கண் இமைக்கும் பொழுதில் டயரை மாற்றித் தந்துவிட்டான்.

''ஆமாம் முனுசாமி, நீ எப்படி இங்கே?'' வியப்புடன் கேட்டுவிட்டு சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு—அதிலிருந்த பர்சைத் திறந்தான் சுரேந்திரன்.

''அதெல்லாம் வேண்டாம். இப்போ நான் ஒரு டூரிஸ்ட் டாக்சி கம்பெனியிலே டிரைவரா சேர்ந்துட்டேன்



நம்ப பக்கத்து டவுனில் மளிகைக் கடை சுப்ரமணி இருக்கார் பாருங்க. அவர் மகன் ஒரு டூரிஸ்ட் டாக்ஸி கம்பெனி நடத்தறார்–பத்து டாக்ஸி ஓடுது. நான் ஏற்கனவே வண்டி யோட்டத் தெரிஞ்சவன், சரியான பிழைப்புக் கிடைக்காம பெட்டிக்கடை வச்சுக்கிட்டு திண்டாடிட்டிருந்தேன். இப்போ நல்ல சம்பளம்-பேட்டா, எல்லாத்தோட உங்க தயவிலே நல்லா இருக்கேன்.''

''இந்தா வா சிக்க...'

''வேண்டாங்க நம்ப ஊர் பெரியதனக்காரர் மகன் நீங்க. ஐயா அந்த காலத்திலே எத்தனையோ உதவியிருக்கார்'' என்று அவன் கொடுத்த பணத்தை வாங்க மறுத்தான்.

''சரி. அப்படின்னா வா... எதிரே தெரிகிற ஓட்டலில் கொஞ்சம் இரண்டு பேரும் பல் துலக்கிட்டு காப்பி பலகாரம் சாப்பிடுவோம்'' தெட்டித் தள்ளிக்கொண்டு சென்றான் சுரேந்திரன்.

பெரியவீட்டுப் பிள்ளைக்கு சமமாக உட்கார்ந்து காப்பியும், இட்டிலியும் சாப்பிடுவதை முனுசாமி ஒரு பெரும் பேராகக் கருதி மகிழ்ந்து போனான்.

''ஆமாம்! நீங்க செல்லம்மாளைப் பார்க்கத்தானே கிளம்பி வந்திருக்கீங்க'' கேட்டான் அவன் ஆவலுடன்.

ஊரில் யார் வீட்டிலும் எது நடந்தாலும் பக்கத்து டவுன்வரை சென்று நொடிப் பொழுதில் பரவி விடுவது வழக்கம்.

செல்லம்மாளுக்கு உடம்புக்கு சுகமில்லாத விஷயம் ஊரே தெரிந்து விட்டிருக்கிறது. ''ஆமாம்'' என்று தலையை ஆட்டினான் சுரேந்திரன்.

''நல்லவேளை. வந்திருக்கீங்க... இன்னும் இரண்டு நாள் போனா ரொம்பவே உடல்நிலை கேவலமாகி விட்டிருக்கும்.''

"என்ன சொல்றே முனுசாமி"

"நேத்து ஒரு சவாரியை எத்திட்டு திருச்சிக்கு வர வேண்டியிருந்தது. செல்லம்மா நமக்கு தெரிஞ்சவங்களாச் சேன்னு போய் பார்த்துட்டு வரப் போனேன். நீங்ககூட அடையாளம் காண முடியாது. எலும்பும் தோலுமா மூச்சு தடுமாறிக்கிட்டு ரொம்ப ஆபத்தான நிலையில் இருக்காங்க."

சுரேந்திரன் மனம் துணுக்குற்றான்.

"டாக்டர் யாரையும் கூப்பிட்டு பார்க்கலையா."

"அது அனாதைக் கிழவி. யாரைக் கூப்பிட்டு, என்ன உதவி கேட்கும்?" குற்ற உணர்வு மனதைப் பிராண்டியது.

தட்டிலிருந்த இட்லித் துண்டம் தொண்டைக்குள் இறங்க மறுத்தது. அவனது பெற்றோர்கள் ஏழையான செல்லம்மாளையும் வாய்பேச முடியாத அவளது ஊமை மகளையும் தங்கள் சுயநலத்திற்குப் பலி கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பாவத்தின் சுமை அவனையும் சேர்ந்தது. கடந்த ஒரு வருஷ காலமாக அவன் கிராமத்துப் பக்கமே போகவில்லை.

காரணம் பரிமளா. காதலுக்காக கடமையை மறந்து போனது முட்டாள்தனமேயாகும். தன்னையே சாடிக் கொண்டு எழுந்து கைகழுவிக் கொண்டு காப்பி பலகாரத்துக்குண்டான சில்லரையைக் கல்லாப்பெட்டிக் காரரிடம் நீட்டிவிட்டு முனுசாமியிடம் விடைபெற்றுக் கொண்டு வேகமாகக் கிளம்பினான்.

முப்பது கிலோ மீட்டர் தொலைவிலிருந்த நத்தம் பட்டியை அவன் அடையும்முன் பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டது.

கார் ஒன்று தெருவுக்குள் நுழைவதைக் கண்டதும் ஆவலுடன் ஓடி வந்தனர் தெருப்பிள்ளைகள்.



"பெரிய தனக்காரர் வீட்டு சின்ன ஐயா வந்திருக்கார் வாங்கடா" என்று ஒரே கூச்சல். சிலநொடிகளில் காரைப் பல சிறுவர்கள் சூழ்ந்து கொண்டு ஆரவாரித்து ஆர்ப்பரித்தனர்.

ஒருவழியாகப் பழக்கூடை, பிஸ்கட் பொட்டலங்களுடன் காரினின்று இறங்கி சிறுவர் கூட்டத்தில் நீந்தி வாயிற் கதவைத் தட்டினான். எதிர்வீட்டிக்காரிதான் கதவைத் திறந்தாள்.

"வாங்க சின்னய்யா. நல்ல சமயத்துக்கு வந்தீங்க" என்று கூறிவிட்டு ஒதுங்கிக்கொண்டாள்.

உயரத் தூக்கி வைத்து, ஜன்னலை அமைத்துக் கட்டப் பட்ட பழங்கால வீடு. விளக்கைப் போடாமலே காலை வெளிச்சம் பளிச்சென்று வீட்டை நிறைத்துக் கொண்டு விட்டிருந்தது.

கூடத்து சுவற்றில் பெரியதாக்கி மாட்டப்பட்டிருந்த அப்பா கனகதுரை படத்தின் அருகே கயிற்றுக்கட்டிலில் கிடந்த முகம் ஊதிப் போன பெண் உருவத்தைக் கண்டு அதிர்ந்து போனான் அவன்.

எப்பொழுதும் பள பளவென்றிருக்கும் சிமெண்ட் தரையும் முகம் தெரிய மின்னும், ஊஞ்சல்பலகையுமாக பரிசுத்தமாக இருக்கும் அவர்கள் வீட்டில் காலடி வைத்த இடமெல்லாம் நரநரவென்று பாதத்தில் ஒட்டுமளவு தூசியும் மாவைகளாக ஒட்டடையும் குவிந்து கிடந்தன.

பலநாட்கள் செல்லம்மாள் எழுந்து நடக்கவே முடியாத நோயாளியாகி விட்டதால் வீடு அலங்கோலமாகி விட்டதைப் புரிந்து கொண்டான்.

"அம்மா. உடம்பு எப்படி இருக்கு?" கேட்டபடி கையிலிருந்த சாமான்களை ஊஞ்சல் பலகைமீது வைத்து

விட்டு கட்டிலின் விளிம்பில் வந்து உட்கார்ந்தான். செல்லம்மாள் சிரமத்துடன் முகத்தைத் திருப்பி அவனைப் பார்த்தாள்.

"வந்துட்டீங்களா சின்னய்யா. உசிரு போகிறதுக்குள்ளே உங்களைப் பார்க்கணும்னு துடிச்சுக் கிட்டிருந்தேன்" மெல்லிய குரலில் திணறினாள்.

கண்களினின்று தாரையாக வழிந்த கண்ணீர் அவன் மனதை வேதனைசெய்ய சட்டென்று தன் சட்டைப் பையிலிருந்த கைகுட்டையை எடுத்து அவள் கண்ணீரைத் துடைத்தான்.

"கவலைப்படாதீங்கம்மா! இனி உங்களையும் வீட்டையும் நான் கவனிச்சுக்கிறேன்!" ஆறுதல் சொன்னான்.

"வந்த சில நிமிஷங்களிலேயே அவன் செயல்படத் தொடங்கினான். எதிர் வீட்டுக்காரியின் உதவி கொண்டு இரண்டு கிராமத்துப் பெண்களையும் இரண்டு ஆண்களையும் வரவழைத்து முதலில் வீட்டை சுத்தப்படுத்தினான்.

கூடத்து அறையில் உதவாது, தூசியைச் சுமந்து கொண்டு பழைய ஆடை, தட்டுமுட்டு சாமான்களுடன் கிடந்த பெரிய கட்டிலைத் தூக்கி வந்து சுத்தப்படுத்தி பத்திரமாக ஒரு பெரிய மரப்பெட்டிக்குள் அடைத்து வைத்திருந்த தன் மெத்தை, தலையணை, போர்வை படுக்கை விரிப்பு இவைகளை எடுத்துப் போட்டு...முதலில் கூடத்தில் சுத்தமான படுக்கையைத் தயாரித்தான்.

ஆட்கள் உதவியுடன் செல்லம்மாளை மெல்ல அந்தப் படுக்கை மீது புரட்டிப் படுக்கப் போட்டான். கிராமத்தில் அவர்களது குடும்ப வைத்தியரான கந்தசாமியை வரவழைத்து செல்லம்மாளுக்கு சிகிச்சை தரச் செய்தான்

வைத்தியர் நீண்டநேரம் சோதித்தார் பிறகு தலையை ஆட்டினார். "மிஸ்டர்... சுரேந்திரன் ஏற்கனவே இந்தம்மாளுக்கு ரத்த அழுத்தம் உண்டு. இரண்டு தடவை



நான் சோதித்து மருந்து தந்திருக்கிறேன். உடம்பை சரியா கவனிச்சுக் கொள்ளலை. மேலும் வயது ஒரு காரணம்-அதிக ரத்த அழுத்தத்தில் இதயம் லேசாக வீங்கி கால்களிலும் வயிற்றிலும் நீர் கோத்துக் கொண்டு, நுரையீரல் கெட்டு, கிட்னியும் பழுதடைந்து ரொம்ப மோசமான நிலையில் இருக்காங்க. இவர்களை டவுன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துப்போய் அனுமதித்தாலும் பயன் இல்லை.. பத்திரமா நாள் முழுவதும் கவனிக்க ஒரு நர்ஸ் வையுங்கள். நானும் வந்து பார்த்துக்கிறேன். ஆனால் இருக்கிற நிலைமையைப் பார்த்தால் ஒருவாரம் தாங்குன்னு நான் நினைக்கலை" அடிக்குரலில் அவனுக்கு மட்டும் கேட்குமளவில் பேசி வைத்தியர் கைவிரித்து விட்டார்.

நர்ஸ் ஒருத்தியை அவரே அமர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான் சுரேந்திரன்.

அவள் வந்து பொறுப்பேற்கும் வரை தானே அருகிலிருந்து செல்லம்மாளை கவனித்துக்கொள்வது என்று அவனுள் ஒரு கடமை உணர்வு உந்தியது.

தோட்டக் கிணற்றடியில் தண்ணீரை முகர்ந்து தலையில் ஊற்றிக் கொண்டு விரைவில் குளியலை முடித்துக் கொண்டு உடை மாற்றிக்கொண்டு வந்து, அப்பாவின் பழைய நாற்காலியை கட்டில் அருகே போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

எதிர்வீட்டுக் கிழவிதான் சாப்பிட காப்பியும் ஆப்பமும் அவனுக்கு ஒரு சிறுவனிடம் கொடுத்தனுப்பியிருந்தாள். அத்துடன் செல்லம்மாளுக்கு ஒரு பாத்திரத்தில் புழுங்கலரிசி கஞ்சியும் அனுப்பியிருந்தாள்.

டாக்டர் உடனடியாக [illegible] தந்து விட்டு ஒரு ஊசி போட்டிருந்தார். கொ[illegible] கோஸ் பவுடரை [illegible] பல[illegible] திலே விட்டுவிட்டுப் போயிருந்தார்.

365478

''மிஸ்டர் சுரேந்திரன், நர்ஸ் வந்ததும் கூட வந்து இவர்களுக்கு சிறிதளவு குளுகோஸ், குழல் வழியாக ஏற்ற நான் முயல்கிறேன். நான் கொடுத்திருக்கும் மருந்துகளால் உடல் நீர் வற்றி மூச்சு தாராளமாக விட இயலும். இன்னும் ஒருமணி நேரத்தில் மறுபடி நர்ஸுடன் நான் வருவேன். அதற்குள் நீங்கள் இந்த குளுகோஸ், பவுடரை நீரில் கரைத்து ஸ்பூனால் துளித்துளியாக நோயாளிக்கு ஊட்ட வேண்டும்.''

டாக்டரின் உத்திரவை சிரமேற்கொண்டு அவன் செயல்படத் தொடங்கினான். ''வாயைத் திறங்க அம்மா'' மிகவும் பரிவுடன் அழைத்த அவனை செல்லம்மாள் பரிதாபமாகப் பார்த்தாள்.

''தம்பி, இப்ப மூச்சு கொஞ்சம் தாராளமா வருது. வாசல் கதவை மூடிவிட்டு வாங்க. உங்ககிட்ட முக்கியமா ஒண்ணு சொல்லணும்'' மெல்லிய குரலில் விட்டு விட்டுப் பேசினாள்.

ஒரு வாயளவு அவன் உபசரித்த குளுகோஸ் தண்ணீரை சிரமப்பட்டு விழுங்கினாள்.

கதவைத் தாளிட்டுவிட்டு வந்து அருகில் உட்கார்ந்த அவனது கரத்தை மெல்ல கை நீட்டிப் பிடித்தாள் செல்லம்மாள்.

''தம்பி! என் உயிர் பிரியுமுன்னே உன்கிட்ட ஒரு சங்கதியைச் சொல்லி ஒப்புதல் வாங்கணும்னு ஆசைப்பட்டேன். அந்த கடிதாசியை அதுக்காகத்தான் எழுதினேன்'' கண்களில் நீர் புரண்டது. வார்த்தைகள் தடுமாறின.

''என்னம்மா சொல்லுங்க செய்யறேன்'' உறுதி கொடுத்தான்.

கண்களில் வழிந்த நீரை சிரமத்துடன் அடக்கிக் கொண்டு லேசாக முறுவலிக்க முயன்றாள்.



''உங்க மனசு தங்கம். நீங்க ஒப்புக்குவீங்கன்னு தெரிஞ்சுதான் துணிவா கேட்கிறேன், கடைசிவரை என் மகள் ஊமச்சியை நீங்க வச்சு காப்பாத்தணும். அவளை தனியே தவிக்கவிடமாட்டேன்னு வாக்குத் தந்தீங்கன்னா நிம்மதியா உயிரை விடுவேன்'' வார்த்தை ஒரு விம்மலில் முடிந்தது.

''அம்மா எதுக்கு வருத்தப்படுகிறீங்க. இந்த வேண்டுகோள் தேவையில்லாதது. உங்களை எப்படி கடைசிவரை வச்சு கவனிக்க நான ஓடிவந்திருக்கேனோ, அதைவிட பன்மடங்கு கவனத்தோட சுகுணா அம்மாளை கவனிச்சுப் பேன். சத்தியம். எங்க அப்பா படத்துக்கு முன்னாலே சொல்றேன். என்னை நம்புங்க'' ஆவேசமாகப் பேசினான்.

''நன்றி தம்பி... சீக்கிரம் கல்யாணம் செஞ்சுகிட்டு குழந்தையும் குட்டியுமா நல்லா இருக்கணும்னு வாழ்த்தறேன் நானாவது வாயை வச்சுகிட்டு பொழச்சிப்பேன். அவ ஊமச்சி அதனாலே'' மீண்டும் கண்களில் நீர் கொப்பளித்தது.

அருகில் இருந்த சுத்தமான துவாலையால் அவளது கண்ணீரை மெல்லத் துடைத்து விட்டான். ''நீங்க அதிகம் பேசக்கூடாது. உடம்பு ரொம்பக் கெட்டிருக்கு. இந்தக் கவலையை விட்டுடுங்கோ. ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்பேன். அதற்கு நீங்க உண்மையான பதிலைச் சொல்லணும்.''

பரிதாபமாக அவள் மீண்டும் அவனைப் பார்த்தாள். ''கேள் சொல்றேன்'' கடைசி நேரத்தில் 'பொய்யா சொல்லப் போறேன்'' என்றது பார்வை.

''உங்க மகள் கையிலே பட்டையா சூடு போட்டிருக்கீங்களே என்ன கொடுமை அம்மா! அவங்க அப்படி என்ன தவறு செய்துட்டாங்க.''

''அவள் திருடிட்டாள்'' கூறிவிட்டு முகத்தை சுவற்றின் பக்கம் திருப்பிக்கொண்டாள்.

"உறவினரது வைர நெக்லஸைத் திருடிட்டாங்களா?"

"நகையைத் திருடிட்டா மன்னிச்சுடலாமே. அதை விடப் பெரிய தவறு செய்துட்டா."

"விளக்கமா சொல்லுங்க."

"இந்த வீட்டு எஜமானரை, அவரது ஆசையைத் திருடிவிட்டிருந்தாள்."

தூக்கிவாரிப்போட நிமிர்ந்து உட்கார்ந்தான் சுரேந்திரன்.

"எங்கப்பா உங்க மகள்கிட்ட தவறா நடந்துக்கும்படியாச்சுன்னு சொல்ல வரீங்க" அவனது நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. பரிமளா சொன்ன அந்த வார்த்தைகள் நினைவுக்கு வர உடல் சில்லிட்டுப் போனது.

"வெறுங்கதையல்ல முழு உண்மை. பார்வதி அம்மா சில நாள் நோயாக ஆஸ்பத்திரியில் தங்க நேரிட்டது. நானும் என் ஊமை மகளும் வீட்டோட வேலை பார்த்துக் கொண்டிருந்தோம். ஊமையாலே வெளி வாசலுக்குப் போய் வர முடியாதென்னுட்டு தினமும் அம்மாவுக்கு வேண்டிய பத்திய சாப்பாட்டை தூக்கிட்டு பஸ் ஏறி நான் டவுனுக்கு வர வழக்கம்."

முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான் சுரேந்திரன்.

"என்ன நடந்ததோ, எப்படி நடந்ததோ சின்ன வயதில் பேசமுடியாட்டியும் என் மகள் ரொம்ப அழகா, கொல்லையிலிருந்து பிடுங்கி எடுத்த கீரைத்தண்டு போல தள தளன்னு இருப்பா. வற்புறுத்தவோ, பலவந்தமோ, எப்படி நடந்ததோ மூன்று மாதத்திற்குப் பின்தான் எனக்கே தெரிஞ்சது."



கீழ் உதட்டை அழுத்திக் கடித்தபடி அப்பாவின் போட்டோவை கோபத்துடன் பார்த்தான் மகன்.

"வாந்தி எடுத்துக்கொண்டிருந்தவளை வைத்தியர் கிட்டே கூட்டிப் போனேன். நம்ப கந்தசாமி அய்யாவுக்குத் தெரியும். மூணு மாசம் கர்ப்பம்னு சொன்னார். அடிச்சேன் உதைச்சேன், பே! பே! என்று குரல் கொடுத்து அழுதாள். எனக்கே கோபம் தாங்கலை. இரும்புக் கரண்டியை அடுப்பில் போட்டு பழுக்கக் காய்ச்சி கைமேலே சூடு போட்டேன். அலறிக்கொண்டு ஓடிச்சென்று உன் அப்பாவின் அங்கவஸ்திரத்தை எடுத்து வந்து அடையாளம் காட்டி விட்டு அழுதாள்.

கண்களில் புரண்ட கண்ணீரை சமாளித்தான் சுரேந்திரன். அவனுக்குப் புரிந்துவிட்டது. ஆனாலும் துளி சந்தேகம்.

"அந்தக் குழந்தையின் கதி என்னாச்சும்மா!... அதையும் சொல்லி முடிச்சுடுங்கோ."

தடுமாற்றத்துடன் தன் கையை நீட்டி... செல்லம்மாள் அவனது கரத்தை மெல்லப் பிடித்துக் கொண்டாள். கண்களில் நீர் வழியத் திக்கினாள்.

"சொல்லிடறேன்-இனி மறைப்பதில் லாபமில்லை... அவள் சுமந்த குழந்தையை தன்னுடையதாக எடுத்துக் கொண்டு விட்டாங்க பார்வதி அம்மா. ஏன்னா அவங்க அதேசமயம் கர்ப்பிணியாக இருந்தாங்க இந்த கர்ப்பத்தில் பிறந்த பெண்குழந்தை செத்துப்பிறந்தது.

"தன் கணவன் செய்த மோசடி தெரிந்ததும், நீ பிறந்ததும் உன்னை தன்னுடையதாக்கிக் கொண்டு உன் தாயை-வீட்டு வேலைக்கு உதவ வீட்டோட வச்சுக்கிட்டாங்க. நான் ஏழை-மகளின் அவமானத்தை எப்படி வெளியே சொல்வேன்-வாயை மூடிக்கொண்டேன்.

''சுகுணா ஊமை... அவளால் எதுவும் பேசமுடியாது. என் மகள் பத்து மாசம் சுமந்து உங்களைப் பெத்தாள். ஒரு நாள் கூட நான் உங்களை என் பேரன்னு ஆசையோடு அள்ளி முத்தமிட்டதில்லை. தம்பி... கொஞ்சம் கீழே குனியுங்கோ!'' என்று தடுமாறினாள் கிழவி. தன் இரு கரங்களையும் போட்டு அவனைத் தழுவிக்கொண்டு நெற்றுமீது தன் உதடுகளைப் பதித்தாள் கிழவி.

மறுகணம் அவளது கரங்கள் துவண்டு தானே கீழே விழுந்தன. திடுக்கிட்டு அவளது முகத்தைத் தொட்டுப் பார்த்தான். நாசியில் கைவைத்துப் பார்த்தான். ஊமையாக இருந்த அந்த உண்மையைச் சொல்லிவிட்ட மகிழ்ச்சியில் செல்லம்மாளின் உயிர் அந்த உடலைவிட்டு நிம்மதியை நாடிப் பறந்தோடிப் பல விநாடிகளாகி விட்டிருந்தது.

அதற்குப்பின் அவளுக்கு வைத்தியர் கவனிப்பும் நர்ஸின் பணிவிடையும் தேவையிருக்கவில்லை. பல்வேறு உணர்ச்சி போராட்டத்திலே குழம்பிக் கொந்தளித்துப்போன சுரேந்திரன் அவள் இறந்து போன விஷயத்தை மட்டும் பார்வதிக்கு ஒரு தந்தி மூலம் அறிவித்துவிட்டு மற்ற சமக் கடன்களை சிறப்பாகச் செய்து முடித்தான்.

இன்னும் சில நாட்கள் லீவு எடுத்துக்கொண்டு கிராமத்திலே தங்கியிருந்து வீட்டை ஒழுங்குபடுத்தி அவள் இறந்த பதினாறாவது நாள் கிராமத்து மக்களின் நம்பிக்கைப்படி கருமாதி சடங்கை செய்து முடித்து சிவன் கோயிலில் ஒரு விளக்கு போட்டு ஏழைகளுக்கு, அன்னதானம் செய்து முடித்தான்.

இரண்டு வாரங்களுக்கு மேல் கிராமத்தில் தங்கிவிட்டு ஊர்வந்த மகன் முகம் பேய் அறைந்தது போலிருந்ததைக் கண்டு பார்வதி பயந்து போனாள்.

''சுகுணா அம்மா எங்கே'' வந்ததும் வராததுமாக அவன் கேட்டது அவளுக்கு எரிச்சலாகவும் திகிலாகவும் இருந்தது.



''சாகும்போது அந்தப் படுபாவி ஏதாவது உளறித் தொலைச்சுட்டாளா?''

''பின்னாலிருக்கும் அறையிலே காய்ச்சலோட படுத்திருக்கா!''

''டாக்டர் வச்சு பார்த்தீங்களா?''

''ஒரு புளு காய்ச்சல். அதுக்கு எதுக்கு டாக்டர். ஒரு தலைவலி மாத்திரை கொடுத்துப் படுத்துக்கிடன்னு சொன்னேன். வீட்டு வேலை செஞ்சு இடுப்பு முறிஞ்சு போச்சு.''

பாதணிகளைக் கூடக் கழற்றாது பயண உடைகளைக் கூட கழற்றாது உள்ளே டக்டக்கென்று நடந்த சுரேந்திரன் பின் அறைக்குள் சென்றான். படுக்கையிலே முனகிக் கொண்டு கிடந்த சுகுணாவை அப்படியே ஆட்டுக் குட்டியைப் போல வாரி எடுத்துக் கொண்டு தன் அறைப் பக்கம் போனான்.

''இதெல்லாம் என்னடாப்பா சுரேன்! அவளை எதுக்குத் தூக்கிட்டுப் போறே.''

''என் அறை கட்டில் மேலே படுக்க வச்சு, டாக்டரை கூப்பிட்டு கவனிக்கச் சொல்லப் போறேன்.''

''திமிர்று உனக்கு என்ன வந்துவிட்டது?''

''என்னைப் பத்து மாசம் சுமந்தவளுக்கு ஒரு படுக்கை கூட தரமுடியாத பாவஜென்மம் நான் இல்லை அம்மா. என்கிட்ட ஒரு பெரிய விஷயத்தை நீங்க மறைச்சீங்க. என்னைப் பெத்தவ ஊமைங்கிற காரணத்தால் உங்களால் அதை இத்தனை காலம் மறைக்க முடிஞ்சது! ஆனால் உண்மை ஊமையல்ல அம்மா... அது ஒருநாள் இல்லாட்டா ஒரு நாள் வாயைத் திறந்து பேசிடும்!''

''சுரேன்!'' அலறிக்கொண்டு சுருண்டு கீழேவிழுந்தாள் பார்வதி. டாக்டர் வந்தபோது, அவன் அறைக்குள்ளிருந்த

கருணாவையும் தன் அறைக் கட்டிலில் கிடந்த பார்வதியையும் ஒருங்கே கவனிக்க நேரிட்டது...

''என்ன நடந்தது உங்கம்மாவுக்கு மயக்கம் வந்து படுத்துட்டாங்க.''

டாக்டர் கேட்டபோது, அவன் லேசான முறுவலுடன் சொன்னான்.

''கருணா அம்மாவுக்கு காய்ச்சல் அதிகமானதை அம்மாவால தாங்க முடியலை-பயந்துட்டாங்க. தலை சுத்துதுன்னு படுத்துட்டாங்க' என்றான்.

இருவரையும் கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண்டான். இரண்டே நாளில் எழுந்து உட்காரத் தெம்பு கூடிவிட்ட பார்வதி சுரேந்திரன் தன் கையால் கருணாவுக்கு மருந்து கொடுப்பதையும், கஞ்சி கொடுத்து உபசரிப்பதையும் கண்டாள்

நிலைமை மாறிவிட்டதை எண்ணி உள்ளூர திகிலடைந்து போனாள். தட்டிக் கேட்க தைரியமின்றி இப்போது அவள் ஊமையாகிப் போனாள்.

சில தினங்களுக்குப்-பின் கருணா பூரண குணமடைந்து எழுந்து விட்டதும், சுரேந்திரன் அவளை அடுப்பருகே வேலைக்குப் போக அனுமதிக்கவில்லை. வீட்டு வேலைகளைக் கவனித்து சமைத்து வைத்து விட்டுப் போக ஒரு நடுத்தர வயதான அம்மாவை வேலைக்கு அமர்த்தியிருந்தான்.

''நீங்க ரெண்டு பேரும் வீட்டை மேற்பார்வையிட்டு கவனிச்சுக் கொண்டா போதும், இவங்க-கடினமான வேலை செய்ய போகிறதில்லை. நான் அனுமதிக்க மாட்டேன்'' கண்டிப்பாகக் கூறிவிட்டான். பார்வதி வாயைத் திறக்கவில்லை.



அன்று மாலை வீடு திரும்பிய சுரேந்திரன், தன்னுடன் கூட ஒரு இளம்பெண்ணை அழைத்துக்கொண்டு வருவதை பார்வதி கவனித்தாள்!

''அம்மா!'' என்று அவன் குரல் கொடுத்ததும் தயக்கத்துடன் உள்ளிருந்து வெளியே வந்தாள்.

ஆர்ப்பாட்டங்கள் செய்து.. அந்தக் கடந்தகால சங்கதிக்காக அவன் தன்னிடம் வெகுவாக சண்டை போடப் போகிறான்-ஒருசமயம் தன்னை வீட்டிலிருந்து கிராமத்துக்கு அனுப்பி விடக் கூடும் என்ற அச்சத்தில வெகுவாக ஆடிப் போயிருந்தாள் பார்வதி. மகன் முன் துணிவுடன் வரக்கூட அவளுக்கு இப்போது மிகவும் பயமாக இருந்தது.

''என் தாயையும் கூப்பிடுங்கோ-ரெண்டு பேரும் நில்லுங்க,'' என்றான்.

சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்த கருணாவை, ஜாடை காட்டி முன்னறைக்குள் அழைத்தாள் பார்வதி.

''பரிமளா நீ வெகு புத்திசாலி. உன்னால் என் உண்மை வரலாற்றையே கண்டுகொள்ள முடிந்தது. நீ சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. இவங்க என்னைப் பெத்தெடுத்த தாய் ஊமையாக இருக்காங்க. இவங்க என்னை வளர்த்த தாய்...நல்லா யோசித்து முடிவு எடு. உலகத்தின் பார்வையில் நான் பார்வதியம்மாள் பிள்ளை-உண்மையில் சமுதாய வேலிக்கு அப்பால் பிறந்த, ஒரு ஊமைப் பெண்ணின் குழந்தை. உனக்கு விருப்பம் இருந்தால் என்னைக் கட்டிக்க துணிச்சல் இருந்தால் இவங்க ரெண்டு பேர் காலிலும் விழுந்து ஆசி பெற்றுக்கொள்...'' பாதி சிரிப்பும் பாதி உண்மையாகவும் சொன்னான்.

''பத்து மாமியார்களை என்னால் சமாளிக்கமுடியும்-அத்தோட இந்தப் பொல்லாத பிள்ளையையும் சமாளிக்க முடியும். எல்லா விவரத்தையும் சொல்லித்தானே அழைச்

சுட்டு வந்திங்க. எனக்கு நீங்க முக்கியம். உங்கள் பின்னணி...முக்கியமல்ல...சுரேன், ஐ லவ் யூ... அத்தை கனே, நமஸ்கரிக்கிறேன்'' கீழே விழுந்து அவன் கும்பிட்டான்.

பார்வதி-அவளைத் தூக்கி நிறுத்தித் தன் மார்புடன் தழுவிக் கொண்டாள்.

''என்னை மன்னிச்சுட்ட உங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப நன்றி'' என்று கூறிவிட்டு ''சுகுணா'' என்று அவளைக் கட்டிக்கொண்டு விம்மினான்.

''தம்பி சுரேன்! நீ சொன்னது சரிதான் உண்மை ஊனமையல்ல. நாமதான் சில சமயம் ஊனமையாகிறோம்'' கண்களைத் துடைத்துக் கொண்டான். ஜாடையில் ஏதோ சொல்ல, சுகுணா மகிழ்ச்சியுடன், எல்லோரும் சாப்பிடத் தின்பண்டங்களைக் கொண்டு வந்து மேஜையில் நிரப்ப, நால்வரும் அமர்ந்து சாப்பிட்டபடி சிரித்தபோது வீட்டில் கல்யாணக் களை கட்டிவிட்டது.

* * *

20242
365481/